(*c*) pocket money (monthly) to ex-services T.B. and Leprosy patients in approved Sanatoria in the State and transport charges to visit their homes once a year ;

(*d*) lump sum free grants to disabled ex-servicemen to do some small business ; and

(*e*) short term loans to employed ex-servicemen, who are in financial distress.

(3) *State Government*—

(*a*) Educational concessions to children and dependants orf ex-servicemen ; and

(*b*) Free grants and loans to Land Colonisation, Motor Transport Societies, etc., for ex-servicemen.

As regards quantum of assistance given up to 1958, district-wise and the share of Centre and State Governments, the work involved in collecting the statistics will not be commensurate with the public purpose served.

Housing schemes

38 *Q*.—Sri A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் கிராம வீடு கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கியத் தொகை எவ்வளவு ?

(ஆ) அதில் செலவானது எவ்வளவு ?

(இ) 1958-ல் நகர வீடு கட்டும் சொஸைட்டிகளுக்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(ஈ) அதில் இதுவரை செலவானது எவ்வளவு ?

(உ) இதன் மூலம் எத்தனை வீடுகளுக்கு கடனுதவி அளிக்கப்பட்டிருக்கிறது ?

(ஊ) இந்தத் தொகை ஜில்லாவாரியாக ஒவ்வொன்றிலும் எவ்வளவு தொகை பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

A.—(அ) Rs. 3·00 lakhs (State Rural Housing Scheme).

(ஆ) Rs. 2,99,200.

(இ) Rs. 39,00,000 (Rs. 19,00,000 under Low Income Group Housing Scheme and Rs. 20,00,000 under State Urban Housing Scheme).

(ஈ) Rs. 38,99,980 (Rs. 18,99,980 under Low Income Group Housing Scheme and Rs. 20,00,000 under State Urban Housing Scheme).

(உ) 524 (64 under State Rural Housing Scheme and 460 under Low Income Group Housing and State Urban Housing Schemes).

(ஊ) Particulars are furnished in the appended statement *.

* Printed as Appendix XVI on page 512 infra.

11th September 1959]

Training for the fishermen

39 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் ஸ்தல-ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு எத்தகைய பயிற்சி தூத்துக்குடியில் அளிக்கப் படுகிறது ?

(ஆ) அப்பயிற்சி பெறுவோருக்கு வேண்டிய தகுதி என்ன ?

(இ) பயிற்சி பெறவேண்டிய காலம் எவ்வளவு ?

(ஈ) உபகாரச் சம்பளம் எவ்வளவு ?

(உ) ஜில்லாவாரியாக எத்தனை பேர் இங்கே பயிற்சி பெறுகிறார்கள் ?

(ஊ) பயிற்சிக்குப்பின் அரசாங்கத்தில் இவர்களுக்கு எவ்வளவு சம்பளத்தில் என்ன வேலை அளிக்கப்படுகிறது ?

A.—(அ) Training in modern methods of fishing, Elementary Navigation and running and maintenance of Marine Diesel engines up to 60 horse power are the main subjects taught in the Tuticorin Training Centre both in theoretical and practical aspects.

(ஆ) Candidates should be bona fide *fishermen*, having a minimum of five years of sea faring and sea fishing experience with a general standard of literacy up to VI Standard and should be between the years of 18 and 35. However, illiteracy will not be a disqualification and it will not prevent good fishermen from enrolling as trainees.

(இ) The duration of training is six months and 20 fishermen are being trained in each course.

(ஈ) Each trainee is paid a stipend of Rs. 50 per mensem only with adequate food allowance for sea trips at the rate of Rs. 15 per mensem.

(உ) Five candidates from Ramanathapuram district, seven from Tirunelveli district and eight from Kanyakumari district are being trained now in the VI batch of training in this Centre (February to July 1959). A statement showing the candidates trained in the previous batches is also given below :—

Batches. (1)	Madras. (2)	South Arcot. (3)	Tanjore. (4)	Ramanathapuram. (5)	Tirunelveli. (6)	Kanyakumari. (7)	Total. (8)
I Batch	6	..	2	..	6	6	20
II ,, ...	..	2	..	1	13	4	20
III ,, ...	..	1	..	..	12	7	20
IV ,, ...	..	6	2	2	6	4	20
V ,, ...	..	2	2	4	6	6	20
VI ,, ...	..	..	..	5	7	8	20

[11th September 1959

(ஊ) The scheme was started for the expansion and modernization of marine fisheries and the training is given only for creating trained personnel for operating modern mechanized vessels and engines in marine fishing. No guarantee is given for any employment after training. However, most of the trained fishermen are engaged in handling Pablo boats (mechanized) supplied by the Government to the Fishermen Co-operative Societies, etc.

Ghee research stations

40 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் நெய் ஆராய்ச்சிச் சாலைகள் எத்தனை இருக்கின்றன ?

(ஆ) எங்கேயிருக்கின்றன ?

(இ) ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும் நெய் எவ்வளவு ?

(ஈ) ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவென்ன ?

(உ) புதிய நெய் ஆராய்ச்சிச் சாலை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ? எங்கே ? எப்போது ?

A.—(அ) There are no ghee research stations in this State.

(ஆ) to (ஈ) Do not arise.

— (உ) No, Sir.

Pre-extension blocks

41 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ல் எந்தெந்த இடங்களிலே சமுதாய நல திட்டமும் தேசீய நலப்பரப்பு திட்டமும் ஆரம்பிக்கப்படும் ?

(ஆ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள் எத்தனை நல திட்டமும், தேசீய நலப்பரப்புத் திட்டமும் ஆரம்பிக்கப்படும் ?

A.—(அ) Sir, thirteen Pre-extension Blocks of 1960–61 (April series) have been taken up in April 1959. The details of the blocks taken up in April 1959 are as follow :—

Name of district.	Name of the block.
North Arcot	1 Chengam
	2 Nemili.
South Arcot	3 Porto Novo.
Chingleput	4 Gummudipundi.
Coimbatore	5 Ammapet.
Kanyakumari	6 Thovala.
Madurai	7 Kodaikanal.
Ramanathapuram	8 Ramanathapuram.
Salem	9 Paramathi.
	10 Tiruchengode.
Tanjore	11 Budalur.
Tiruchirappalli	12 Manikandam.
Tirunelveli	13 Udankudi.

Another thirteen Pre-extension Blocks of 1960–61 (October series) will be taken up in October 1959 as soon as allotment is made by the Government of India.

11th September 1959]

(ஆ) There will be 211 blocks on 31st March 1961. The exact number of blocks in each category will be known after the scheme progresses and the lives of Community Development or Stage I Blocks are extended or reverted after their projected period of operation. As at present known, their numbers will be as given below :—

Community Development—	
Stage I	126
Stage II	85
Total ...	211

Artificial Insemination Centres

42 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1959–60-ல் செயற்கை கருமுறை நிலயங்கள் எங்கெங்கே ஏற்படுத்தப்படும் ?

A.—The artificial insemination centres sanctioned for establishment during 1959–60 are located at—

(1) Udumalpet, Coimbatore district.

(2) Kallakurichi, South Arcot district.

(3) Karur, Tiruchirappalli district.

(4) Periakulam, Madurai district.

(5) Uthukuli, Coimbatore district.

(6) Chennimalai, Coimbatore district.

(7) Valavadi, Coimbatore district.

(8) Denkanikottah, Salem district.

Teak plantations along canal banks

43 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ல் ஒவ்வொரு ஜில்லாவிலும் எங்கெங்கே இருக்கும் வாய்க்கால் கரையோரங்களில் தேக்கு மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றன ?

(ஆ) 1959–60-ல் இத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

A.—(அ) During 1959–60, it is proposed to plant 550 acres in Tanjore district and 250 acres in Tiruchirappalli district with teak and other suitable hardwood species along the banks of Cauvery.

(ஆ) An amount of Rs. 2,47,000 has been sanctioned for the works to be carried out during 1959–60 (Rs. 1,81,000 for works and Rs. 66,000 for establishment).

[11th September 1959

Sale of fish at Bhavanisagar

44 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்பத்தூர் ஜில்லாவிலிருக்கும் பவானிசாகர் அணைக்கட்டு நீர்த்தேக்கத்தில் 1958, 1959-ம் வருடங்களில் ஜூன் மாதம் கடைசி வரைக்கும் எத்தனை பவுண்டு மதிப்புள்ள மீன்கள் விற்பனைக்காகப் பிடிக்கப்பட்டன ?

(ஆ) எத்தனை பவுண்டு மதிப்புள்ள மீன்கள் எத்தனை எத்தனை ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன ?

(இ) இம்மீன்கள் விற்பனை செய்யப்படுவதற்காக எந்தெந்த விற்பனை ஸ்தலங்களுக்கு அனுப்பப்படுகின்றன ?

(ஈ) விற்பனை ஸ்தலங்களுக்கு இம்மீன்களை அனுப்புவதற்காக வாகன வசதிகள் சர்க்காரால் சப்ளை செய்யப்பட்டிருப்பின் விவரங்கள் யாவை ?

A.—(அ) The quantity fished during 1958 and in 1959 (up to 30th June 1959) was about 29,228 lb. and 41,978 lb. respectively.

(ஆ) Out of the catches in 1958, about 29,127 lb. were sold for Rs. 8,207·60 naiya Paise and the balance utilised for research puposes.

In 1959, a quantity of about 41,493 lb. was sold for Rs. 11,878·07 naiya Paise. Out of the balance , 58 lb. were utilised for research purposes and another quantity of 427 lb. had to be cured for want of demand on certain days.

(இ) The fishes caught at Bhavanisagar reservoir are sold locally and to some authorised fish agents at Mettupalayam, Sirumugai, Gobichettipalayam. The fishes that are left over are taken for sale to outside places, like Coimbatore, Tiruppur, Puliampatti, Sathiamangalam, Annur, Karamadai, Tudyalur, Avinashi, Perianaickenpalayam, Coonoor, Aravankadu, Ootacamund, etc.

(ஈ) The fish agents themselves transport the fishes by bus packed in leak-proof and closed tins and occasionally when some of the catches remain surplus to local demand, they are transported to other centres by the departmental motor vehicles.

Pumpsets

45 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of applications received by Government taluk-war, in the South Arcot district in 1957–58 for the installation of pumpsets in wells used for agricultural purposes ; and

(*b*) the number of pumpsets installed, taluk-war ?

A.—(*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix XVII at page 513 infra.

11th September 1959]

New Kattalai High Level Channel.

46 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. Minister for Public Works be pleased to State—

(*a*) the total area expected to be brought under irrigation additionally by the New Kattalai High Level channel in Tiruverambur firka of Tiruchirappalli taluk ;

(*b*) whether there is any proposal to extend the channel to Pattukkottai and Alangudi taluk ; and

(*c*) the total area to be irrigated by this channel both in Tiruchirappalli and Tanjore districts, taluk-war ?

A.—(*a*) 640·55 acres.

(*b*) Yes. The proposal is under investigation.

(*c*) Tiruchirappalli taluk—16,141 acres.
Tanjore taluk—4,481 acres.

Wells sunk under the Ground Water Exploration project

47 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Home be pleased to state: How many wells are proposed to be sunk under the Second Ground Water Exploration Project of the Government of India and what are the districts in which this State has suggested that such wells may be sunk ?

A.—The number of wells proposed to be sunk in this State by the exploratory Tube wells Organisation of the Government of India under the Second project is not known. While communicating our willingness to participate in the proposed second project, it has been indicated to them that wells may be sunk in all the districts except Madras, North Arcot, the Nilgiris and Coimbatore. The only criteria for the selection of the areas would be that the data already available should tend to show that tubewells in the area are likely to yield a reasonable quantity of water such as this Government may consider economical for the purpose and areas in which the exploration is proposed.

Local Development Works

48 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1959–60-ல் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்துக்காக பட்ஜெட் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

A.—Anticipating a Central grant of Rs. 25 lakhs for Local Development works for 1959–60, a provision of Rs. 35 lakhs was made in the State Budget for the year 1959–60. The Planning Commission, however, subsequently communicated an allotment of Rs. 53·53 lakhs to this State on the basis of performance. They

[11th September 1959

however imposed a condition that during 1959–60, this sum could be spent only on Rural Water Supply Works. The allotment has been distributed to the various districts as shown in Annexure A. [a]

The Planning Commission have also agreed to bear the liabilities on account of the works standing incomplete on 1st April 1959. The requirements for incomplete works were ascertained from the Collectors and funds allotted as shown in Annexure B .

Provincialization of Local Fund Hospitals

49 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1959–60 நிதி வருஷத்தில் எந்தெந்த தாலுகா ஆஸ்பத்திரிகளை சர்க்கார் நேரடியாக எடுத்து நடத்த திட்டமிட்டிருக்கின்றனர்?

A.—The Local Fund Hospital at Nannilam and the Local Fund Dispensaries at Papanasam, Orathanad and Thiruvadanai.

After-care Homes for Women

50 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலே After-care Homes for Women discharged from non-correctional institutions களுக்கு 1959–60-ம் வருடம் வரை ஒவ்வொரு வருடத்துக்கும் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து கோயமுத்தூர் ஜில்லாவிலே எந்தெந்த இடங்களிலே என்னென்ன வேலைகள் நடைபெற்றன ? நடைபெறத் திட்டமிடப்பட்டிருக்கின்றன ?

A.—The answer is in the negative.

Houses for weavers

51 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1958–59-ல் எந்தெந்த இடங்களிலே எத்தனை வீடுகள் நெசவாளர்களுக்காக கட்டப்பட்டன ?

A.—The particulars are furnished in the following statement :—

Statement.

	Name of the district.	Name of the place.	Number of houses to be built under the schemes sanctioned.	Number of houses completed during 1958-59.
	(1)	(2)	(3)	(4)
1	Salem ..	Ammapet	200	44
2	Do. ..	Dharmapuri ..	100	40
3	Do. ..	Tiruchengode ..	100	36

[a] Printed as Appendix XVIII on page 514 infra

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

11th September 1959]

	Name of the district.	Name of the place.	Number of houses to be built under the schemes sanctioned.	Number of houses completed during 1958–59.
	(1)	(2)	(3)	(4)
4	Ramanathapuram.	Aruppukkottai ..	200	..
5	Do.	Srivilliputhur ..	100	60
6	Tirunelveli ..	Kallidaikurichi ..	100	50
7	Coimbatore ..	Coimbatore ..	68	44
8	Do. ..	Thingalur	50	..
9	Do. ..	Tiruppur	100	..
10	Do. ..	Chennimalai. ..	100	..
11	Madras ..	Saidapet ..	60	28
12	Tiruchirappalli.	Woraiyur	40	..
13	Madurai ..	Madurai	150	..
		Total	1,368	302

N.B.—The number of houses completed up to end of July 1959 is 6[illegible]0

Housing scheme for fishermen

52 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மீனவர்களுக்கு வீடுகள் கட்ட ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து எந்தெந்த இடங்களில் எத்தனை வீடுகள் கட்டப்பட திட்டமிடப்பட்டிருக்கின்றன?

A.—Under the existing sanction it is proposed to take up the construction of 60 houses at a total cost of Rs. 51,000 during the current financial year at the following places :—

	District.	*Place.*	*Number of houses.*
1	Tanjore	Adiramapattinam ..	20
2	Tirunelveli	1 Amalinagar ..	10
		2 Tharuvaikulam ..	10
3	Ramanathapuram	3 Mullimunai ..	10
4	South Arcot	4 Killai	10
		Total ..	60

The question of sanctioning another sum of Rs. 51,000 for taking up the construction of 60 more houses for fishermen during 1959–60 and the places where they should be constructed are under consideration.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[11th September 1959

Arrears of land revenue in Ramanathapuram District

53 *Q.*—Sri R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer to question 880 given on 5th November 1958—

(*a*) the arrears of land revenue in Ramanathapuram district at the end of the year (31st December) in each of the years from 1951–56;

(*b*) whether any land and what extent has been purchased by the Government for arrears of land revenue in that district in the years 1951 to 1957;

(*c*) whether any third party and what extent has been purchased in sales for arrears of land revenue in that district in the years referred to in clause (*b*).

A.—(*a*) Particulars of arrears of land revenue at the end of each year are not fully available for the district for the years 1951–54. The arrears at the end of the years 1955 and 1956 were Rs. 1,08,24,329 and 1,05,56,433 respectively.

(*b*) Yes 171·40 acres of land, a thatched house and a vacant site measuring 45′ × 36′ were bought in by the Government.

(*c*) Yes 5·46 acres.

Livestock Farm, Orthanad

54 *Q.*—Sri R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the details and the various cost of the several buildings constructed in the Livestock Farm, Orthanad;

(*b*) to what use are the buildings put; and

(*c*) whether the Central Government gave any and what aid for the construction of these buildings?

A.—A statement [a] is placed on the table of the House.

Orthanad Cattle Farm

55 *Q.*—Sri R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Home be pleased to state the quantities and amount for which straw and concentrated cattle feed purchased for the cattle farm at Orthanad during 1957 to 1959 (year-war).

A.—A statement [b] is placed on the table of the House.

a Printed as Appendix XIX on page 515 infra.

b Printed as Appendix XX on page 516 infra.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS *RE* BILLS.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the consideration in the Legislative Assembly of the Madras Buildings (Lease and Rent Control) Bill, 1959. 9–30 a.m.

I have also to announce that the following Bills have been passed by the Legislative Council without any amendment :—

1. The Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1959.
2. The Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1959.
3. The Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1959.
4. The Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1959.
5. The Indian Partnership (Madras Amendment) Bill, 1959.
6. The Madras Borstal Schools (Amendment) Bill, 1959.
7. The Madras Khadi and Village Industries Board Bill, 1959.
8. The Madras Civil Courts (Amendment) Bill, 1959.

The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1959, has also been passed by the Council without any recommendation.

III.—CALLING ATTENTION TO THE PLIGHT OF TEACHERS IN NON-FEE LEVYING AIDED ELEMENTARY SCHOOLS UNDER MANAGEMENTS.

MR. SPEAKER : Sri P. S. Chinnadurai will call the attention of the Hon. the Minister for Finance to a matter of urgent public importance, viz., the plight of the teachers in non-fee levying aided elementary schools under managements.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சர்க்கார் உதவி பெற்று தனியார் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் நெடுங்காலமாகவே தங்களுக்குரிய சம்பளத்தை அரசாங்கமே நேரடியாக அனுப்பி வைக்கவேண்டுமென்று கோரி வந்தார்கள். அவர்களுடைய நல்ல கோரிக்கையை அரசாங்கம் நல்ல மனதோடு ஏற்றுக்கொண்டு இந்தப் பள்ளி ஆண்டின் துவக்கத்தில் இருந்து அவர்களுக்குரிய சம்பளத்தைத் தாங்களே நேரடியாக அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவ்வாறு அனுப்பக்கூடிய சம்பளம் ஏற்கனவே அவர்களுடைய பதிவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அந்த அளவு இல்லாமல் மிகவும் குறைவாக இருக்கிறதென்று அறிகிறேன். அவர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை. சர்க்கார் குறைவாகச் சம்பளத்தைக் கொடுப்பது உண்மையிலேயே

[Sri P. S. Chinnadurai.] [11th September 1959

சர்க்கார் எந்த எண்ணத்தோடு அவர்களுடைய சம்பளத்தை நேரடியாகக் கொடுக்கக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார்களோ அதற்கு ஏற்றபடி இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். கிட்டத்தட்ட ஆறாயிரம் ஆசிரியர்கள் குறைவான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற கடுமையான புகார் இருந்து கொண்டிருக்கிறது. முன்பு ஆசிரியர்க்குரிய சம்பளத்தைத் தனியார் சரியான அளவுக்குக் கொடுக்காமல் குறைத்துக் கொடுத்தார்கள் என்ற காரணத்தால் அரசாங்கமே இப்பொழுது நேரடியாகக் கொடுக்க முன்வந்திருக்கிறது. இதற்குப் பின்னரும் முன்னரே அவர்கள் பெற்றுவந்த சம்பளம் இப்பொழுதும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது மிக மிக வருந்தக்கூடிய விஷயமாகும். இது ஏதாவது தவறுதலினால் நேர்ந்திருக்குமேயொழிய வேண்டுமென்றே சர்க்கார் குறைத்துக் கொடுக்கிறார்கள் என்று என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. சர்க்கார் இது சம்பந்தமான விஷயங்களைப் பரிசீலனை செய்து இந்தக் குறைகளை நீக்கவேண்டுமென்ற அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கு அனுப்பும் சம்பளத் தொகையிலேயே மணியார்டர் கமிஷனைக் கழித்துக்கொள்ளுவதாக இன்றைக்குப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஜில்லா போர்டு தன் நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிகளில் இவ்வாறு மணியார்டர் மூலமாக அவர்களுடைய சம்பளத்தை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே மணியார்டர் கமிஷனைக் கழிப்பதில்லை. ஆகவே, சர்க்காரே நேரடியாக அந்த ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் கொடுக்கும்போது அந்தச் சலுகையை மறுக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நிலைமையை விளக்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: The following three points have been raised by the hon. Member in his notice :—

(1) Delay in the payment of salaries to teachers.

(2) Deduction of money order commission from the salaries disbursed to teachers, and

(3) Disbursement to elementary school teachers of salaries lower than the actual salaries drawn by them previously according to their service registers.

As the disbursement of salaries to a very large number of elementary school teachers was a gigantic and completely new venture, elaborate administrative arrangements had to be made in consultation with the Accountant-General and the postal authorities and this took some time. I am sorry that on account of this some delay has occurred in the payment of salaries to elementary school teachers. All the arrangements have now been completed and instructions have now been issued to the effect that there should be no delay in the disbursement of salaries hereafter and that the salaries should be sent to the teachers as expeditiously as possible every month.

11th September 1959] [Sri C. Subramaniam]

As regards the money order commission, the liability to Government would be very large if this were not deducted from the salaries of the teachers and were to be met by Government. However Government are considering whether it would be possible to devise alternative arrangement for the disbursement of salaries to teachers, which will involve no loss to the teachers and no large expenditure to Government.

Regarding point 3, Government's orders are that elementary school teachers whose salaries are to be disbursed direct by the department should be paid the salary actually drawn by them before direct payment was introduced or the salary fixed on the Government scale of pay, whichever is less. Thus the salary payable to the teacher on the Government scale of pay, taking his actual service into consideration, has first to be determined. Since this involves the verification of the services of all the teachers to whom direct payment has to be made, it has taken some time for the staff of the Education Department to complete this work. Pending this verification, salaries calculated on the approved scale was disbursed. Instructions have been issued that verification of service particulars should be completed by the end of August and the salary payable by Government calculated. It is, therefore, expected that the salaries calculated on the basis of Government's instructions will be paid from this month onwards and that arrears, if any, due on this basis for June and July will be disbursed along with the pay for August.

IV.—AMENDMENT TO THE MADRAS MONEY LENDERS RULES, 1959.

MR. SPEAKER: The hon. Member Sri K. Sattanatha Karayalar has given notice of an amendment to the rules framed under the Madras Money Lenders Act, 1957. He will move it now.

SRI K. SATTANATHA KARAYALAR: I move—

"That the following amendment be made to the Madras Money Lenders Rules, 1959, issued in G.O. Ms. No. 2823, Industries, Labour and Co-operation, dated 15th July 1959, and published in *Fort St. George Gazette*, dated 29th July 1959, and laid on the table of the House on 1st September 1959:—

AMENDMENT.

In sub-rule 2 of rule 4 of the Madras Money Lenders Rules, 1959, *for* the figures "35" and "25", *substitute* the figure "10".

SRI D. S. AUTHIMOOLAM: I second the amendment.

* SRI K. SATTANATHA KARAYALAR: கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த லேவாதேவிக்காரர்கள் சட்டத்தில் கொடுத்திருக்கும் திருத்தம் அவர்கள் லைசென்ஸ் எடுக்க

வேண்டிய வழி முறைகளைப்பற்றியும், அவர்கள் எவ்வளவு ரூபாய் கட்டவேண்டும் என்பது பற்றியதுமாகும். 4-வது விதி 3-வது பிரிவில் லைசென்ஸ் "பீஸ்" 35 ரூபாய் என்றும் புதுப்பிக்க 25 ரூபாய் என்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பிரிவு 4-ல் கெஜட் பிரசுரமாகி 3 மாத காலம் வரை 10 ரூபாய் கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. அதையே நிரந்திரமாக்கிவிட்டால் போதும். இதை நகரிலே இருக்கக்கூடிய பெரிய லேவாதேவிக்காரர்களை நான் மனதிலே வைத்துச் சொல்லவில்லை. கிராமாந்திரங்களிலே உள்ள சிறிய லேவாதேவிக்காரர்களுக்கு 25 ரூபாய், 35 ரூபாய் என்று நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக்கூடாது. இந்தச் சட்டம் உடனடியாக சென்னையிலே இருக்கக்கூடிய பட்டாணியர்களுக்காக, அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த விதிகளில் இருந்து தப்ப என்னென்ன மார்க்கங்கள் உண்டு என்பதை உணர்ந்து சமீப காலத்தில் புதிய தந்திரங்களைக் கையாளுகிறார்கள். அதிகக் காலதாமதம் இல்லாதபடி அமுலுக்குக் கொண்டுவந்து அவர்களைப் பொறுத்த மட்டில் எப்படிக் கட்டுப்படுத்த வேண்டுமோ அதைச் செய்ய வேண்டியதுதான். இந்தத் திருத்தத்தைப் பொதுவாக சாதாரண மனிதர்களைப் பொறுத்தமட்டில், கிராமாந்திரங்களில் வாழக்கூடியவர்களுக்கு "பீஸ்" என்று சொன்னால் 2 ரூபாய், 5 ரூபாய் என்றால் பாதகம் இல்லை. ஆனால் இப்பொழுது போடப்பட்டிருக்கும் ரூபாய் ஒரு தீர்வை போல்—டாக்ஸ் போல்—இருக்கிறது. குறைந்த அளவு 10 ரூபாய் என்று இருக்குமானால் நன்றாக இருக்குமென்று இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். மசோதா இந்தச் சபையில் விவாதத்தில் இருந்தபோதுகூட இதைப்பற்றி என் போன்றவர்கள் சொன்னோம். அந்தச் சமயத்தில் அமைச்சர் அவர்கள் இந்த இலாகா ஏற்படுத்த இருக்கும் காரணத்தினால் அதன் செலவை ஈடு செய்ய ஒரு கட்டணம் விதிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படி விதிக்கவேண்டிய கட்டணம் கரையாளர் அவர்கள் சொன்னது போல் செலவுக்கு ஈடு செய்யும் அளவுக்கும் அதிகப்படியான அளவாக வைத்திருக்கிற காரணத்தினால் அதிலிருந்து "எவேட்" செய்வது அதிகமாக இருக்கிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் சிறு லேவாதேவிக்காரர்கள்தான். அவர்கள் சமீபத்தில் மாநாடு நடத்தி இதுபற்றித் தீர்மானங்கள் அனுப்பியிருக்கிறார்கள். இன்றைய தினம் இந்தமாதிரி சிறிய லேவாதேவிக்காரர்கள் சாதாரணமாக கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகப்படியான ஒரு கட்டணத்தை விதிப்பது அவசியம் இல்லையென்று ஏற்கனவே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள்கூட "not exceeding one hundred rupees" என்று சொல்லியிருக்கிறது; அதற்குக் குறைவாக விதிப்போம் என்று உறுதி கொடுத்தார்கள். அந்த உறுதியின் அடிப்படையிலே இந்தக் கட்டணத்தைக் குறைத்து, வேண்டுமானால் பெரிய லேவாதேவிக்காரர்களுக்கு

அதிகப்படியாக விதித்தாலும், சிறிய லேவாதேவிக்காரர்களுக்குக் குறைக்கவேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கின்றேன். இதர ராஜ்யங்களில் லைசன்ஸ் கட்டணம் குறைந்த அளவில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பம்பாய் மணி லெண்டர்ஸ் சட்டத்தில் லைசன்ஸ் கட்டணம் ஐந்து ரூபாய் என்றும், ரென்யூவல் கட்டணம் கிடையாது என்றும் இருக்கிறது. சென்ட்ரல் ப்ராவின்ஸஸ் அண்டு பீரார் சட்டத்தில் ரூபாய் 18 என்று வைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் மணி லெண்டர்ஸ் ஆக்டில் ரூபாய் 5 என்று வைக்கப்பட்டிருக்கிறது. பெங்கால் சட்டத்தில் ரூபாய் 15 என்று வைக்கப்பட்டிருக்கிறது. பிற ராஜ்யங்களில் உள்ளதுபோல் நம் ராஜ்யத்திலும் அதற்கேற்ப அமைக்கவேண்டுமானால், கட்டணத்தைச் சிறிது அளவு குறைக்கவேண்டும். பத்து ரூபாய் அளவுக்குக் குறைப்பது நியாயமாக இருக்கும். சில்லரை லேவா தேவிக்காரர்களும் இருக்கலாம். ஆகையால் பத்து ரூபாயாகக் குறைப்பதை நான் ஆதரிக்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இது முதலில் கிராமங்களில் அமுலுக்கு வராது. நகரங்களிலும் முனிசிபாலிடிகளிலும்தான் முதலில் அமுலுக்கு வரும். ஆகவே, கிராமாந்திரங்களில் இருப்பவர்களுக்காகப் பரிந்து இப்பொழுது பேசவேண்டியதில்லை.

இந்தக் கட்டணம் ரூ. 100 என்று சட்டத்திலே ஒரு வரம்பு கொடுத்திருந்தது. அது அதிகம் என்று சொல்லப்பட்டது. அப்பொழுதே நான் சொன்னேன், இது வரம்பாக இருக்கிறது, இதைக் குறைத்து ஒரு தொகை நிர்ணயிக்கப்படும் என்று. குறைக்கும் விதத்திலே மூன்றில் இரண்டு பங்கு குறைத்திருக்கிறோம். மூன்றில் ஒரு பங்குதான், ரூ. 35 என்று வைத்திருக்கிறோம். நிர்வாகச் செலவு முதலியவற்றைப் பார்த்தால் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கிறது. கொஞ்சம் பணம் வைத்துக்கொண்டிருப்பவர்கள்தான் லேவாதேவி செய்ய முடியும். அவர்களுக்கு இந்தக் கட்டணம் ரொம்ப அதிகமாக இருக்காது. பத்து ரூபாய் விஷயம் தற்காலிகமாகக் கொடுத்திருக்கிறது. குறைவாக இருக்கிறதே என்று ரிஜிஸ்தர் செய்வதற்கு முனைந்து வருவார்கள். 'என்க்கரேஜ்' பண்ணுவதற்காக பத்து ரூபாய் என்று வைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 50, ரூ. 45 என்று வைக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், குறைத்து, ரூ. 35, ரூ. 25 என்று வைத்திருக்கிறோம்.

பம்பாயில் கட்டணம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கு லேவாதேவி வியாபாரம் அதிகமாக இருப்பதால் கட்டணம் ஜாஸ்தி வைக்காவிட்டாலும், அதிகமான தொகை

[Sri M. A. Manickavelu] [11th September 1959

வந்துவிடலாம். இதிலே பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இதிலே கட்டணம் அதிகமாக இல்லை. இரண்டு பங்கு குறைத்து, ஒரு பங்குதான் இதிலே போட்டிருக்கிறது.

MR. SPEAKER : The question is :

" That the following amendment be made to the Madras Money Lenders Rules, 1959, issued in G.O. Ms. No. 2823, Industries, Labour and Co-operation, dated 15th July 1959 and published in *Fort St. George Gazette*, dated 29th July 1959 and laid on the table of the House on 1st September 1959 :—

AMENDMENT.

In sub-rule (2) of rule 4 of the Madras Money Lenders Rules, 1959, *for* the figures " 35 " and " 25 ", *substitute* the figure " 10 ".

The motion was put and lost.

V.—GENERAL DISCUSSION ON THE FIRST STATEMENT OF SUPPLEMENTARY DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE IN 1959-60.

MR. SPEAKER : இன்றையதினம் ஸப்ளிமெண்டரி பட்ஜெட் மீது விவாதம் நடைபெறும். கனம் அங்கத்தினர்களில் பலர் திருத்தங்களைக் கொடுத்திருப்பதைப் பார்த்தால், இதில் என்ன பேசலாம் என்று கவனிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகையால், இது சம்பந்தமாக உள்ள சட்டசபை விதியைப் படிக்க சபை அனுமதி கொடுக்குமென்று நம்புகிறேன். விதி 160 கூறுவதாவது—

' The demands for supplementary or additional grants shall be dealt with as if they were demands for grants :

Provided that the discussion of a demand for a supplementary or additional grant shall be confined to the details of which it is composed.' இதைத்தான் கனம் அங்கத்தினர்கள் புரிந்துக் கொள்ளாமல் பழைய பட்ஜெட்டிலே இருக்கிற மான்யக் கோரிக்கைக்கெல்லாம் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அந்தந்த மான்யக் கோரிக்கை எடுத்துக்கொள்ளப்படும்போது, எது ஏற்கத் தகாதது என்று சொல்கின்றேன். பொது விவாதத்திலே கலந்துக் கொள்ளும் கனம் அங்கத்தினர்கள், ஸ்டேட்மெண்டிலே என்ன இருக்கின்றனவோ அவைகளைக் குறித்துத்தான் பேசவேண்டும். பொது விவாதம்போல் நடத்தக்கூடாது. Now we will have general discussion. When the amendments come up, I will say which amendments are in order and which are not. I think two hours will be sufficient. The Hon. Minister will begin his reply at 11-45 a.m.

SRI D. S. AUTHIMOOLAM : மூன்று மணி நேரமாவது இருந்தால் நல்லது.

11th September 1959]

MR. SPEAKER : பொது விவாதம் இரண்டு மணி நேரம் இருக்கட்டும். பிறகு ஒவ்வொரு மான்யமாக எடுத்துக்கொள்ள வேண்டும். பொது விவாதம் இரண்டு மணி நேரம் நடந்து, அதற்கு மேலும் அங்கத்தினர்கள் பேச முன்வந்தால், அப்பொழுது பார்க்கலாம். Sri P. S. Chinnadurai will initiate the discussion.

* SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த உப மான்யக் கோரிக்கை சம்பந்தமாக நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, அடிக்கடி உபமான்யக் கோரிக்கை சபை முன்னால் கொண்டுவருவது சற்று சிரமமானதுதான், இருந்தபோதிலும் திட்டங்கள் பல உடனடியாக நிறைவேற்ற வேண்டியிருப்பதால் சபை முன்னால் வரத்தான் வேண்டியிருக்கிறது என்று சொல்லி தனக்குத் தானே சமாதானம் சொல்லிக்கொண்டார். என்ன மாதிரியான திட்டங்களை நிறைவேற்றுகிறோம் என்று பார்க்கவேண்டும்.

மாதர் நல இலாகாவுக்குச் செலவிடப்பட்டதைக் குறித்து "Purchase of a station wagon for the Service Home, Tambaram, at a cost of Rs. 19,500 and Rs. 1,000 towards incidental charges and cost of petrol;" என்று இதிலே காணப்படுகிறது. தாம்பரத்திலுள்ள சர்விஸ் ஹோமுக்காக ஸ்டேஷன் வாகன் வாங்குவதைப் பெரியதொரு திட்டமாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. மாதர் நல இலாகாவுக்கு இந்த ஸ்டேஷன் வாகன் இப்பொழுது அவசரமானதாக இருக்க முடியாது. தாம்பரத்திலுள்ள சர்விஸ் ஹோமுக்கு இந்த ஸ்டேஷன் வாகன் இல்லாததால் என்ன அவர்களுடைய சேவையைக் குறைத்துக்கொள்ள வேண்டி நேரிடும்? அப்படி என்ன ஒரு பெரிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்? அடுத்த பட்ஜெட் வருவதற்குள் என்ன அவசரம்? அதற்குள்ளாக உபமான்யக் கோரிக்கையாகக் கொண்டுவந்து நிறைவேற்றி, ஸ்டேஷன் வாகனை வாங்கி சர்விஸ் ஹோமுக்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று என்ன அவசரம் வந்துவிட்டது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சென்ற பட்ஜெட்டிலே சேர்த்திருக்கலாம் அல்லது அடுத்த பட்ஜெட் வரையில் காத்திருக்கலாம். மேலும் சொல்லப்போனால், இந்த ஹோமுக்கு ஸ்டேஷன் வாகன் அவசியமே இல்லை. மாதர் நல இலாகாவுக்கு ஸ்டேஷன் வாகன் எதற்காக? அங்கிருந்து போகவேண்டுமானால் மின்சார ரயில்வண்டி இருக்கிறது. சேரிகளுக்குப் போகவேண்டுமானால் நடந்து போய்விடலாம். பஸ் போக்குவரத்து வசதியும் இருக்கிறது. இதற்கு என் ஸ்டேஷன் வாகன் வேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மாதர் நல இலாகாவைப்பற்றிப் பேசுவதென்றால் கொள்ளை கொள்ளையாகப் பேச இடம் இருக்கிறது. அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஸ்டேஷன் வாகன் வாங்க வேண்டிய அவசியம் கொஞ்சங்கூட இல்லை, அது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

போலீஸ் நூற்றுண்டு விழா கொண்டாடுவதற்கு ஒரு லட்ச ரூபாய்க்குமேல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு லட்ச ரூபாய்க்குமேல் செலவழிக்கவேண்டுமா செலவழிக்க வேண்டாமா என்பதைப்பற்றி இப்பொழுது பேசிப் பிரயோஜனம் இல்லை. நல்லபடியாக நூற்றுண்டு விழாவை நடத்தி, செலவு செய்தாய் விட்டது. செலவு செய்ததற்குப் பிறகு உப மான்யக் கோரிக்கை யாக சபை முன்னல் வந்திருக்கிறது. ஆகையால், இதைப் பூரண மாக அனுமதிக்கிறதா இல்லையா என்று பேசவேண்டாம். இருந்த போதிலும், எப்படிச் செலவழிக்கப்பட்டது என்று பார்க்கும் போது ஜில்லாக்களில் செலவழிக்கப்பட்ட தொகைக்கும் சென்னை நகரில் செலவழிக்கப்பட்ட தொகைக்கும் பெருத்த வித்தி யாசம் இருக்கிறது. சென்னை நகரில் நூற்றுண்டு விழாக் கொண்டாடுவதற்காக ரூபாய் 19,000 என்றும், பதினன்கு மாவட்டங்களில் நூற்றுண்டு விழாக் கொண்டாடுவதற்காக மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 2,000 விதம் ரூபாய் 28,000 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதல்லாமல் வேறு ஏதேதோ செலவுகள் பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதையெடுத்துக்கொண்டாலும் சென்னை நகரத்தில் அதிகமான தொகை செலவழிக்கப்படுவது, ஜில்லாக்களுக்கு குறைவாகச் செலவழிக்கப்படுவது என்ற முறையே காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக நகரத்தில்தான் பெரும்பாலான பணம் செலவிடப் படுகிறதேயொழிய, கிராமப் பகுதிகள் கவனிக்கப்படுவதேயில்லை. பணம்தான் செலவழிக்கிறோம் என்றாலும், அதிலே ஒரு பகுதியை எடுத்து கிராமங்களிலே செலவிட்டிருக்கக்கூடாதா என்று கேட்கி றேன். "உங்கள் நண்பன் போலீஸ்" என்று கிராம ஜனங்கள் உணர்ந்துகொள்ளும் வகையில், கிராமப் பகுதிகளில் இந்த போலீஸ் நூற்றுண்டு விழாவைக் கொஞ்சம் சிறப்பாக நடத்தி யிருக்கக்கூடாதா என்று நான் கேட்கிறேன். நகரத்தில் இருக்கக் கூடியவர்கள் மாத்திரம் போலீஸ் டாட்டூ முதலியவைகளையெல்லாம் நடைபெறுவதையும் மற்ற அமர்க்களங்களையும் பார்க்க முடிகிறது. அம்மாதிரி மற்ற இடங்களில் நடத்துவதாக காணவில்லை. கோயம் புத்தூர் போன்ற முக்கியமான இடங்களில் கூட சென்னை நகரத் தைப் போன்ற அளவுக்கு நடக்கவில்லை. நாங்களெல்லாம் சேர்ந்து ஒரு விதத்தில் நடத்தினேமே தவிர, நாங்கள் எல்லாம் ஆசைப் படத்தக்க அளவில் பிரமாதமாக நடத்த முடியவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சேர்ந்ததே பிரமாதம்.

SRI P. S. CHINNADURAI : பணம் இல்லை ; அதனல் பிரமாத மாக நடத்த முடியவில்லை. இதிலேகூட கிராமத்திற்கும் நகரத் திற்கும் பெரிய வித்தியாசம் காட்டப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம் என்பதை நான் சொல்ல வேண்டிய வனாக இருக்கிறேன்.

11th September 1959] [Sri P. S. Chinnadurai]

கல்வி இலாகா மான்யத்தை எடுத்துக்கொண்டால், புதிதாக 40 டிபுடி இன்ஸ்பெக்டர்கள், 40 க்ளார்க்குகள், 40 அடெண்டர்கள், 40 ப்யூன்கள் போடுவதாக இருக்கிறது. இது அவசியமா என்று சந்தேகிக்கவேண்டியதாக இருக்கிறது. அவசியம் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இவ்வளவு டிபுடி இன்ஸ்பெக்டர்கள் புதிதாகப் போட்டவேண்டுமா என்னும் ஐயப்பாட்டை விளக்கவேண்டியது அமைச்சர் அவர்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பொழுது என்ன வந்தது? பள்ளி ஆண்டு தொடங்கியபின் ஒருவேளை போட்டு விட்டார்களோ என்று தெரியாது. போட்டால் இன்னும் மோசம் என்று சொல்லவேண்டும். பள்ளி ஆண்டுத் துவக்கத்திலே போட்டால் சபை அனுமதி கொடுக்காமல் போய்விடுமோ என்று செலவு செய்துவிட்ட பிறகு சபை முன்னால் வருவது நல்ல வழக்கம் இல்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். ஒருக்கால் அப்படிப் போடாமல் அடுத்த பள்ளி ஆண்டு வரையிலாவது பொறுத்திருக்கலாம். அதற்கிடையில் செலவு உடனடியாகப் பண்ணவேண்டியது அவசியம் என்று எனக்குத் தோன்றவில்லையென்று சொல்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, எப்படி நிர்வாகத்தில் சிக்கனம் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி கடுமையாகவும், தீவிரமாகவும் ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தோம். அப்படித் தீவிரமாக ஆலோசனை பண்ணி முடிவு கூறுவதற்காக தனி ஆபீசர்களைப் போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் அப்படிச் செய்திருக்கிறார்களா என்று பார்த்தால், அதற்குப் பதிலாக அதிகப்படியான அதிகாரிகளை நியமித்து செலவுகளைத்தான் அதிகரித்துக்கொண்டே போயிருக்கிறார்கள். இந்த உபமான்ய கோரிக்கையிலும்கூட நிர்வாகச் செலவு அதிகப்படியான காரணத்தினாலே அதிகப்படியான பணம் கோரியிருப்பதைக் காண்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

(Sri S. Lazar in the Chair.)

இந்த உபமான்ய கோரிக்கையில் ஆசிரியைகளுக்கு என்று 126 குடியிருப்புகள் மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் பரவலாகக் கட்டப்போவதாக இதில் காணப்பட்டிருக்கிறது. இதற்கு ஆகும் செலவில் மத்திய அரசாங்கம் 75 சத விகிதம் கொடுத்து விடுகிறார்கள். நம் சர்க்காருடைய பொறுப்பு 25 சத விகிதம்தான். மத்தியதர வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு காலனி தொழிலாளர்களுக்கான குடியிருப்பு, இன்ஷூரன்ஸ் சிப்பந்திகளுக்கு குடியிருப்பு, இப்படி பலவகையான குடியிருப்புகளைக்கூட அமைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் துவக்கப் பள்ளி ஆசிரியைகளுக்காக என்று மாகாணம் பூராவுக்குமாக 126 வீடுகளைக் கட்ட மாத்திரம்தான் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒவ்வொன்றும் இரட்டை வீடுகள் என்றாலும் கூட 252 குடும்பங்கள் தான் குடியிருக்கமுடியும். இதை உபமான்ய கோரிக்கையாகக் கொண்டு வராமல் நல்லதொரு திட்டமாகவே தீட்டி பட்ஜெட்

மான்யக் கோரிக்கையின்போதே கொண்டுவந்திருக்கலாம் என்று தான் சொல்ல விரும்புகிறேன். அடுத்த பட்ஜெட்டிலே இது கொண்டுவரப்பட்டிருந்தாலும் நமக்கு ஆட்சேபணை இல்லை. அடுத்த ஆண்டு துவக்கத்திலாவது இதற்குரிய வேறுவிதமான மான்யம் கொடுக்கும்போது வழிவகை செய்யப்படும் என்கிற வாக்குறுதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் பல நாட்களாக வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வீட்டு வாடகை அலவன்சாவது கொடுங்கள் என்று கேட்டு வருகிறார்கள். கார்ப்பொரேஷன் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படுகிறது. ஜில்லா போர்டு ஆசிரியர்களுக்குக்கூட கொடுக்கப்படுகிறது. அப்படி இருக்க சர்க்கார் உதவி பெற்று நடைபெறுகின்ற தனியார் துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், கிராமப் புறங்களில் இருக்கிற ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி உடனடியாகச் செய்து கொடுக்கப் படாவிட்டாலும்கூட வீட்டு வாடகை அலவன்சாவது கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக நான் மிகவும் விரிவாகப் பேச விரும்புவது பரம்பிக்குளத் திட்டம். தலைவர் அவர்களே, இந்தப் பரம்பிக்குள திட்டம் சம்பந்தமாக இதற்கு முன்னால் பலதடவை நான் எடுத்து வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஆனால் இன்றையதினம் இந்த உப மான்ய கோரிக்கையில் அந்தத் திட்டத்தினால் கிடைக்கிற மிகுதி தண்ணீரை கோவை மாவட்டத்தின் பாசனம், மின் உற்பத்தி திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கென்று தொகை கோரப்படுகிறது. ஆனால் அந்தப் பணம் கோரி சபை முன்பு வருவதற்கு முன்பாக சர்க்கார் ஒரு காரியத்தை செய்திருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறிவிட்டார்கள். பரம்பிக்குளத் திட்டம் என்றால் அதனால் ஒரு தாலுக்காவிற்குத்தான் பயன் உண்டு என்று அல்ல. நான்கு தாலுக்காக்களுக்கு மத்தியில் சமமாக அதனுடைய நீர் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. சர்க்கார் தரப்பில் இருந்தும் நியாயமான முறையில் அந்தப் பங்கீடு நடைபெறும். இதைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு மந்திரி சபை உப கமிட்டி ஒன்றை அமைக்கிறோம், சம்பந்தப்பட்ட என்ஜினீயரிடமிருந்தும் இது பற்றிய அறிக்கையை வரவழைக்கிறோம், அந்த அறிக்கையின் அடிப்படையில் இதைப்பற்றி மந்திரி சபை உப கமிட்டி ஆலோசனை நடத்தும், அப்போது அந்தத் தாலுக்கா சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏக்களையும், இதர மக்களையும் கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்பதான வாக்குறுதி இந்தச் சபையில் அளிக்கப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மந்திரிசபை உப கமிட்டி அமைக்கப்பட்டதா? என்ஜினீயரிடம் இருந்து அதுபற்றிய அறிக்கை வந்ததா என்கிற விஷயங்கள் ஒன்றும் இன்றுவரை எங்களுக்குத் தெரியாது. இந்தச் சபைக்கும் அதுபற்றி எவ்வித மான அறிவிப்பும் இல்லை. ஆனாலும் எப்படியோ அங்கு நடக்க வேண்டிய காரியங்கள் அதன் போக்கில் நடந்து கொண்டு

11th September 1959] [Sri P. S. Chinnadurai]

போகின்றன. சர்க்கார் இந்தச் சபைக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்து விட்டு அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணம் இல்லாது, தன் இஷ்டப்படியே காரியங்களைச் செய்து கொண்டு போகிறது என்றால் அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இதன் காரணமாக லட்சக்கணக்கான மக்களிடையே குறிப்பாக பல்லடம், தாராபுரம், உடுமலைத் தாலுக்காவில் உள்ளவர்களிடையே பலத்த ஐயப்பாடுகள் தோன்றியிருக்கின்றன. இதனைக் குறித்து சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டும், நன்றாக ஆலோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது அவருக்குத் தந்திக் கம்பியிலே நடக்கிறது போல; வாள் முனையில் சர்க்கார் கட்சித் தலைவர் இருக்கிறார். காரணம் பரம்பிக்குளத் திட்டத்தினால் பாசன வசதி பெற இருக்கிற நான்கு பகுதிகளில் அவர் ஒரு பகுதியினுடைய பிரதிநிதியாகவும் இருக்கிறார். சர்க்கார் கட்சித் தலைவராகவும் இங்கே இருக்கிறார். ஆகவே அவர் தனக்கு இன்று இருக்கும் ஒரு நிலையை, செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய பகுதிக்கு அதிக வசதியைச் செய்து கொள்கிறாரோ என்கிற ஐயப்பாடுகள் தோன்றியிருக்கின்றன. பகிரங்கமாகவும் பல மகாநாடுகளில் பேசப்படுகிறது. மந்திரி சபை உப கமிட்டியை அமைத்திருந்தால், என்ஜினியர்களிடம் இருந்து அறிக்கையை வரவழைத்திருந்தால், அதன் அடிப்படையில் பரிசீலனை பண்ணியிருந்தால், இதர விவசாயிகளையும் கூட்டிவைத்து இதுபற்றி பேசி முடிவு செய்திருந்தால் இப்படிப்பட்ட ஐயப்பாடுகள் தோன்றியிருக்காது. ஆனால் அதற்குமாறாக இன்றயைதினம் உடுமலை, தாராபுரம், பல்லடம் தாலுக்கா விவசாயிகளுக்கு மத்தியில் பயங்கரமான சந்தேகங்கள் உருவாகி நிலவி வருகின்றன. அதை நிவர்த்திக்க வேண்டியது சர்க்கார் கடமை. பரம்பிக்குளத் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற தண்ணீர் நான்கு தாலுக்காக்களுக்கு மத்தியில் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். ஒவ்வொரு தாலுக்காவிலும் குறைந்தது 500 ஏக்கராவுக்கு குறைவில்லாத பாசன வசதி அளிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அதைப்பற்றி அரசாங்கத்தின் கொள்கை என்ன? ஏன் அரசாங்கம் திட்டவட்டமாக தங்களுடைய கொள்கை இன்னது என்பதைப்பற்றி அறிவித்துவிடக் கூடாது? (கனம் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம்: அப்புறம் உங்களுக்கு எல்லாம் வேலை இல்லாமல் போய்விடுமே.) எங்களுக்கு வேறு அலுவல் இல்லையென்று அமைச்சர் அவர்கள் நினைக்கவேண்டாம். சர்க்கார் கட்சித் தலைவருக்கு இத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் எவ்வளவு அக்கரை, கடமை இருக்கிறதோ அவ்வளவு அக்கரையும், கடமையும் அந்தப் பகுதியில் உள்ள எல்லா மக்களுக்கும் இருக்கிறது. அமைச்சருக்கு வேறு அலுவல் இருப்பதுபோலவே எங்களுக்கும் இதில் அக்கறை இருந்தாலும் வேறு அலுவல்களும் இருக்கின்றன.

நம்முடைய சர்க்கார் கட்சித் தலைவர் சர்க்காரை நடத்திக் கொண்டு வருகிறார் என்று சொன்னாலும் அவர் மற்றவர்களுடைய 10-00 a.m.

உதவி இல்லாமல் சர்க்காரை நடத்த முடியாது. மற்றவர்களுடைய ஆதரவு இருந்தால்தான் சர்க்காரை நடத்த முடியும். எல்லோரும் சேர்ந்து நான்கு கைகளைக் கொட்டினுல்தான் சத்தம் கேட்குமே தவிர ஒரு கையை மட்டும் கொட்டினுல் சத்தம் கேட்காது என்று சொல்லுவார்கள். ஆகவே மிகவும் அவசியமான பிரச்னைகளில் எல்லோரையும் கேட்டுத்தான் செய்யவேண்டும். பரம்பிக்குளம் திட்டம் சம்பந்தமான ஒரு கோரிக்கையை எடுத்துச் சொல்லவேண்டும் என்று நினைக்கிறேன். அந்த திட்டத்திற்கு ஆலோசனை கூறிய ஆரம்பக் கர்த்தாக்கள் பலர் சில முக்கியமான யோசனைகளைச் சொல்லியிருக்கிறுர்கள். நீராறு திட்டத்தையும் அதன் மூலமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறுர்கள். அதன் மூலம் மேலும் ஐம்பதாயிரம் ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனுல் அந்த திட்டத்தை கொண்டு வருவதற்கு இன்னும் வாய்ப்பு ஏற்படவில்லை என்று சொல்லுகிறுர்கள். அதைப்பற்றி இந்த அரசாங்கம் யோசித்துக் கொண்டு வருகிறதா என்றுகூட தெரியவில்லை. ஒரு மாநாடு கூட்டி ஆலோசனை செய்தால் ஒரு முடிவுக்கு வரலாம் என்று தோன்றுகிறது. இது வரையிலும் ஒன்றுமே செய்யவில்லை. மற்றவர்கள் சொல்லுவதை லட்சியம் பண்ணுவதாகவே தெரியவில்லை என்பதை குறிப்பாக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி இருப்பதும் சரியல்ல. இந்த விஷயத்தையும் அவசியம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri J. MATHA GOWDER : தலைவர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் சமர்ப்பித்த 1959-60-ம் ஆண்டினுடைய உபமானிய கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் எதற்காக இந்த ஆண்டு நாற்பது இன்ஸ்பெக்டர்கள், ஸ்கூல் அசிஸ்டென்ட்கள் போடவேண்டும். அதற்கு என்ன அவசியம் வந்து விட்டது என்று பேசினுர். அதைக் கேட்டு நான் ரொம்பவும் ஆச்சரியப்பட்டேன். சாதாரணமாக நாட்டில் அதிகமாகக் கிராமங்களிலெல்லாம் அநேகம் பள்ளிக்கூடங்களை திறந்திருக்கிறுர்கள். நாமும் அதிகப்படியான பள்ளிக்கூடங்களை திறக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறேம். அதன்படி இப்போது அதிகப்படியான பள்ளிக்கூடங்களை திறந்து வைத்திருக்கிறுர்கள். அதைக் கண்காணிக்க இன்ஸ்பெக்டர்களைப் போடக்கூடாது என்பதனுடைய நோக்கம் என்ன என்பது தெரியவில்லை. ஏன் இதற்கு அவசரம் என்றும் கேட்கிறுர். பட்ஜெட்டை தயாரிக்கும் காலத்தில் எவ்வளவு பள்ளிக்கூடங்களை திறக்கவேண்டும் என்று பட்ஜெட் ஒதுக்குகிறேம். அப்படி மார்ச் மாதத்தில் பட்ஜெட் ஒதுக்கி வைத்து விட்டு பள்ளிக்கூடங்களை ஜூன் மாதம், ஜூலை மாதங்களில் திறக்கிறேம். எவ்வளவு பள்ளிக்கூடங்களை திறக்கிறேம் என்று பார்த்த பிறகு அதற்கு எவ்வளவு இன்ஸ்பெக்

டர்கள் தேவையாக இருக்கும் என்பதைக் கணக்கிட்டு அதற்குப் பிறகு உப மானிய கோரிக்கையில் இவ்வளவு இன்ஸ்பெக்டர்கள் தேவை என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. அதன் பிறகு அவர்களுடைய செலவுக்கு என்று உப மானியம் கேட்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே உப மானிய கோரிக்கையின் அவசியத்தை எடுத்துச்சொல்லுகிறேன். எவ்வளவோ மாவட்டங்களில் எவ்வளவோ ஓராசிரியர் பள்ளிக்கூடங்களைத் திறந்து அவைகள் நடந்து வருகின்றன. பள்ளிக்கூடங்களை ஆரம்பித்துவிட்டு ஆசிரியர்கள் குறைவாக இருந்தால் பள்ளிக்கூடங்கள் நடக்காது என்பது நன்ருகத் தெரிந்திருக்கிறது. ஆகவே எவ்வளவு பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகிறது என்பதை கணக்குப் பார்த்துத்தான் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி அதிகப்படியாக நியமிக்கா விட்டால் கல்வித்தரம் குறைந்து போய்விடும். அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அதன் பிறகு அந்தப் பள்ளிக்கூடங்களை கண்காணிக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு அதிகப்படியான இன்ஸ்பெக்டர்களையும் நியமிக்க வேண்டியதாக இருக்கிறது என்பதையும் நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த புஸ்தகத்தில் 27-வது பக்கத்தில் உதகையிலுள்ள ஏரியை சீர்படுத்துவதற்கு என்று சர்க்கார் 2½ லட்சம் ரூபாய் அவசரமாக ஒதுக்கியிருப்பது ரொம்பவும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அது ரொம்பவும் அவசியம் என்று கருதி சர்க்கார் அதை உடனடியாக சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லியிருப்பது ரொம்பவும் வரவேற்கத்தக்கது. அடுத்த பட்ஜெட் வரையில் காத்திருக்கலாம் என்று இருந்தால் அதற்குள் அந்த ஏரி இருந்த இடமே தெரியாமல் போய்விடும். அதற்காக அந்த வேலையை உடனடியாக எடுத்துச் செய்ய வேண்டுமென்பதை கருதி அதற்கு என்று 2½ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது ரொம்பவும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது. அங்கு இருக்கிற முனிசிபாலிட்டி எழுதியிருப்பதைக் கண்டு அது ரொம்பவும் அவசரம் என்று கருதி அதை எடுத்துச்செய்யவேண்டும் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கதுதான். அது சம்பந்தமான இலாகாக்காரர்களும் அதன் அவசியத்தை உணர்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டதற்கு அவர்களுக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் அதே பக்கத்தில் குடிநீர் வழங்கும் திட்டம் வகுத்து அதற்கு என்று பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அதைப் பார்த்தும் ரொம்பவும் சந்தோஷம். குடிநீர் திட்டத்தின் மூலம் எங்கேயெல்லாம் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டியது எவ்வளவு அவசியமாக இருக்கிறதோ அதையெல்லாம் எடுத்து நடத்த வேண்டியதுதான். பல கிராமங்களில் குடிநீர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒன்றை மட்டும் குறிப்

பாக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியாகிய கூனூரிலும், அதைச் சேர்ந்த கோட்டகிரியிலும் குடி நீர் வழங்குவதைப்பற்றி சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த மன்றத்திலும் அதைப்பற்றி அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். நீலகிரி ஜில்லாவிலேயே கோட்டகிரி ஒரு பிர்க்கா. அங்கே மேஜர் பஞ்சாயத்து கூட இருக்கிறது. அது 16 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்து. அப்படியிருந்தும் அங்கே குடி தண்ணீர் வசதி இல்லே. மலேயில் இருந்துகொண்டும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி கேட்டால் ஆச்சர்யத்தைக் கொடுக்கும். அங்கு மலேயில் இருப்பவர்கள் சென்ற வாரம் மலேயில் தண்ணீர் இல்லாமல் லாரி மூலமாக கீழேயிருந்து தண்ணீரைக்கொண்டு மலே மேல் போய் சப்ளே செய்யக்கூடிய நிலேமை ஏற்பட்டது. இதைப் பற்றி கேள்வியும் பட்டிருக்கலாம், பத்திரிகைகளிலும் பார்த்திருக்கலாம். கோட்டகிரிக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் 1957-ம் வருஷத்திலேயே இந்த சட்டசபையில் சொல்லியிருக்கிறேன். இது சம்பந்தமாக இந்த செக்ரடேரியட்டில் பார்க்காத ஆபீசர்கள் கிடையாது, ஏருத படி கிடையாது. ஒவ்வொரு ஆபீசிலுமுள்ள காரியதரிசிகளேக் கண்டு இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லே. எந்த விதமான பதிலும் இது வரையிலும் கொடுக்கவில்லே. இதை நான் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லே என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் இந்த அரசாங்கத்தினிடம் முறையிட்டுக் கொண்டது மட்டுமல்ல. நமது நாட்டு பிரதம மந்திரி பண்டித நேரு அவர்கள் கோட்டகிரிக்கு வந்தபோதுகூட அங்குள்ள மக்கள் தங்களுக்கு ஒரு குறைவும் இல்லே, ஆனல் குடி தண்ணீர் கஷ்டம் ஒன்றுதான் இருக்கிறது என்று சொன்னர்கள். அந்த ஒரு குறை தான் இருக்கிறது என்று மகஜர்கூட கொடுத்தார்கள். அங்குள்ளவர்கள் எவ்வளவோ கஷ்டமான நிலேயில்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை ரொம்பவும் ஆசையோடு எதிர் பார்த்தேன். அதாவது இந்த உபமானிய கோரிக்கையை பிரித்துப் பார்க்கும்போது அது சம்பந்தமாக ஏதாவது இருக்கும் என்று அந்த புஸ்தகத்தை ஆவலுடன் பிரித்துப் பார்த்தேன். அந்த திட்டத்திற்கு ஒன்றும் ஒதுக்கவில்லே என்பதைக் கண்டு ஏமாற்றம் அடைந்தேன். அதற்குக் காரணம் என்ன என்பதும் தெரியவில்லே. அது அவசியம் இல்லே என்று கருதுகிறார்களா என்று கேட்கிறேன். ஒன்றைமட்டும் நான் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு பெரிய திட்டம் அல்ல. ஆனல் ஆனேமலே வேட்டைக்காரன் புதூர் குடி தண்ணீர் திட்டத்திற்கு என்று 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடன் இல்லாமல் மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல் கோட்டகிரிக்கும் மானியமாகக் கொடுக்காவிட்டாலும் கடனுகவாவது

11th September 1959] [Sri J. Matha Gowder]

கொடுத்து அந்த திட்டத்தை எடுத்து நிறைவேற்ற முன் வந்திருக்க லாம். அதற்கும் சர்க்கார் முன் வராவிட்டால் அங்குள்ள பஞ்சா யத்தை கடன் எழுப்பச்சொல்லி அதன் மூலமாக திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கலாம். அதற்கு வேண்டிய பணத்தை அங் குள்ளவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இதைப்பற்றி நான் எவ்வளவோ முறை கனம் அமைச்சரிடம் தெரிவித்திருக்கி றேன். சர்க்கார் துறையில் கடன் கொடுக்க பணம் இல்லை யென்றாலும் பொது மக்களே கடனை எழுப்பி தருகிறோம் என்று சொல்லியும் இதுவரையிலும் பதில் ஒன்றும் வரவில்லை. அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து பார்த்து உடனடியாக ஏதாவது பரிகாரம் தேடித்தர வேண்டும் என்று மறுபடியும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதைப்போலவே கூனூர் ஒரு ஹெல்த் ரிசார்ட். அங்கே குடி தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது, அதைப்பற்றி பத்திரிகை களில் பார்த்திருக்கலாம். இந்த வாரம்கூட அந்த முனிசிபாலிட்டி யிலிருந்து வந்து இங்கே இருக்கக்கூடிய மந்திரிகளைப் பார்த் திருக்கிறார்கள். டெபுடேஷனை வந்து குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே இருக்கக்கூடிய நிலையை நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய திட்டங் களையும் மாற்றுகிறார்கள். அபிவிருத்தி திட்டங்களை அமைத்து விட்டு அதை மாற்றி விடுகிறார்கள். நீலகிரி ஜில்லாவிற்கு மைனர் இர்ரிகேஷன் சம்பந்தமாக ஒரு திட்டம் போட்டு அதற்கு என்று 1½ லட்சம் ரூபாயும் ஒதுக்கினார்கள். அப்படி ஒதுக்கியும் அதை எடுத்து செலவு செய்யாமல் அதை மற்ற இனங்களுக்கு மாற்றி விட்டதாகக்கூட சொல்லப்படுகிறது. இதைப்பற்றி நான் சென்ற வாரம் கேள்விப்பட்டேன். அங்குள்ள ப்ளாக் வேலைக்கு என்று செலவு செய்வதை எடுத்து வேறு இனத்திற்கு ஒதுக்கியிருக்கிறார் கள். அப்படி முடிவு செய்திருப்பது சரியல்ல. அப்படி 1½ லட்சம் ரூபாய் செலவு செய்வதற்கு வசதி இல்லை என்று அதை மறுபடியும் ப்ளானிங் போர்டில் வைத்து பாஸ் செய்து இருக்கிறார்கள். நீலகிரியில் இது சம்பந்தமாக கூட்டம் கூடி ஒன்று தீர்மானிக்கப் பட்டது. இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அங்கே டீ தோட்டங்களைப் போட்டால் சாயில் எரோஷன் கூட ஏற்படாது. இப்பொழுது சர்க்கார்கூட சாயில் எரோஷனைத் தடுக்க சட்டம்கூட கொண்டு வரப்போகிறார்கள், அதற்கு இது உதவியாக இருக்கும், அதனால் டீ தோட்டங்களை இன்னும் அதிக மாக போடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அதைப்பற்றியும் சர்க்காருக்கும் எழுதி இருந்தோம், பல விண்ணப்பங்களும் வாங்கி அனுப்பியிருந்தோம். அதன் பிறகு வில்லங்க சர்ட்டிபிகேட்டுகள் கூட வாங்கப்பட்டது. பாமர ஏழைகளிடத்திலிருந்து தலைக்கு 20 அல்லது 30 ரூபாய் என்றுகூட வாங்கி அனுப்பி வைத்தோம்.

அப்படி இருந்தும் அதை மாற்றிவிட்டார்கள். அதை முதல் ஸ்டேஜிலிருந்து இரண்டாவது ஸ்டேஜுக்கு மாற்றிவிட்டோம் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் அந்தப் பணத்தை தர மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது நியாயம் வழங்கியதாக ஆகுமா என்று கேட்கிறேன்.

ஸ்டேஜ் ஒன்றுக்கே எக்ஸ்டென்ஷன் கொடுக்கவேண்டு மென்று சர்க்கார் அறிந்தும், ஸ்டேஜ் ஒன்றுக்கே பணத்தைக் கொடுக்க உத்தரவு போடவேண்டுமென்று ஸ்டேஜ் இரண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பே பிளாக் டெவலப்மெண்ட் கமிட்டியில் தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தோம். சர்க்கார் இதை கவனிக்காமல் உதாசினப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைக் குறித்து வருந்துகிறேன். இதுபற்றி ரூல் 40 மோஷன் கொண்டுவந்து பேசவேண்டுமென்று இருந்தேன். ஆனால் அப்படி பேசுவதற்கு விரும்பவில்லை. உபமான்யக்கோரிக்கை விவாதத்திலே பேசலாம் என்று விட்டுவிட்டேன். விவசாயிகள் எல்லாம் அதிகமாக கஷ்டப்பட்டு அவர்களுடைய ரிகார்டுகள் எல்லாம் சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் சர்க்கார் இப்படிச் செய்வதைப் பார்த்து மிகவும் வருந்தவேண்டி யிருக்கிறது. எலக்ட்ரிசிடி போர்டுக்கு பணம் இல்லாமல் இல்லை. பாமர மக்களை பாதுகாக்கக்கூடிய அளவிலே பணத்தை செல வழிக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்த உபமான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. M. ANNAMALAI: கனம் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தின் முன் வைத்திருக்கக்கூடிய உபமான்யக் கோரிக் கையானது உண்மையிலேயே இரண்டாவது வரவு செலவு திட்டம் என்று சொல்லவேண்டும். ஏறக்குறைய மூன்று கோடி 91 லட்சத்தி 25 ஆயிரம் ரூபாய் உபமான்யமாகக் கோரப்பட்டிருக்கிறது. ஏனென்றால் சில திட்டங்களுக்கு பணம் போதாமல் இருந்தாலும் அப்படி அதிகமாக தேவைபடும் பணத்திற்கு உபமான்யம் கோரப் படலாம். சில முக்கியமான புதிய திட்டங்கள் வரவேண்டியதாக இருந்தால் அதற்கு உபமான்யம் கோரப்படுவது நியாயம்தான். இங்கு வைத்திருக்கக்கூடிய உபமான்யக் கோரிக்கைகளைப் பார்த் தால் ஏறக்குறைய 34 புதிய திட்டங்களுக்கு மான்யம் கோரப் பட்டிருக்கிறது. இப்போது திட்டங்களைப் படித்துப் பார்க்கும் போது 1959-60-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்திலே அதற்கான மான்யத்தைக் கோரியிருக்கலாம் என்று தெரிகிறது. அவைகளை இந்த மான்யக் கோரிக்கையிலேயே சேர்த்து இருக்கவேண்டிய அவசியம் இல்லை. உதாரணமாக சொல்லப்போனால் 1958-59-ம் ஆண்டு முதலிலேயே அதாவது ஜனவரி, பிப்ரவரி, மார்ச் குள்ளாகவே 40 டெபுடி இன்ஸ்பெக்டர்கள், 40 கிளார்க்குகள், 40 அட்டெண்டர்கள், 40 பியூன்கள் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

[11th September 1959 [Sri S. M. Annamalai]

ஆகவே 1959-60-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்திலே இதற்கு வேண்டிய பணத்தை கோரியிருக்கலாம். இதை விட்டுவிட்டு உப மான்யக் கோரிக்கையிலே இது இடம் பெற்றிருக்கிறது. ஏறக் குறைய இந்த டெபுடி இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதற்காக வேண்டி ஒரு லட்சம் 72 ஆயிரத்தி 600 ரூபாய் இதற்கு உபமான்யமாக கோரப்பட்டிருக்கிறது. இதைப்போலவே ராம நாதபுரம் மாவட்டத்திற்கு 33 ரோட்டுகளைப் போடுவதற்கு 28 லட்சத்தி 78 ஆயிரம் ரூபாய் உபமான்யமாகக் கோரப்பட்டிருக் கிறது. இந்த ரோடு போடுவதற்கான மான்யத்தை சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்திலேயே அதாவது 1959-60-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்திலேயே ஏன் சேர்த்து இருக்கக்கூடாது. அப்படிச் சேர்த்திருந்தால் இது உபமான்யக் கோரிக்கையில் வந் திருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. இதுபோல் யாரோ ஒரு சேல்ஸ்டாக்ஸ் அதிகாரி ஒருவர் கேசரி பருப்பை துவரம் பருப்பு என்று நினைத்து ஏற்க்குறைய 62 மூட்டைகளைக் கைப்பற்றி, இது சம்பந்தமாக வழக்கு நடந்து 40 ஆயிரம் ரூபாய் கொடுப்ப தற்கு இப்போது மான்யம் கோரப்படுகிறது. அப்படி கேசரிப் பருப்புக்கும் மற்ற பருப்புக்கும் வித்தியாசம் தெரியாமல் 62 மூட்டைகளைக் கைப்பற்றி அதனால் சர்க்காருக்கு 4,000 ரூபாய் நஷ்டம் ஏற்படுத்திய இந்த அதிகாரியின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக ஜமீந்தார்களுக்காக வேண்டி 20 லட்சம் ரூபாய் உபமான்யம் கோரப்பட்டிருக்கிறது. ஜமீந்தாரி ஒழிப்பு சட்டத்தின்கீழ் 9 மாதத்திற்குள் செட்டில்மெண்ட் சர்வே செய்ய வேண்டுமென்று இருக்கிறபோது அவர்களுக்கு இந்தப் பணத்தை அப்பொழுதே கொடுக்கவேண்டுமென்று தெரியும். 1959 ஜனவரி, பிப்ரவரிக்குள்ளேயே செட்டில்மெண்டும் சர்வேயாகி இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஏன் வரவு செலவு திட்டத்திலே இந்த 20 லட்சம் ரூபாயை சேர்த்திருக்கக்கூடாது. இதை ஏன் உப மான்யக் கோரிக்கையாக சேர்க்கவேண்டும் என்று கேட்க விரும்பு கிறேன்.

உபமான்யக் கோரிக்கைகளைப் பார்த்தால் சட்ட மன்றத்தில் சர்க்கார் கட்சி மெஜாரிடி இருப்பதினால், எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் முன்கூட்டியே செலவழித்துவிட்டு, பின்னால் உபமான்யத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் சாங்ஷன் வாங்கிக் கொள்ளலாம் என்ற கருத்தோடுதான் இந்த உபமான்யக் கோரிக் கையை சட்டமன்றத்தின் முன் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

போலீஸ் நூற்றாண்டு விழாவிற்கு வேண்டி ஒரு லட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அவர்களுக்காக செலவழித்ததுபற்றி நாங்கள் ஒன்றும் குற்றம் சொல்லவில்லை. ஆனால் கிராமப்புறங்களில் உள்ள போலீஸ் கான்ஸ்டெபிளுக்கும்,

ஹெட் கான்ஸ்டெபிலுக்கும் நூற்றாண்டு விழாவில் என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறதென்று பார்த்தால் அவர்களுடைய பிள்ளைகளுக்கு—ஆணுக்கு ஒரு டிரஸும் பெண்ணுக்கு ஒரு டிரஸும் வழங்கப்பட்டிருக்கிறது. ஏன் இதற்குப் பதிலாக போனஸ் கொடுத்திருக்கக்கூடாது. நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியதினால், கெஜட் பதிவான உத்தியோகஸ்தர்கள்தான் அதில் கலந்துக் கொண்டிருக்கிறார்களே தவிர கிராமப்புறங்களில் உள்ள கான்ஸ்டெபில்களும், ஹெட் கான்ஸ்டெபில்களும் இந்த நூற்றாண்டு விழாவினால் எந்தவிதமான மகிழ்ச்சியும் அடையவில்லை. அவர்களுக்கு போனஸ் கொடுத்திருந்தால் உண்மையிலே அவர்கள் செய்த சேவைக்குச் சர்க்கார் இப்படிப்பட்ட பரிசு வழங்கியிருக்கிறார்கள் என்று மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். அவர்களுக்கு 4, 5 லட்ச ரூபாய் ஒதுக்கி போனஸ் வழங்கியிருந்தால் அவர்கள் நூற்றாண்டு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடி இருப்பார்கள். அதை விட்டு விட்டு கிராமப்புறத்தில் உள்ள கான்ஸ்டெபிள், ஹெட் கான்ஸ்டெபிள் பிள்ளைகளுக்கு ஆளுக்கொரு டிரஸ் தைத்துக் கொடுத்துவிட்டால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்துவிடுவார்கள் என்று நினைத்து சர்க்கார் இதைச் செய்தார்கள் போலும். ஆகவே இப்படிப்பட்ட உபமானியக் கோரிக்கையை நான் பலமாக எதிர்த்து என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, the Supplementary Demands, which we are now discussing, is not quite satisfactory. The Hon. Finance Minister has come before the House with too many items amounting to nearly Rs. 4 crores. That only shows that the Budget has not been framed properly. I find a number of items coming up for sanction. Have these items come up before the Government all on a sudden? Could not the Government have foreseen some of these items? Some of these things could have been anticipated and provided for even in the original estimate. There are certain items which are not urgent and which could have been included in the next budget. I can understand the Finance Minister coming up before the Assembly for some sudden and unforeseen items of expenditure like famine, floods, etc. But, we find here that there are lots of items which could have been foreseen and which could have been brought in the previous budget itself and there are other items which could afford to wait till the next budget. The Hon. Finance Minister need not therefore have come up with such a large number of items involving an expenditure to the tune of nearly Rs. 4 crores. There are so many items like the one mentioned by me. Take for instance the construction of the Council building. But, I do not find it here. My information is . . .

The Hon. Sri C. SUBRAMANIAM : The hon. Leader of the Opposition cannot speak on it. I hope the hon. Leader of the Opposition at least, will set an example.

11th September 1959]

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Take the construction of new wards for leprosy treatment in the North Arcot district and the additional staff for the Madurai Medical College. These things could have been anticipated long, long ago. So, also the expenditure on Capital Outlay on Civil Works and the appointment of Deputy Inspectors of Schools.

With regard to the purchase of machinery for the Government Press and so many other items, my submission is, these could have been brought up before the House earlier or the Hon. Minister for Finance could include them in the next year's budget. There is no special hurry for these and that is all my submission. I agree that many of these items are developmental items.. But still this huge expenditure of four crores of rupees is really not at all good. We have increased the Contingency Fund from Rs. 75 lakhs to 150 lakhs. In addition to this 150 lakhs they say, they have spent 250 lakhs of rupees. I do not know whether this money has been actually spent or is going to be spent. That requires clarification.

With regard to loans to co-operative societies and the City Improvement Trust which are engaged in building houses for the middle income groups, my submission is that they might be asked to construct multistoreyed buildings in small places on the model of Delhi where they have put up many buildings to cater to the needs of middle class people. If this idea is put into the minds of the Co-operative Department and the City Improvement Trust, it will save lot of space especially now when the building programme is going ahead at a rapid pace both in the public and in the private sectors. It looks as though in the next two or three years there will not be even an inch of space available. Taking all these into consideration, I want the Government to see that small buildings with five or six storeys are constructed for the middle income groups. If this is done, I am sure lot of money will be saved on the foundation.

These are some of my suggestions and I am sure the Hon. Minister for Finance, when he comes up before the House next time, will not include such huge items of expenditure in the supplementary demand but will see that things are done properly and that the items which can be foreseen are brought into the Budget.

*SRI A. R. SUBBIAH MUDALIAR: தலைவர் அவர்களே, இந்த சப்ளிமெண்டரி கிராண்டு விஷயமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதில் விவசாய துறையில் ஆயில் என்ஜின், எலக்டிரிக் மோட்டார் இவைகளுக்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ரொம்பவும் வரவேற்க வேண்டியதுதான். பல இடங்களில் விவசாயிகள் பண மூடை காரணமாக இவைகளை வாங்க முடிவதில்லை. அவர்களுக்கு

[Sri A. R. Subbiah Mudaliar] [11th September 1959

கடன் வசதி செய்து கொடுத்தால், அதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகமாக்குவதற்கு வசதி ஏற்படுகிறது. கிணறு வெட்டும் மானியம் சம்பந்தமாக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சப் பிரதேசங்களில் பல கிணறுகள் வெட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இதைப்போலவே கல்வி மானியத்திலும் நல்ல வழியில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் ரொம்பவும் அவசியம். கல்வி நிர்வாகத்தில் இருக்கும் ஊழல்களை நிவர்த்தி செய்வதற்காக அதிக சிப்பந்திகள் நியமனம் செய்யவேண்டியது அவசியம்தான். 'தி டிமாண்டு பார் பிவில் ஓர்க்ஸில்' 13 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதியிலுள்ள ரோடுகள், அதாவது டிஸ்டிரிக்ட் போர்டு மேல் பார்வையில் இருக்கும் கிராம ரோடுகள் இரண்டு வருஷமாக "மெயின்டனன்ஸ்" செய்யப்படாமல் இருக்கிறது. ஏற்கனவே செய்யப்பட்ட வேலைகளுக்கும் பணம் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருஷமாக மெயின்டனன்ஸ் செய்யப்படாமல் இருப்பதன் காரணமாக கிராமப் பகுதிகளில் போக்குவரத்து தடைப்பட்டுப் போய் இருக்கிறது. அதற்கு ஒன்றும் தொகை ஒதுக்கப்படவில்லை.

அதற்கு அடுத்தபடியாக முக்கியமானது குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் திட்டத்தைப் பற்றியது. 'புது சர்வீசாக' ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. டோகன் கிராண்ட் சில திட்டங்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. இதில் ஐந்து ஸ்கீம்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

"In the case of the first five schemes, expenditure will actually be incurred only after detailed plans and estimates are prepared"

என்று போட்டிருக்கிறது. Detailed பிளான்கள் தயார் செய்யப்படவில்லை. எஸ்டிமேட்கள் தயார் செய்யப்படவில்லை. அவைகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடி தண்ணீர் திட்டம் பல பகுதிகளில் பல வருஷங்களாகப் பிளான்களும், எஸ்டிமேட்டுகளும் தயாரிக்கப்பட்டிருந்தும் எடுத்து நடத்த ஏற்பாடு செய்யவில்லை. உதாரணமாக, சங்கரன்கோவிலில் 1957-ம் வருஷமே டிடெயில்டு எஸ்டிமேட்ஸ் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பிரதேசம் பஞ்சப் பிரதேசம். அநேக யாத்திரிகர்கள் வருகிறார்கள். ரூல் 41 மூலமாக கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அமைச்சரிடம் டெபுடேஷன் சென்றோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழி செய்கிறேன் என்று சொன்னார்கள். இப்பொழுது இரண்டவாது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழியில்லை, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்று ஒரு பதில் தரப்பட்டது. பஞ்சப் பிரதேசமாகவும், யாத்திரிகர்கள் அதிகம் பேர் வரக்கூடிய இடத்தை ஏன் "நியூ சர்வீஸ்" சேர்த்துக் கொள்ளவில்லை என்று தெரியவில்லை. பல வருஷங்களுக்கு முன்பே எஸ்டிமேட்ஸ், பிளான்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் இதை எடுத்துக்கொள்ளாததற்குக் காரணம்

தெரியவில்லை. இதைப்பற்றி பல முறைகளில் நாங்கள் சொல்லி யிருக்கிறோம். முதல் மந்திரி அவர்கள் அந்தப் பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு வந்தபோது, பாசன வசதிக்குத் தண்ணீர் கொடுப் பதைப்பற்றி சொன்னபோது, கேரள சர்க்காரிடம் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். குடி தண்ணீர் வசதியைப்பற்றிச் சொன்னபோது அவர்கள் அதிக அக்கறை காட்டினார்கள். அப்படியிருந்தும் அந்தத் திட்டத்தை ஏன் சேர்க்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. சங்கரன் கோவில் பக்கம் வரும்போது எல்லா மந்திரிகளும் அதைப்பற்றி கேட்கிறார்கள். சங்கரன் கோவில் நிர்வாகஸ்தர்கள் இந்தத் திட்டத் திற்குத் தொகை உதவி செய்வதாக, உறுதி சொல்கிறார்கள். பொது மக்களும் ஓரளவுக்குத் தொகை உதவி செய்வதாக இருக்கிறார்கள். அங்கு இருக்கும் கஷ்டங்களை சர்க்கார் உணர்ந்து இருந்தும், எஸ்டிமேட்ஸ் தயார் செய்யப்பட்டிருந்தும் இதில் சேர்க்காததைக் குறித்து வருந்த வேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி நாங்கள் பலவிதத்தில் முறையிட்டோம். பலன் இல்லை.

நீர்ப்பாசன வசதிக்குக் கேரளாவை எதிர்பார்க்க வேண்டி யிருக்கிறது. ஆனால் சர்க்கார் கை வசம் இருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை ஏன் சீக்கிரம் அமுலாக்கக்கூடாது? இவை புது சர்வீஸ் ஸ்கீம்களில் சேர்க்கப்படாததை நினைக்கும்போது, எங்க ளுடைய இடம் புறக்கணிக்கப்படுகிறதோ என்று கவலைப்பட வேண்டியதாய் இருக்கிறது. எந்தெந்த வழிகளில் குறைகளைச் சொல்ல வேண்டுமோ அந்த எல்லா வழிகளிலேயும் சொல்லியாகி விட்டது. எங்களுக்குப் பரிகாரம் கிடைக்கவில்லை. இன்னொரு சப்ளிமெண்டரி டிமாண்டு வரும்பொழுதாவது எங்கள் கஷ்டத்தை உணர்ந்து, சர்க்கார் சங்கரன்கோவில் குடி தண்ணீர்த் திட்டத்தை எடுத்து நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த சப்ளி மெண்டரி எஸ்டிமேட்ஸில் உள்ள மற்ற அயிட்டங்களை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: சார், இந்த உப மான்யக் கோரிக்கையின் மீது சில அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்பு கிறேன். இந்த உப மான்ய கோரிக்கையில் ஏற்கெனவே போடப் பட்டிருந்த மான்யக் கோரிக்கைக்கு பிறகு இடையில் ஏற்படக் கூடிய எதிர்பாராத செலவுக்குப் போதுமான அளவு பணம் ஒதுக் கப்படாததன் காரணமாக ஏற்படக்கூடிய செலவுகளுக்கு என்று இந்தக் கோரிக்கையைக் கொண்டு வந்து மான்யம் கேட்டிருக் கிறார்கள். அதில் குறிப்பாக ஒவ்வொரு ஆண்டிலும் நாம் பட்ஜெட் போடக்கூடிய நேரத்தில் ஏறத்தாழ இவ்வளவு ரூபாய் செலவு செய்ய வேண்டிவரும் என்று பார்த்து அதற்குத் தகுந்தவாறு போடுவது வழக்கம். அதன் பிறகு எதிர்பாராத வகையில் எற்படு கின்ற செலவுகளுக்கும் செலவு செய்து விட்டுப் பின்னால் இம்மாதிரி மான்யங்கள் கேட்பது வழக்கம். இவ்விதம் அத்தியாவசியமான வேலைகளைக் கவனிக்கவேண்டி பல செலவுகளைச் செய்யவேண்டி யிருக்கும். அந்த முறையில் பார்க்கும்போது இன்று நாட்டில் 10-30 a.m.

முக்கியமாகக் கவனிக்கவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. அந்த வேலைகளுக்கு எல்லாம் இதில் கொஞ்சமும் பணம் ஒதுக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்லப்போனால் 57-வது ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட சர்மா நகர், திரு. வி. க. நகர் இவைகளில் எல்லாம் இப்போது தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்று இப்போதும் எல்லா மந்திரிகளும் பேசிக்கொள்கிறார்கள். இப்போது அங்கு நிலைமை என்னவென்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேரில் போய்ப் பார்ப்பதாக இருந்தால் அறிந்து கொள்ளலாம். சுவர் எல்லாம் வெடிப்பு, தரை எல்லாம் வெடிப்பு, கதவு, ஜன்னல் இவைகளில் எல்லாம் வெடிப்பு, இவ்வித மான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது அங்கு குடியிருப்பதற்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதோடு குடிப்பதற்குத் தண்ணீர் வசதி கிடையாது, பாடசாலை வசதி கிடையாது, இன்னும் இது போன்ற பல வசதிகளும் அங்கு கிடையாது. இம்மாதிரி வசதி யற்ற நிலைமையில், சுடுகாட்டின் பக்கத்தில் இருக்கின்ற இந்த சர்மா நகரில் வசிப்பவர்கள் மனிதர்கள் தானா என்று கருதக்கூடிய அளவில் அந்த நிலைமை அங்கு இருந்து கொண்டிருக்கிறது. இதைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக ஒத்தி வைப்புப் பிரேரணை மூலம் இந்தப் பிரச்னையைக் கொண்டு வந்த போது கனம் அமைச்சர் அவர்கள் இப்போது அங்கு அவசரமான நிலையில் கவனம் செலுத்தவேண்டிய அவசியமில்லை என்று சொல்லி விட்டார்கள். இவ்விதம் சொல்லக்கூடிய அளவுக்குத்தான் அரசாங்கத்தின் கவனம் இருந்து வருகிறது. கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களும் அங்கு நேரிடையாகப் போய்ப் பார்வையிட்டிருக்கிறார்கள்.

TEMPORARY CHAIRMAN (Sri S. LAZAR): It has been already pointed out that hon. Members should restrict their remarks only to the items covered by the Demands before the House and not refer to extraneous matter. The hon. Member is referring to a matter which is not covered by the Demands. I therefore request him to restrict his remarks to the subjects before the House.

Sri V. K. KOTHANDARAMAN: குறிப்பாக இதில் சொல்லப் பட்டிருப்பதை மட்டுந்தான் சொல்லலாம் என்றால், வேறு பிரச்னைகளைப்பற்றி ஒன்றும் பேச முடியாது. இருந்தாலும் அரசாங்கம் பொதுவாக இந்தத் துறையில் நல்ல கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடி யாக ஆடிட் செலவுக்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டில் நிர்வா கத்தில் எவ்வளவோ ஊழல்கள் எல்லாம் ஏற்படுகிறது. அதை யாரும் மறைக்கமுடியாது. இவ்விதம் ஆடிட்டர்களை அதிகப்படுத்தி ஊழல்களை எல்லாம் கண்டு பிடிக்கவேண்டியது

அவசியம்தான். ஆனால் இவ்விதம் அதிகமான அளவில் செலவு செய்து ஆடிட் நடத்தினாலும் பரவாயில்லை, மேலாவது ஊழல்கள் நடைபெறாது என்று உத்தரவாதம் உண்டோ என்று பார்த்தால் அவ்விதம் ஒன்றும் காணப்படவில்லை. ஏனென்றால் ஊழல்களைக் கண்டு பிடிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அதற்குக் காரணம் யார் என்பவர்களைக் கண்டு பிடித்து அவர்கள் பேரில் தீவிரமான முறையில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதுதான். ஆடிட்டர்களை அதிகமாக ஏற்படுத்தவேண்டியதுதான், அதைப்பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இவ்விதமாக ஊழல் நடைபெறுவதற்குக் காரணமாயிருந்தவர்களைக் கண்டு பிடிப்பதோடு நின்று விடாமல் அவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தைரியமாக முன்வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஜமீன்தார்களுக்குக் கொடுப்பதற்காக 20 லட்சம் ரூபாய் அதிகப்படியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இப்போது அவசியமாக என்ன செலவு வந்துவிட்டது என்றுதான் தெரியவில்லை. அவர்கள் வேண்டுமானால் கிண்டி ரேஸுக்குப் போவதற்குப் பணமில்லை என்று சொல்லலாம். சட்டத்தில் அவர்களுக்கு ஒன்பது மாதத்திற்குள் கொடுக்க வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாகக் கொடுக்காமல் அடுத்த வருடமோ அல்லது அதற்கு அடுத்த வருடமோ கொடுப்பதற்கு முயற்சி செய்திருக்கலாம். ஆகவே, இதற்கு அவ்வளவு அவசரம் வேண்டியது இல்லை. இதற்கு அவசியமும் இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். அதேபோன்று செங்கல்பட்டு ஜில்லா வியாபாரி திரு. வி. எம். மகமது அனிபா ராவுத்தர் என்பவருக்குச் சொந்தமான 62 மூட்டை பட்டாணிப் பருப்பை கேசரிப் பருப்பு என்று பிடித்து அதன் பேரில் கேஸ் போட்டார்கள். அதன் பேரில் கோர்ட்டு உத்தரவின்படி அதிகப்படியான அளவு ரூபாய் அரசாங்கம் கொடுக்கவேண்டிவந்திருக்கிறது. இதில் ஸாம்பிள் என்ற முறையில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு போயிருக்கலாம். ஏதோ யார் மீதாவது கேஸ் போடவேண்டும் என்ற நோக்கத்தோடு கேஸ் போட்டுவிட்டு பின்னால் அது சரியில்லை என்று சொல்வதின் காரணமாக நஷ்டஈடு கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இது போன்ற விஷயத்தில் சர்க்கார் அதிகாரிகள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். அதுவெல்லாம் சர்க்கார் பணம் தானே போகிறது என்ற எண்ணத்துடன் அவசியமில்லாத முறையில் கேஸ் போடுகின்ற நிலைமை மாறவேண்டும். இல்லாவிட்டால் வியாபாரிகள் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே சர்க்காருடைய பணம் விரயமாகாத முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று நீர்ப்பாசன வசதிகளுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது, அது வரவேற்க வேண்டியதுதான். ஆனால் பல வருடகாலமாக சில ஏரிகளுக்கும் ஆறுகளுக்கும் நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டும் என்று கேட்கப்பட்டிருப்பவைகளை எல்லாம்

[Sri V. K. Kothandaraman] [11th September 1959

இதில் சேர்த்திருப்பதாகக் காணவில்லை. வறண்ட பிரதேசமாக இருக்கக்கூடிய வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள பாலாறுக்கும் அங்குள்ள பல ஏரிகளுக்கும் நீர்ப்பாசன வசதி வேண்டும் என்று கடந்த இருபது ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டிருந்தும் நிலைமையில் எந்தவிதமான மாறுதலும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே நீர்ப்பாசன விஷயத்தில், அதிலும் விவசாயிகளுடைய பிரச்னையை தீவிரமாகக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். அதற்குப் பதிலாக உடனடியாக ஜமீன்தார்களுக்கும், அது போன்ற மற்றவர்களுக்கும் நஷ்டஈடு என்ற முறையில் கொடுப்பதற்குத்தான் அதிகமாகப் பணம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, முக்கியமான பிரச்னைகளுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாக இதில் ஒன்றும் பார்க்க முடியவில்லை.

அதே சமயத்தில் பாலிடெக்னிக்கள் ஏற்படுத்துவதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் வட ஆற்காடு ஜில்லாவிலும், கன்னியாகுமரி ஜில்லாவிலும் ஏற்படுத்தப் போவதாகச் சொல்லும் பாலிடெக்னிக்குகளுக்குக் கட்டிடங்கள் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தப் போகிறார்கள், எந்தெந்த இடத்தில் கட்டப்போகிறார்கள் என்று தெரியவில்லை. இன்றைக்குக் கன்னியாகுமரி ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டிய பாலிடெக்னிக்கை நாகர்கோவிலிலும், வட ஆற்காடு ஜில்லாவில் ஏற்படுத்தவேண்டிய பாலிடெக்னிக்-கை சென்னையிலும் ஆரம்பிக்கப் போவதாகவும் தெரிகிறது. இவ்விதம் இன்னும் 10 வருட காலத்திற்கு இப்படித்தான் இருந்து கொண்டிருக்குமா அல்லது அடுத்த ஆண்டுக்குள்ளாகவே அதற்கான திட்டங்கள் அந்தந்த ஜில்லாக்களில் கட்டப்படுமா?, அதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், மற்ற ஜில்லாக்களில் எல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட பாலிடெக்னிக்குகள் இருக்கும் போது ஒன்றுகூட இல்லாத வட ஆற்காடு ஜில்லாவில் அங்கு படிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் சென்னைக்கும், அதே போன்று கன்னியாகுமரியிலுள்ளவர்கள் நாகர்கோவிலுக்கும் வர வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதல்லாமல் அந்தந்த ஜில்லாக்களில் உடனடியாக அமைந்திருக்குமானால் ஏழைகளாக இருக்கக்கூடியவர்கள், எளிய முறையில் இருக்கக்கூடியவர்கள் அந்த ஜில்லாவிலேயே இருந்து படித்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்த வகையில் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பற்றி சந்தோஷம்தான். இந்த விஷயத்தில் இன்னும் ஒரு வருடத்திற்குள் இந்த பாலிடெக்னிக்குகள் ஏற்படுத்தப்படுமா என்பதைக் கேட்டுக்கொண்டு, வேறு விஷயங்களைப்பற்றி எல்லாம் இதில் பேசக்கூடாது என்றிருக்கிற காரணத்தால் இதோடு நிறுத்திக் கொள்கிறேன். முக்கியமாக விவசாயிகளுக்கு அவசியமாக இருக்கின்ற கருவிகளை வழங்குவதிலும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குகின்ற முறையில் ஏரிகளை எல்லாம்

மராமத்து செய்வதிலும் கவனம் செலுத்தவேண்டும். அதனால் தான் உணவு உற்பத்தியைக் கூடுதலாகப் பெருக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அதற்கான எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* Sri C. R. RAMASWAMI : கனம் தலைவர் அவர்களே, இந்த உபமானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக உப மானியக் கோரிக்கையில், பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட பணத் தொகைக்கு மேல் குறைந்தபட்ச அளவிற்குச் செலவழித்த பணத்திற்கான மானியத்தைக் கோருவதுதான் முறை. ஆனால் நமது அரசாங்கத்தாரோ இப்போது ஏறக்குறைய 4 கோடி ரூபாய் உபமானியம் கேட்டிருக்கிறார்கள். இது மிக அதிகமான தொகை என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அரசாங்கம், வருஷா வருஷம் பட்ஜெட் போடும்போது எல்லாச் செலவுகளையும் சரியாக மதிப்பிட்டு வேண்டிய மானியத்தை பட்ஜெட் கூட்டத்தின்போது வாங்கிக்கொள்ள வேண்டும். இம்மாதிரியான உபமானியக் கோரிக்கைகள் வருவது மிகவும் சரியல்ல என்பது என் அபிப்பிராயம். செலவு செய்திருக்கக்கூடிய சில இனங்களைப் பார்க்கும்போது, இந்தச் செலவுகளை இவர்கள் முன் கூட்டியே கவனித்திருக்க முடியும் என்று கருதுகிறேன். இவைகளுக்கு கண்டின்ஜென்ஸி பண்டிலிருந்து செலவழிப்பது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். இவர்கள் செலவு செய்திருக்கும் சில இனங்களைப் பார்க்கும்போது இவைகளையெல்லாம் நிச்சயம் பட்ஜெட்டிலேயே போட்டிருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. முக்கியமாக கண்டின்ஜென்ஸி பண்டிலிருந்து 20 லட்ச ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். இந்த நிதி கூட இதுவரை 75 லட்ச ரூபாய் அளவில் இருந்தது. இப்போது 150 லட்ச ரூபாய் அளவிற்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து செய்யப்பட்டுள்ள 20 லட்ச ரூபாய் செலவினங்களை முன் கூட்டியே எதிர்பார்த்திருக்க முடியும், அவைகளுக்கு பட்ஜெட்டிலேயே ஸாங்ஷன் வாங்கியிருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். இவைகளைப்போலவே இன்னும் சில செலவுகள் காணப்படுகின்றன. தஞ்சாவூரில் வைத்தியக் கல்லூரி ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை மதுரை வைத்தியக் கல்லூரியில் செலவழித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கென்று தனியாகப் பணம் கேட்கிறார்கள். தஞ்சாவூர் வைத்தியக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய மாணவர்களை மதுரை வைத்தியக் கல்லூரியில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். மதுரை வைத்தியக் கல்லூரியில் 75 மாணவர்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். முதலிலேயே மதுரை வைத்தியக் கல்லூரியை விஸ்தரித்திருந்து அங்கே இவர்களைச் சேர்த்துக்கொண்டிருந்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் தஞ்சாவூர் வைத்தியக் கல்லூரியில் இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொல்லிவிட்டு இவ்வாறு செய்திருக்க வேண்டியதில்லை. இப்போது மதுரை வைத்தியக் கல்லூரியில் இவ்வளவு மாணவர்களைச் சேர்த்

திருப்பதால், நிரந்தரமாகவே அங்கே இவ்வளவு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளத்தக்க வகையில் அந்தக் கல்லூரியை விஸ்தரிக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொல்வதை என்னால் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை.

*SRI C. R. RAMASWAMI : தஞ்சாவூர் வைத்தியக் கல்லூரியில் சேருவதற்கு அனுமதிக்கப்பட்ட 75 மாணவர்கள் இப்போது மதுரைக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அதற்கு உபமானியம் கோரப்பட்டிருக்கிறது. மதுரைக் கல்லூரியில் இப்போது வசதிகள் அதற்கேற்றவாறு விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. மதுரைக் கல்லூரியில் இது நிரந்தர விஸ்தரிப்பாகவே இருக்கட்டும், அங்கே எப்போதும் இத்தனை மாணவர்கள் படிக்கட்டும் என்று சொல்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ சி. ஆர். ராமசாமி தங்களைப் பார்த்துப் பேசாமல் கனம் அமைச்சரைப் பார்த்துப் பேசுகிறார். இவ்வாறு செய்யலாமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : யாரைப் பார்த்துப் பேசினாலும் கனம் சபைத் தலைவரைப் பார்த்துப் பேசுவதாகத்தான் அர்த்தம்.

*SRI C. R. RAMASWAMI : மேலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூட்டுறவு பாங்குகளுக்கும் கண்டின்ஜென்ஸி பண்டிலிருந்து 60,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் இன்னும் சில கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கண்டின்ஜென்ஸி நிதியிலிருந்து அதிகப்படியான பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, கண்டின்ஜென்ஸி பண்ட் என்ற பெயரை அன்பட்ஜெடெட் எக்ஸ்பெண்டிசர் என்று மாற்றியமைத்து அந்த இனத்தில் இந்தச் செலவுகளைச் செய்யலாம் என்று சொல்ல விரும்புகிறேன். கண்டின்ஜென்ஸி பண்டை, தனியாக, ஆபத்து, விபத்து, அவசர காலங்களில் செலவழிக்க உபயோகிக்க வேண்டுமே தவிர, சாதாரணச் செலவுகளுக்கு உபயோகிக்கக் கூடாது என்பது என் அபிப்பிராயம். மேலும், கல்வி இலாகாவிலே 69 லட்ச ரூபாய் அதிகப்படியாகக் கேட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஜில்லா போர்டுகளுக்குக் கொடுக்கப்படும் மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து இதைச் சரிக்கட்டலாம் என்று சொல்கிறார்கள். இருந்தாலும், இதையும் பட்ஜெட் காலத்திலேயே கவனித்திருக்கலாம். இதைத் தவிர, 49 டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதாகவும், அதற்கான செலவையும் இப்போது அனுமதிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். Appointment of Deputy Inspectors of Schools —இதையும் முன்பே கவனித்திருக்கவேண்டும். பட்ஜெட் போடும்போதே இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும் என்பது என் வேண்டு

11th September 1959] [Sri C. R. Ramaswami]

கோள். ஒவ்வொரு இலாகாவிலும் இம்மாதிரியாகத்தான் செலவுகள் அதிகமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆரம்ப காலத்திலேயே, ஏற்படக்கூடிய செலவுகளையெல்லாம் கவனித்தால், நன்றாக இருக்கும்.

பரம்பிக்குளம் திட்டத்தை எடுத்துக்கொண்டால், முதலில் 45 லட்ச ரூபாயாக ஒதுக்கப்பட்டிருந்த தொகையை இப்போது 100 லட்ச ரூபாயாக மாற்றியிருக்கிறார்கள். அப்படி இருக்க, இந்தத் திட்டத்தில் இதுவரை செய்த செலவிற்கு என்ன அனுகூலம் ஏற்பட்டிருக்கிறது; என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

மிடில் இன்கம் க்ரூப் ஹவ்சிங் ஸ்கீமின் கீழ் வீடு கட்டுபவர்களுக்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் மூலம் மொத்தம் 25 லட்ச ரூபாய் கடன் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். அவ்வாறு வீடுகள் கட்டும் மக்களுக்குக் கடன்கள் அதிகமாகக் கொடுத்துதவுவது அரசாங்கத்தின் கடமை. அவர்களுக்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் மூலமாகவோ பாங்குகள் மூலமாகவோ போதிய கடன்கள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூலதனச் செலவைக்கூட அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இந்தக்கூட முன்பே கவனித்திருக்க முடியும் என்று சொல்ல விரும்புகிறேன். உபமானியக் கோரிக்கையில் சேர்க்காமல் தவிர்க்கக்கூடிய செலவினங்களை முன்கூட்டியே கவனித்து பட்ஜெட்டில் இனி சேர்க்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri P. VEDAMANICKAM: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள உபமானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உப மானியமாக 3,95,25,000 ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. இந்த உபமானியக் கோரிக்கையில் போலீஸ் துறைக்கு 4 லட்ச ரூபாய்க்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் தாலுகாவில் சமீபத்தில் 25-க்கு மேற்பட்ட கிராமங்கள் தீயால் பற்றி எரிந்தன. சென்ற ஆண்டு, தீயால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு மொத்தம் சுமார் 25,000 ரூபாய் ஸப்ஸிடி கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் தாலுகாவிற்கென ஒரு தீயணைக்கும் படை வேண்டும் என்று இந்தச் சபையில் பல தடவைகள் கோரியிருக்கிறேன். அது முனிசிபாலிடியாக இல்லாததால் அதற்குத் தீயணைக்கும் படை கொடுக்க முடியாது என்று சர்க்கார் சொல்லிவருகிறார்கள். அங்கே அடிக்கடி வைக்கோற்போர் பற்றி எரிவதால், இது முனிசிபாலிடியாக இல்லாவிட்டாலும் இதற்கு ஒரு தீயணைக்கும் படை கொடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்கென இதில் 57 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பரம்பிக்குளம் திட்டம் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதுடன் மற்ற மாவட்டங்களுக்கான சிறு திட்டங்களையும்

அரசாங்கம் கவனிக்கவேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் ஏறக்குறைய 10 ஆண்டுகளாக நல்ல மழை இல்லை. சிதம்பரம் தாலுகாவில் பல ஆண்டுகளாக சரிவர மழை பெய்யவில்லை. அதை பஞ்சப் பிரதேசமாகவே கருதலாம். அங்குள்ள விவசாய மக்கள் மழை இல்லாததால் பிழைகக வழி தேடி தஞ்சாவூர், திருச்சி ஜில்லாககளுக்குக் குடி போகிறார்கள். எனவே அங்கே நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். எங்கள் தாலுக்காவில் வெல்லிங்டன் ஏரி எனப்படும் ஏரி வெள்ளையர் காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அதன் மூலம் ஏறக்குறைய 20,000 ஏக்கர் பாசன வசதி பெற முடியும். ஆனால் சென்ற பல ஆண்டுகளாக அந்த ஏரி வறண்டு கிடக்கிறது. 2 லட்சம் விவசாய மக்கள் அந்த ஏரியை நம்பி வாழ்ந்து வந்தார்கள். இப்போது அவர்கள் பட்டினியாலும் பஞ்சத்தாலும் அவதிப்படுகிறார்கள். நிபுணர்கள் சொல்லும் யோசனைப்படி, மைசூர் சர்க்காரின் சம்மதம் பெற்று சீக்கிரத்திலேயே காவேரித் தண்ணீரைப் பாலாற்றுக்குக் கொண்டுவந்தால் கள்ளக்குறிச்சி, விருத்தாசலம் முதலிய தாலுக்காக்கள் அதனால் பயனடைந்து முன்னேற முடியும். கம்மம் பிர்க்காவில் ஆர்டிஷியன் ஊற்றுகள் இருக்கின்றன . எனவே அங்கே அவைகளுககு பைப்புகளை அமைக்கலாம். மற்ற இடங்களுக்கு பைப்புகள் ஸாங்ஷன் ஆகியிருக்கின்றன. மற்ற இடங்களில் பைப்புகள் போடப்பட்டிருக்கினறன. கம்மாபுரம் பிர்க்காவில் பைப்புகளைப் போட்டால் அதனால் ஏராளமான மக்கள் பயனடைவார்கள். அங்கே பைப்புகள் போட வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தென்னாற்காடு மாவட்டத்திற்குக் கினறு மானியததை அதிகமாக ஒதுக்கவேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக எங்கள் தாலுக்காவிலே திட்டக்குடி போன்ற ஊர்களிலே சர்க்கார் ஆஸ்பத்திரிகள் வைத்திருக்கிறார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். அதைத் தவிர சேப்பாக்கத்தில் இருக்கக்கூடிய பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றியிருக்கிறார்கள். இதற்காகச் சர்க்காருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையில் நான் அடிக்கடி இந்தச் சபையில் கேட்டு வந்தது அதிகப்படியான பள்ளிகளை ஏற்படுத்துவதை விட பள்ளிகளை நிர்வகிக்க அதிகப்படியான டெபுடி இன்ஸ்பெக்டர்களைப் போடவேண்டும் என்பது தான். இன்று 40 டெபுடி இன்ஸ்பெக்டர்களைப் போட்டிருக்கிறார்கள். இதனால் இன்னும் கல்வி சீர்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் விருத்தாச்சலம் பகுதியில் தான் இந்த டெவலப்மெண்ட் திட்டம் இருக்கிறது. அதைத் தவிர ஏறக்குறைய 6 பிர்க்காக்கள் பிற்போக்கான பிர்க்காக்கள். வருகிற ஆண்டிலாவது பெண்ணாடம் நல்லூர் பிர்க்காக்களை இந்தத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri P. U. SHANMUGAM** : சட்ட மன்ற தற்காலிகத் தலைவர் அவர்களே, 1959-60-ம் ஆண்டின் துணை மானியக் கோரிக்கை பின்மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

11th September 1959] [Sri P. U. Shanmugam]

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிடுவதுபோலத் துணை மானியக் கோரிக்கையானது இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேயே சேர்த்திருக்கக்கூடிய பல திட்டங்களைக் கொண்டிருக்கிறது என்று நானும் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய விவரங்களைப் பார்க்கும்போது சென்ற ஆண்டிலிருந்து நடக்கக்கூடிய சில திட்டங்களை நீடிக்க இப்போது இந்தத் துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திருக்கிறார்கள் என்பதைக் காண்கிறேன். இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேயே சேர்த்திருக்கலாம். அம்மாதிரி வரவு-செலவுத் திட்டத்திலேயே சேர்க்கப்படாததற்கு முக்கிய காரணம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் வழக்கம்போல் இந்த ஆண்டிலும் கூட மிகவும் தந்திரமாக நடந்து கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். முதலில் வரவு-செலவுத் திட்டம் உபரியாக இருக்கும் என்று சொல்லி, பிறகு இந்த உபரி கரைந்து விடும் என்று சொல்லி நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டங்களை அந்த அறிக்கையில் சேர்த்தால் டெபிஸிட் பட்ஜெட்டாகப் போய்விடுமே என்று கருதி, அப்போது அதைச் சேர்த்துக்கொள்ளாமல், சப்ளிமெண்டரி கிராண்டில் வைத்துக்கொள்ளலாம் என்ற யோசனையில் இப்போது சேர்த்திருக்கிறார்களோ என்று கருதுகிறேன். இந்தத் திட்டங்களை எல்லாம் அப்போதே சேர்த்திருந்தால் வரவு செலவுத் திட்டமானது பற்றுக்குறைத் திட்டமாகப் போயிருக்கக்கூடும் என்று கருதித்தான் அமைச்சர் அவர்கள் இப்படிக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று நான் ஐயுறுகிறேன். அந்த நிதி நிலை அறிக்கையின் கடைசி வாசகத்தைப் படிக்கும்போது "ரூபாய் 1,39 லட்சம் உபரி ஏற்படலாம் என்று கணக்கிடப்பட்டிருந்தாலும் சமீபத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்வோமேயானால் இந்த உபரி முழுவதும் அநேகமாகக் கரைந்து விடும்" என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உபரியும் கிடையாது, பற்றுக்குறையும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில் போடப்பட்டிருக்கக்கூடிய 34 திட்டங்களைப் பாராட்டுகிறேன்—கண்டிக்க விரும்பவில்லை.—அப்படி கண்டித்தாலும் அதனால் பலன் ஏதும் இருக்கப்போவதில்லை—போடப்படும் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்—அதனால் நாட்டு மக்கள் பலன் அடையவேண்டும். இந்தத் துணை மானியக் கோரிக்கை 4 கோடி ரூபாய் அளவுக்கு இருப்பதனைப் பார்த்து, நிதி அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்கிறேன்—இதை எப்படிச் சரிகட்டப் போகிறீர்கள்? ஏதேனும் புது வரி போடப் போகிறீர்களா? ஏதாவது கடன் எழுப்பப் போகிறீர்களா? அல்லது மத்திய சர்க்காரிடமிருந்து மானியம் ஏதாவது பெறப்போகிறீர்களா? அல்லது போட்டிருக்கும் திட்டங்களை வெட்டி இந்தத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறீர்களா? போட்டிருக்கக்கூடிய திட்டங்களில் எதையேனும் குறைத்திருந்

தால் எந்தெந்தத் திட்டங்களைக் குறைத்திருக்கிறீர்கள்—எந்தெந்தத் திட்டங்களை தள்ளி வைத்திருக்கிறீர்கள்—என்று தயவு செய்து இந்த மாமன்றத்தில் தெரிவிக்கவேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். 4 கோடி ரூபாய் அளவுக்கு—இத்தகைய பெருத்த தொகைக்கு—மாமன்றத்தில் உப மான்யக் கோரிக்கை கேட்பதை விட்டு, வருங்காலத்திலாவது—இத்தகைய பெருத்த தொகைக்கு உப மான்யக் கோரிக்கை கொண்டு வாராமல்—ஆண்டு நிதி நிலை அறிக்கை தயாரிக்கும்போது என்னென்ன செலவு ஆகும் என்று கணக்குப் பார்த்து, இலாகாக்களில் புள்ளி விவரத்தைத் தயாரித்து, அத்தகைய முறையில் நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 4 கோடி ரூபாய் என்பது சாதாரண அளவு என்று சொல்லிவிட முடியாது—அதிர்ச்சியுறக் கூடிய அளவு தான். இந்தத் தொகையை அனுமதிக்கும் நேரத்தில் நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வேன், இதிலே குறைத்திருக்கிற திட்டங்கள் எந்தத் திட்டங்கள்? இதை எப்படிச் சரிக்கட்டப் போகிறீர்கள்?—அது தான் எங்களுக்குத் தேவை. இப்போது கொடுத்திருக்கும் 34 திட்டங்களோடு மேற்கொண்டு சேர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுவதற்கு எங்களுக்கு அதிகாரம் கிடையாது—குறைத்துக் கொள்ளுங்கள் என்றாலும் குறைத்துக் கொள்ள முடியாது—ஆனால் இதற்கான பணத்தை எப்படித் தேடப் போகிறார்கள் என்று விளக்கமாக அமைச்சர் அவர்கள் பதில் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு எனது உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே, இப்போது சபை முன்பு வந்திருக்கக் கூடிய உப மான்யக் கோரிக்கையை வரவேற்று சிற்சில கருத்துக்களை சொல்ல முன் வருகிறேன்.

மொத்தம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கக் கூடிய தொகை ரூ. 3,91,25,600-ம் எதிர்பாராத துறையில் செலவினங்கள் ஏற்பட்டதன் காரணமாகவே இப்போது சபை முன்பு அனுமதி கோரி உப மானியமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ஒவ்வொரு அரசாங்கத்திலும் ஏற்படுகிற சகஜமான முறையேயாகும். ஏனென்றால் திடீரென்று ஒவ்வொரு காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். அதையெல்லாம் எதிர் நோக்கி பட்ஜெட்டில் தொகை ஒதுக்குவதென்பது முடியாத காரியம். கனம் நண்பர்கள் பேசும்போது கூட இவைகளை பட்ஜெட்டிலேயே கொண்டு வந்திருக்கலாமே, ஏன் சேர்த்திருக்கக்கூடாது என்று சொன்னார்கள். இவைகளை எப்படி அம்மாதிரி கொண்டுவர முடியும் என்று தெரியவில்லை. எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொள்ளக் கூடிய காலத்தில் மூன்று ஆண்டு காலமாக மழை இல்லாமல் இருக்கிறது. அதன் காரணமாக இன்றைக்குத் திடீரென்று குடிதண்ணீர் கிணறுகள் வறண்டுவிட்டன. விவசாயத்திற்குத் தண்ணீர் இறைத்து பாசனம் செய்ய முடியாது. நிலங்கள் காய்ந்து தீய்ந்து போயிருக்கின்றன. இதை

பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் முறையில் செலவு செய்ய வேண்டி நேரிடும் போது அந்தத் தொகையையும் பட்ஜெட்டிலேயே ஏன் சேர்த்திருக்கக் கூடாது என்று கேட்டால், அது நடைமுறையில் சாத்தியப்படுமா என்று கேட்கிறேன். கடந்த காலம், நிகழ் காலம், வரும் காலம் என்ற இந்தத் திரிகாலத்தை உணர்ந்து கொண்டு வரக் கூடிய அமைச்சர்கள் இந்த நாட்டிலே இருக்க முடியாது. சொல்லக்கூடியவர்கள் திரிகாலத்தையும் உணர்ந்தவர்களாக இருந்தால், இவைகளை அப்போதே சொல்லியிருந்தால் அமைச்சர் அவர்கள் அவைகளை எடுத்துக்கொண்டிருப்பார்கள். அதனால் தான் அந்தமாதிரி கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நான் இந்த உப மான்யக் கோரிக்கையை முழு மனதோடு ஆதரிக்கிறேன். இந்த மான்யக் கோரிக்கையே போதாது என்று நான் கருதுகிறேன். இன்னும் அதிகமாகச் செலவழிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம் என்ன என்றால் இன்றையதினம் மருத்துவத் துறையில் ரூ. 2,25,000 ரூபாய்க்கு உப மான்யக் கோரிக்கை கேட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதிகளில், அதிலும் குறிப்பாக வீரபாண்டி முதலிய பிர்க்காக்களில் இரண்டு ஆண்டு காலமாக சுமார் 7,000 ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு டிஸ்பென்ஸரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்—பெரிய ஆஸ்பத்திரி அல்ல, ரூரல் டிஸ்பென்ஸரி தான். அதைக் கூடக் கொடுக்க முடியாத நிலையில் அரசாங்கம் செலவைச் சிக்கனப் படுத்துகிறோம், பணம் இல்லை என்று கூறுவதால் கிராமங்களில், 7,000 ஜனத்தொகை இருக்கக் கூடிய கிராமங்களில் கூட, சிறிய டிஸ்பென்ஸரிகள் கூட வைக்காமல் இருக்கிறார்கள். இதைக் கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். கிராம மக்களுடைய நலனைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். கிராம மக்களை முன்னுக்குக் கொண்டு வரப்போகிறோம் என்றெல்லாம் அழகாகப் பேசுகிறார்கள். ஏதாவது வைத்தியம் செய்துகொள்ளவேண்டுமென்றால் 15 மைல் சென்று பெற வேண்டிய நிலை இருக்கிறது. ஒரு பிரசவம் என்றால் கூட 15 மைல் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே கார் வசதி ஏதும் கிடையாது. இதைப் பற்றி இரண்டு ஆண்டுகாலமாகச் சொல்லியும் கூட ஒன்றும் செய்யவில்லை. இந்த ஆண்டிலாவது இதைச் சேர்த்து, எல்லா கிராமங்களிலும் வைத்திய வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாகப் பாசனத்திற்காக 55 லட்சம் ரூபாய் உப மான்யக் கோரிக்கை கொண்டு வந்திருக்கிறார்கள். நான் இதனை ஆதரிக்கிறேன். ஐம்பத்தைந்து லட்சம் ரூபாய் செலவு செய்வதற்காக கோரக்கூடிய காலத்திலேனும் சேலம் ஜில்லாவைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் பிரத்தியேக வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் வழி செய்ய வேண்டும். நாளது வரையில் இது கவனிக்கப்படவில்லை என்பது தான் எனது குறை. மூன்று ஆண்டு காலமாக மழை இல்லாத காரணத்தால் கிணறுகளெல்லாம் வறண்டு போய் வீரபாண்டி பிர்க்காவில் ஆட்டையாம்

பட்டி, பாப்பாரப்பட்டி முதலிய பகுதிகளில் ஒரு குடம் தண்ணீர் ஒரு அணுவிற்கு விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு, எப்படி கடும் பஞ்சம் தாண்டவமாடுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிந்து
11 a.m. கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை வைத்துக் கொண்டுதான் தற்சமயத்தில் அங்கு குடி தண்ணீர் வசதியை உண்டு பண்ண பாசன வசதியை உண்டு பண்ண மேட்டூர் கால் வாய்த் திட்டத்தைப் பொன்னியாற்றில் சேர்க்கவேண்டுமென்று கேட்டு இரண்டு வருஷ காலம் ஆகியும் வாாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி வைப்பது அரசாங்கத்தின் கடமை கடந்த எட்டுமாத காலமாக அங்குள்ள மக்கள் ஒரு குடம் தண்ணீர் ஒரு அணு கொடுத்து வாங்கிக் குடித்துக் கொண்டிருக் கிருர்கள். குடிப்பதற்கே விலை கொடுத்து தண்ணீர் வாங்கும் நிலைமை இருக்கும்போது விவசாயம் எப்படி நடக்கும்? விவசாயம் செய்ய பொறுப்பாகும். கடந்த 8 மாத காலமாக அங்குள்ள மக்கள் ஒரு முடியாத நிலைமையில் எப்படி உற்பத்தியை பெருக்க முடியும்? ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறை வேற்றித் தரவேண்டும்மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சாலை போக்குவரத்தைப் பொறுத்த வரையில் நகரங்களிலே இருக்கக் கூடிய சாலைகளுக்குத்தான் தார், சிமென்ட் போட்டு நல்ல முறையிலே அபிவிருத்தி செய்யப்படுகிறதே தவிர கிராமங்களிலே இருக்கக் கூடிய சாலைகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. கிராமப் புறங்களில் உள்ள சாலைகள் நடந்து போவதற்குக் கூட மிகக் கஷ்ட மான நிலைமையில் மேடும் பள்ளமுமாக இருக்கிறது. சர்க்காரைக் கேட்டால், கிராம ரோடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொல்லும்போது. . . .

[Sri K. ANBAZHAGAN : On a point of order, Sir. தலைவர் அவர்களே, ஏறத்தாழ கடந்த இரண்டு, மூன்று நிமிஷங்களாக கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த உப மானியக் கோரிக்கைக்கு சம்பந்தமில்லாத விஷயங்களையும் செய்திகளையும் பேசுகிருர்கள். தாங்கள் இதை அனுமதிக்கலாமா?

TEMPORARY CHAIRMAN (Sri S. LAZAR) : ஏற்கனவே சொன்னது போல் கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுகிறபோது ஏதோ திட்டங்கள் சேர்க்கப்படவில்லை என்று சொன்னுர்கள். இதைப்பற்றியெல்லாம் இதில் பேசவேண்டிய அவசியமில்லை.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர் களே, ஏதோ திட்டத்திற்குச் சம்பந்தப்பட்டது என்று சொல்லு கிருர்கள். சாலைப் போக்குவரத்து என்று இருக்கிறது. சாலைகளை அபிவிருத்தி செய்வதெல்லாம் அதன் கீழ் வருவதால்தான் இதைப் பற்றிப் பேசுகிறேனே தவிர . . .

Sri K. ANBAZHAGAN : On a point of order, Sir. போக்கு வரத்து என்று இங்கு குறிப்பிட்டிருப்பது—ராமநாதபுரம் ஜில்லாவில் பிற்பட்ட பகுதியைக் குறிப்பிட்டு அந்தத் தலைப்பின் கீழ் பேச வேண்டுமென்ருல் அதைப் பொதுவான வாதத்தில் பேசலாமா என்பதைத் தலைவர் அவர்கள் கூற வேண்டுகிறேன்.

11th September 1959]

TEMPORARY CHAIRMAN (SRI S. LAZAR) : இப்பொழுது ஸ்ரீ கந்தசாமி முதலியார் அவர்கள் பேசியதைப் பொறுத்த வரை ராமநாதபுரம் ஜில்லா பிற்பட்ட பகுதியைப்பற்றித் தொடர்ந்து பேசவேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : On a point of order, Sir. நான் பேசும்போது . . .

TEMPORARY CHAIRMAN (SRI S. LAZAR) : Let the hon. Member resume his seat.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : அதே மாதிரி கடன் தொகையாக மானியம் கோரப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். அதிலே விவசாயிகள் பெருந்தொகையைச் கடனுக வாங்கும் காலத்தில் பற்பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதற்காக இன்னும் அதிகமாகத் தொகையை ஒதுக்கி அவர் களுக்குச் சுலபமான முறையில் கடன் கிடைக்கக் கூடிய வசதி களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேலம் ஜில்லாவில் குடிதண்ணீர் வசதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு லட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதில் சேலம் ஜில்லா கலெக்டர் அவர்கள் 5 தாலூகாக்களை வறண்ட பிர தேசம் என்று சொல்லி அங்கே குடிதண்ணீர் வசதி செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறுர்கள். அது தவறு என்று கருதுகிறேன். ஜில்லா பூராவுமே தண்ணீர் கஷ்டம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சேலம் ஜில்லா முழுவதையும் பஞ்சப் பிரதேசமாகக் கருதி குடிதண்ணீர் வசதியை ஜில்லா முழுவதிலும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு கூட கிணறு களை ஆழப்படுத்துவதற்கு 500 ரூபாய் இனுமாகக் கொடுத்தால் தான் இந்த 3 வருஷ காலமாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகள் நல்ல முறையில் ஜீவனம் நடத்த முடியும். அந்த முறையிலே அங்கே இருக்கக் கூடிய விவசாயிகள் சோற்றுக்குக் கூட வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள். இந்த நிலைமையில் அவர்கள் இருக்கும்போது எவ்வாறு உணவு அபி விருத்தியைச் செய்ய முடியும்? ஆகவே, அரசாங்கம் இந்தத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு ஸப்ஸிடி கொடுத்து உதவினுல்தான் உணவு உற்பத்தியில் அபிவிருத்தி ஏற்பட முடியும். அந்த முறை யில் சில பல சலுகைகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI G. G. GURUMURTHI : தலைவர் அவர்களே, இந்த உப மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வரவு செலவுத் திட்டமானது தயாரித்த போது எடுக்கப்படாத செலவுகளுக்கு இப்போது உப மானியக் கோரிக்கை கோரப்பட்டிருக்கிறது. இப்படிக் கோரப்பட்டிருக்கிற

உப மானியக் கோரிக்கையில் சேலம் மாவட்டத்தில் குடிதண்ணீர்த் திட்டத்திற்காக 1,50,000 ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. இதிலே எங்களது கோவை மாவட்டமும் சேர்ந்திருக்கும் என்று எதிர்ப் பார்த்தேன். ஆனால் இதில் சேர்க்கப்படாமல் இருப்பது ஏமாற் றத்தைக் கொடுப்பதாகும். கோவை மாவட்டத்திலே இருக்கக் கூடிய சில தாலுக்காக்களில் குடிதண்ணீருக்குக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பிராந்தியங்களில் எல்லாம் தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் தான் அந்தப் பகுதி மக்கள் சுபீட்சமாக இருக்கமுடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

இப்பொழுது ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிணறுகளை வெட்டப் பல திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டத்தின் கீழ் தொகை ஒதுக்கப்பட்டிருக்கும்போது கூட செலவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்க உத்தரவு ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு 10,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்யப் பட்டால் அதற்கு மேல் அதிகத் தொகை கொடுக்கக் கூடாது என்று இருப்பதால் அந்தப் பிராந்தியங்களில் இருக்கக் கூடிய அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். திட்டத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகையைக் கூடச் செலவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அமைச்சர் அவர்கள் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை, பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்திருந்தாலும் கூட குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க மேற்கொண்டும் செலவு செய்ய அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிணறுகள் வெட்டுவதற்காக விவசாயிகளுக்குக் கொடுக்கப் படும் தொகை கிணறு வெட்டப் போதுமானதாக இல்லை. இப் பொழுது இருக்கும் விலைவாசியின் காரணமாக ஒரு கிணறு வெட்டு வதற்கு இரண்டாயிரம், மூவாயிரம் கூட ஆகிறது. இப்பொழுது கொடுக்கப்படுகிற தொகையை வைத்துக்கொண்டு பாதிக் கிணறு கூட வெட்ட முடியாது. ஆகவே, இந்தத் தொகையைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும். வேலை செய்யக் கூடிய ஆட்கள் கூட கிடைப்பது கஷ்டமாக இருப்பதால் கிணறு வெட்டுவதற்கான தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பவானி, குமாரபாளையத்தைப் பொறுத்தவரை குடிதண்ணீர்த் திட்டத்திற்காக சட்டசபையில் "சாங்ஷன்" செய்திருப்பதாகத் தகவல் தெரிவித்தார்கள். ஆனால் அந்த வேலையைத் தொடர்ந்து எடுத்து நடத்த எந்த சாத்தியக் கூறும் இல்லாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

11th September 1959]

SRI K. R. NALLASIVAM : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நமது நாடு திட்டமிட்டு முன்னேறுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டுக் கொண்டே முன்னேறுகிறது. அப்படித் திட்டமிட்டு முன்னேறக்கூடிய நாட்டில் உப மானியக் கோரிக்கையிலே அதிகமான தொகையைச் சர்க்கார் கொண்டு வந்திருப்பதானது உண்மையிலேயே சரியானதல்ல. திட்டமிட்டு முன்னேறக்கூடியவர்கள் எதிர்பார்த்த தொகையைவிட அதிகமாக வேண்டுமென்று துணை மானியம் கொண்டு வருவது அவ்வளவு சிறந்த துணை மதிப்பீடு என்று சொல்ல முடியாது.

இன்று இந்த மாகாணத்திலே இருக்கக்கூடிய திட்டங்களிலே முக்கியமான திட்டம் பரம்பிக்குளத் திட்டம். அதற்கு உப மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிராந்தியத்தில் இருக்கும் பெருவாரியான விவசாயிகள் தங்கள் பகுதிக்குக் கூடுமான அளவில் பங்கீடு வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். பரம்பிக்குளத் திட்டத்தைப் பொறுத்த வரை இரண்டரை லட்சம் ஏக்கரில் சுமார் 50,000 ஏக்கர் வரை நஞ்சை திட்டத்திற்காகக் கொடுப்பதாக அறிகிறேன். பொள்ளாச்சி தாலூகாவில் கொடுக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன்.

பொதுவாக இன்றைக்கு புஞ்சைத் திட்டங்கள் பயனுள்ள முறையில் வேலை செய்கின்றன. புஞ்சைத் திட்டங்கள் பயனுள்ள முறையில் வேலை செய்வதின் காரணமாக நஞ்சைத் திட்டங்கள் தேவை இல்லை என்று எனக்குக் கிடைத்த அனுபவத்தைக்கொண்டு சொல்ல விரும்புகிறேன். நஞ்சையைவிட புஞ்சைத் திட்டம் அதிகம் போடுவதன் மூலமாக இந்த நாட்டில் பெருவாரியான நிலங்களை நீர்ப்பாசனத்திற்குக் கொண்டுவர முடியும். அதன் மூலமாக நாம் எதிர்பார்க்கும் உணவு உற்பத்திப் பெருக்கத்தைச் செய்வதற்கான வசதி இருக்கும். நஞ்சைக்கு 50 ஆயிரம் ஏக்கருக்குக் கொடுக்கும் தண்ணீரை வைத்துக்கொண்டு ஒரு லட்சம் ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் கொடுத்துவிட முடியும்.

பொள்ளாச்சி தாலூகாவைப் பொறுத்த வரையில், அது ஓரளவு மழை இருக்கும் தாலூகா ; நிலமும் சமமான முறையிலே இருக்கும். அதிகமான உணவு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கும். பல்லடம், உடுமலைப்பேட்டை, தாராபுரம் தாலூகாக்களில் மழை இல்லை. ஐந்து, பத்து வருஷங்களுக்கு ஒரு தடவை தான் அங்கே மழை பெய்வதைப் பார்க்க முடியும். தாராபுரம் தாலுக்கா வாசிகள் பஞ்சத்தால் வாடக்கூடியவர்கள். பரம்பிக்குளம் திட்டத்தை நஞ்சைத் திட்டமாகக் கொண்டு வராமல் புஞ்சைத் திட்டமாகக் கொண்டுவருவது அதிக பயனுடையதாக இருக்கும். புஞ்சைத் திட்டமாகக் கொண்டுவருவதில் சங்கடம் இருக்கிறதென்றால், சர்க்காரும், விவசாயிகளும் கலந்து காரியம் செய்தால் கொஞ்ச நஞ்சம் இருக்கும் சங்கடத்தையும் தீர்த்துக்கொள்ளலாம். இரண்டொருவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு காரியம்

செய்யும்போது தான் வீண் தகராறு வருகிறது; விவசாயிகளைக் கலந்து கொண்டு செய்தால் புஞ்சைத் திட்டம் மிகச் சிறந்த பயனுள்ள திட்டமாக விளங்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பக்கத்திலே உள்ள கீழ் பவானித் திட்டத்தின் அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, பரம்பிக்குளத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அதை மிகச் சிறப்பான முறையில் எதிர்காலத்திலே உருவாக்க முடியும். ஆனால், நஞ்சைக்குத் தண்ணீர் கொடுக்காமல் புஞ்சைக்குத் தண்ணீர் கொடுப்பது நல்லது என்று நான் கூற விரும்புகிறேன்.

எண்ணெய் வித்துக்களினுடைய அபிவிருத்திக்காக மத்திய சர்க்காரிடம் குறிப்பிட்ட ஒரு தொகை வாங்குவதோடு, மாகாண சர்க்காரும் அதற்காக உதவி செய்கிறது. எண்ணெய் வித்துக்களிலேயே குறிப்பாக வேர்க்கடலைக்கு நம் ராஜ்யத்தில் நல்ல எதிர்காலம் இருக்கிறது. வேர்க்கடலை சாகுபடி செய்வதன் மூலமாக விவசாயிகள் இன்றைக்குத் தொல்லையிலிருந்து விடுபட முடியும். கீழ் பவானித் திட்டமாக இருக்கட்டும், பரம்பிக்குளத் திட்டமாக இருக்கட்டும், புஞ்சைப் பாசனம் இருந்தால்தான் வேர்க்கடலை விவசாயம் செய்ய முடியும். பரம்பிக்குளத் திட்டம் இரண்டரை லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்கும் என்றால், இந்த இரண்டரை லட்சம் ஏக்கரிலே 50 ஆயிரம் ஏக்கர் முதல் ஒரு லட்சம் ஏக்கர் வரை நிலங்கள் நீர்க்கசிவினால் பின்னால் பாதிக்கப்படும். நஞ்சைக்கு என்று கொடுக்காமலேயே 50 ஆயிரம் ஏக்கர் முதல் ஒரு லட்சம் ஏக்கர் வரையில் நீர்க்கசிவின் மூலமாக சாகுபடி செய்ய முடியும். அதை வைத்துக்கொண்டு விவசாயிகள் நல்ல முறையிலே வேர்க்கடலை சாகுபடி செய்வதன் மூலமாக அவர்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும். வேர்க்கடலைச் சாகுபடியைப் பொறுத்த வரையில், சர்க்கார் ஏற்கனவே வசதியுள்ள பகுதியிலே புகுந்து கெடுக்காமலிருந்தால் போதும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக் கிணறு வெட்டுவதற்காகப் பணம் ஒதுக்கப்படுகிறது. ஒரு பகுதிப் பணம் கிணறு வெட்டுவதற்கு முன்பும், மற்றும் ஒரு பகுதி பின்னாலும் கொடுக்கப்படுகிறது. கிணறு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் கொடுப்பதற்காக பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பூராத் தொகையையும் ஒரேயடியாக ஒதுக்கி வைத்துக்கொள்வதுதான் நல்லது. முதலில் 500 ரூபாய் கொடுப்பதும், பிறகு 500 ரூபாய் கொடுப்பதும் சரியான முறை தான். விவசாயிகள் கிணற்றின் ஒரு பகுதியை வெட்டியவுடனே, மறு பகுதிக்குப் பணம் கொடுப்பது சரிதான். ஆனால், அதே நேரத்தில் சர்க்கார் அதற்கு என்று தொகை ஒதுக்காமலிருந்தால் காலாகாலத்தில் பணம் கொடுபடாமல், இரண்டு மூன்று மாதங்கள் தாமதமாகும். சுறுசுறுப்பாக கிணறு வெட்டும் வேலை முடிவு பெறாது. ஆகவே, இந்தப் பத்து லட்ச ரூபாயைப் பொறுத்த வரையில், ஒரேயடியாக ஒதுக்கி வைத்துக் கொள்வதுதான் விவசாயிகள் கிணறுகள் வெட்டுவதற்குச் சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

11th September 1959]

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் 391 லட்ச ரூபாய்க்கு அதிகமாக உபமானியக் கோரிக்கை கொண்டு வந்திருக்கிருர். ஏறக்குறைய நான்கு கோடி ரூபாய் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்படி துணிக்கடையில் இரண்டு ரூபாய்த் துணிக்கு ரூ. 1-15-6 என்று விலே போடுகிருர்களோ அப்படி 391 லட்ச ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. சரியாக எடுத்துக்கொண்டால் நான்கு கோடி ரூபாய்க்கு வந்துவிடும். இந்த அளவு உபமான்யக் கோரிக்கையைச் சபைக்கு முன் கொண்டுவந்திருப்பதைப் பார்க்கும்போது இரண்டு புறங்களே நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். ஒன்று நாம் மிகத் தீவிரமாக வளர்ச்சி அடைந்துகொண்டு போகிரேம் என்பதைத்தான் இந்தத் துணேக் கோரிக்கை காட்டுகிறது. பணம் இல்லாமல் சுணங்காமல் இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் துணேக் கோரிக்கையை இவ்வளவு அவசரமாகக் கொண்டு வரவேண்டிய நிலேமை இருக்கிறது. அதைப் பார்க்கும் போது சென்னே மாகாணம் உண்மையிலேயே மாபெரும் வளர்ச்சியை அடைந்துக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதைக் குறித்து மகிழ்ச்சி அடையத்தான் வேண்டும். ஆனல், அதே சமயத்தில் நிதி நிலேமையை எடுத்துப் பார்க்கும் போது, பொது மக்களுடைய வரிப்பணத்தைச் செலவழிக்கும் நாம் மிகப் பாதுகாப்போடு கவனக்குறைவு இல்லாமல் செலவழிக்கவேண்டும். வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டுவருகிற நாம் அந்தப் பணத்தை எப்படி எப்படிச் செலவழிக்க முடியும் என்பதை முன்னலேயே பார்க்கவேண்டும். 'மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல்' என்பதுபோல், இந்த ஆண்டுக்கு என்ன செலவு உண்டாகும் என்பதை நிதி அமைச்சர் அவர்கள் யோசித்துப்பார்த்து, அதற்குரிய முறையில் வகுக்க வேண்டும். அதுதான் மரபு. மிகத் திறமையாகக் காரியங்களேச் செய்யும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எப்படி நான்கு கோடி ரூபாய் வரையில் கோட்டை விட்டார், எப்படி கவனக்குறைவு ஏற்பட்டுவிட்டது என்று பார்க்கும்போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. எவ்வளவுதான் கவனமாக இருந்தாலுங்கூட, அதையும் மீறி சில செலவுகள் ஏற்பட்டிருக்கலாம். செலவு இப்படி, இப்படி, ஏற்படும் என்று முன்கூட்டியே எதிர்பார்க்க முடியாத நிலேமையிலும் ஏற்பட்டிருக்கலாம்.

சில திட்டங்களுக்கு 'டோகன் க்ராண்ட்' ஒதுக்கவேண்டும். 'பரம்பிக்குளத் திட்டத்திற்கு டோகன் க்ராண்ட் 45 லட்சம் கொடுத்திருக்கிரேம்; அதை வைத்துக்கொண்டு வேலேயை ஆரம்பியுங்கள்' என்று திட்டத்திற்கு ஆதரவும் அனுமதியும் தருவது போன்று கொடுக்கத்தான் வேண்டும். ஆனல், துரிதமாக வேலே நடப்பதற்கு இன்னும் அதிகம் தேவை என்று கேட்கும்போது கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஒரு வேலே காலதாமதப்படுகிறது என்ருல் உடனே கொடுக்கத்தான் வேண்டும். அதே போன்று ஒரு திட்டத்திற்கு இவ்வளவு தான் செலவழிக்கலாம் என்று யோசித்திருக்கலாம். இடையில் 'காஸ்ட் ஆப் மெடீரியல்ஸ்' உயர்ந்திருக்கலாம். அதற்காக செலவழிக்கப்படுகிற

பணம் வேறு துறையிலே அதிகமாக செலவழிக்கப்பட்டு விட்டால், அதற்காக அதிகம் தேவை என்று கேட்பதிலே தவறு இல்லை.

இந்த உபமான்யக் கோரிக்கையை நாங்கள் பார்த்தால், மிக அவசியமாக, நாம் கட்டாயமாக எதிர்பார்க்கக்கூடியது இதில் அடங்காமல், அவசரமாகச் செலவு செய்யவேண்டியதுதான் சேர்க்கப்பட்டிருகிறதா என்று யோசிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். உபாத்தியாயினிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் மிக மிக வரவேற்கக் கூடியதுதான். இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாகப் பேசப்பட்டுவந்த திட்டம் தான். மிகக் குறைவான சம்பளம் வாங்கும் உபாத்தியாயர்கள், அவர்களுக்கு வீட்டு வசதி தரவேண்டும், இன்னும் சிறு கிராமங்களில் உபாத்தியாயர் வேலை பார்க்கிறவர்களுக்கு வீடு கிடைப்பதில்லை. இந்த நிலைமை இருக்கும்போது, கட்டாயம் துரிதமாக வீட்டு வசதி தரவேண்டும் என்று பல்லாண்டுகளாக நாம் யோசித்து வந்திருக்கிறோம். இதை என் நிதி நிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கக்கூடாது? குறிப்பிட்டிருக்கலாம். அப்படியிருக்கும்போது 126 வீடுகள் கட்டுவதை அவசரமாக ஒரு உபமான்யக் கோரிக்கையிலே கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். இதையெல்லாம் எப்படிச் செலவழிக்கவேண்டும், எது எதற்கு முதலில் பணம் ஒதுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் வரவு செலவுத் திட்டத்தைத் தீட்ட வேண்டுமே தவிர, அதையெல்லாம் அவசரம் அவசரமாக துணைக் கோரிக்கையிலேயே கொண்டுவந்து திணிக்கக்கூடியது பட்ஜெட்டை நல்ல முறையிலே தயாரிக்கக்கூடிய திறனைக் காட்டுகிறதா என்று யோசிக்கவேண்டும்.

ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது, தஞ்சாவூரில் மெடிகல் காலேஜ் செலவு, வடாற்காடு, கன்யாகுமரி ஜில்லாக்களில் பாலிடெக்னிக் செலவு, கோயம்பத்தூர் டெக்னலஜி இன்ஸ்ட்டியூட்டை விரிவுபடுத்துவதற்காக செலவு, ஹரிஜன் ஹாஸ்டல்கள் கட்ட செலவு, இவையெல்லாம் துணைக் கோரிக்கையிலே திணிக்க வேண்டிய அவசரத் திட்டங்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். அரசாங்கமே யோசித்து வரவு செலவுத் திட்டம் தீட்டுகின்ற நாம் இடையிலே அவசரப்பட்டு திட்டத்தைக் கொண்டுவந்தால், அதை எதிர்க்கட்சிகள் எந்த முறையிலும் குறை கூறாத அளவிலே கொண்டுவரக்கூடிய நிலைமையில் இருக்கவேண்டுமே தவிர, சாதாரணமாக ஏற்படக்கூடிய திட்டங்களை யெல்லாம் இதிலே திணிப்பது சரியா என்று யோசிக்கவேண்டும். அது மாத்திரமல்லாமல் இந்தத் திட்டத்தின் காரணமாக நிதி நிலைமை எப்படிப் பாதிக்கப்படுமோ என்று யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தத் துறைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் போது, அவசர துணைக் கோரிக்கையிலே கொண்டுவரக்கூடிய சில திட்டங்களை நாம் ஒதுக்கியிருக்கலாம்.

ஆனால், அதே சமயத்தில் சில வரவேற்கத்தக்க திட்டங்களும் இதில் அமைந்திருக்கின்றன. குறிப்பாக, விவசாயத்திற்கு அவசரமாகத் தேவைப்படும் கிணறுகள் தோண்ட மான்யம் கொடுத்திருக்

11th September 1959] [Srimathi T. N. Anandanayaki]

கிருர்கள், கடன் உதவி செய்திருக்கிருர்கள். அது மிக மிக வர வேற்கத் தக்கது. காரணம், உணவுப் பிரச்னை இன்றைக்கு நாட் டில் 'பர்னிங் ப்ராப்ளம்' என்று சொல்கிருேமே, அந்த முறையில், மிகத் தீவிரமான பிரச்னையாக இருந்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பிரச்னையைச் சமாளிப்பதற்கு எவ்வளவு துரிதமாக நாம் எதைச் செய்கின்ருேமோ அதை யாரும் மறுக்க முடியாது. அது வரவேற்கத் தக்கது. அதுபோன்றுதான் சிறு கிராமங்களில் "நைட் ஸாயில் கம்போஸ்டிங்" அபிவிருத்திக்குப் பைலட் திட் டத்திற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ரூ. 1,79,000 செலவு செய்திருக்கிருர்கள். அது வரவேற்கத்தக்கது. இன்றைக்கு உணவு அதிகப்படியாக வேண்டிய நிலைமையில் இருக் கிருேம். உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டிய நிலையில் இருக் கும்போது திட்டங்களைத் திடீரென்று ஆரம்பிக்காவிட்டாலும் அதை வரவேற்கலாம். எதிர் பார்க்கக்கூடிய திட்டங்களை ஆரம் பத்திலேயே ஆரம்பித்து நடத்தலாம். முக்கியமான திட்டங்க ளாக இருந்தால் அதை பின்னுடி வருகிற காலத்தில் நடத்தி துணை மானிய கோரிக்கையைக் கேட்க முன் வரலாம். சில காரியங்கள் திடீரென்று வரக்கூடியதாக இருக்கலாம். அவைகளைத் துணை மானியக் கோரிக்கையில் எடுத்துக்கொள்ளலாம். இப்பொழுது ராமநாதபுரம் ஜில்லாவில் ரோடுகள் போட ஆரம்பித்திருக்கிருர் கள். ரொம்பவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அந்த மாவட்டத் தில் இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுப்பது நல்லது தான். இப்படிப்பட்ட நல்ல வேலைகளை தேவைப்படுகிற மாவட்டங்களுக்கு செய்ய வேண்டியதுதான். அது ரொம்பவும் அவசியமானது. அது ரொம்பவும் வரவேற்கக் கூடியதுதான். இப்படி வரவேற்கக்கூடிய பல துணை மானிய கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஆனால் சில மானியக் கோரிக்கைள் சாதாரணமாக முன்னதாகவே செய்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றன. அவைகளை உரிய காலத்தி லேயே சாங்ஷன் வாங்கிச் செய்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு விதத்தில்-இப்படி உப மானியக் கோரிக்கைகளைக் கொண்டு வருவதால் நல்லது ஏற்படுகிறது என்றும் சொல்லலாம். அடிக்கடி இப்படிக் கொண்டு வந்து சபையின் எண்ணத்தை தெரிந்து கொள்வதற்கும் இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது என்றும் வைத் துக்கொள்ளலாம். ஒவ்வொருவருடைய எண்ணங்களையும் பரி மாறிக்கொள்வதற்கு இதன் மூலம் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது என்றும் வைத்துக்கொள்ளலாம். இருந்தாலும் நான்கு கோடி ரூபாய் உபமானிய கோரிக்கையில் வருகிறது என்பதைப் பார்த் தால், அதிலும் 60 கோடி ரூபாய் வரவு செலவு செய்து கொண்டிருக் கக்கூடிய மாகாணத்தில் நான்கு கோடி ரூபாய் துணை மானியக் கோரிக்கையின் கீழ் வருகிறது என்பது அவ்வளவு நல்லது அல்ல.

மற்றும் ஒன்றும் சொல்லலாம். இப்படி நான்கு கோடி ரூபாய் துணை மானியக் கோரிக்கையில் வருவதால் அந்தந்த இலாகா அதி காரிகள் அவைகளில் அதிகப்படியான கவனம் செலுத்தவில்லை என்றுகூட தோன்றுகிறது. திட்டங்களை உடனடியாக ஆரம்பித்து நடத்த வேண்டும் அதற்கு வேண்டிய பணத்தை முன் கூட்டியே

சாங்ஷன் வாங்கிக் கொள்ளவேண்டும் என்ற "போர் சைடெட்நெஸ்" இல்லை என்று தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இப்படி அவர்களுக்கு முன் கூட்டியே யோசனை இருந்திருந்தால் இப்படி துணை மானியக் கோரிக்கை மூலம் கேட்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஆரம்ப வரவு செலவுத் திட்டத்திலேயே இப்படிப்பட்ட திட்டங்களைச் சேர்த்து பணத்தை வாங்கிக்கொண்டிருக்கலாம். அவர்களுக்கு வருங்காலத்தில் என்ன செலவு வரும் என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறதோ என்றுகூட யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. சாதாரணமான திட்டங்களாக இருந்தால் அதற்கு முன் கூட்டியே பணம் வாங்கிக்கொண்டிருக்கலாம். எதிர் பார்க்க முடியாத திட்டங்களாக இருந்தால் அதற்குத் தான் துணை மானியக் கோரிக்கை மூலம் பணம் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே முக்கியமான திட்டங்களைத் தவிர மற்ற சாதாரணமான திட்டங்களை முதலிலேயே பணம் வாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர துணை மானியக் கோரிக்கையில் வரக்கூடாது இனிமேலாவது அப்படித் திணிக்காமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அவரும் இதில் அதிகப்படியான கவனம் செலுத்தி திட்டங்களைப்பற்றி முன்னதாகவே ஆராய்ந்து முடிவு செய்து அதற்கு வேண்டிய பணத்தை முன்னதாகவே வாங்கிக்கொள்வது நலம் என்று கருதிக்கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக்கொண்டு வருவது தான் நலம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. JANGAL REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உபமானியக் கோரிக்கை செலவு சம்பந்தமாக பேச விரும்புகிறேன். விவசாயிகளுக்கு விவசாயம் சம்பந்தமாக போர் வெல் முக்கியமானது. நமது நாட்டில் இப்பொழுது உணவு பஞ்சம் இல்லை என்றாலும் வெளி மாகாணங்களுக்கு உணவுப் பண்டங்களை அனுப்புவதால் உணவு பஞ்சம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் இந்த மாகாணம் போய்க்கொண்டே இருந்தால் மாகாணத்திற்கு அதிகப்படியான உணவுப் பஞ்சம் தான் வரும். பவர் ட்ரில் போரிங் செட் வேண்டும் என்று கலெக்டரையும் தாலூகாவிலும் பல முறை விவசாயிகள் கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது ஒவ்வொரு தாலூகாவிலும் இருக்கக்கூடிய குளங்களில் தண்ணீர் கிடையாது. ஏரிகளிலும் தண்ணீர் கிடையாது. தண்ணீர் வந்து சுமார் மூன்று வருஷங்களாகிறது. கிராமங்களில் குடி தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. கிராமங்களில் ஒன்றிரண்டு கிணறுகள் தான் இருக்கின்றன. ஆழமான கிணறுகளிலிருந்து குடி தண்ணீர் எடுத்து வந்து மக்கள் குடித்து வாழ்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அவல நிலையைப் போக்க அந்த தாலூகாவுக்கு தனியாக ஒரு போர் ட்ரில் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மத்திய அரசாங்கத்திலிருந்து நிதி வாங்கி நமது ஜில்லாவிற்கு அதிலும் முக்கியமாக செஞ்சி தாலூகா

11th September 1959] [Sri M. Jangal Reddiar]

விற்கு என்று தனியாக போரிங் ட்ரில் செட் வாங்கிக் கொடுத்து மக்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க முன் வந்தால் அங்குள்ளவர்கள் நல்ல முறையில் வாழ முடியும். அங்கு அவல நிலை ஏற்பட்டிருப்பதால் அங்கு அதிகப்படியான பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது.

அடுத்தபடியாக உரம் விஷயமாக நமது மாகாணத்தில் செலவு செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நமது நாட்டிலிருந்து கடலைப் பிண்ணுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகச் சொல்லப் படுகிறது. அதனுல் நமது நாட்டின் விவசாயத்திற்கு பிண்ணுக்கு இல்லாமல் போய் விடுகிறது. அதனுல் அதன் விலை 27 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. இதற்கு முன்னதாக அது 2¼ அல்லது 2½ ரூபாய்க்குத்தான் விற்கப்பட்டு வந்தது. அப்படி விற்கப்பட்டும் செலவுக்கு கிடைப்பதாகவே இல்லை. கழிவு உரங்களை உபயோகப் படுத்துவோம் என்ருலும் ஜனங்களுக்கு அதற்கு வேண்டிய தெம்பு இல்லை. அதனுல் விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக் கிறது. ப்ளாக் மார்க்கெட்டில் கூட அது கிடைக்கவில்லை, விற்ப தாகவும் தெரியவில்லை. விவசாயிகளுக்கு சௌகர்யம் செய்கிருேம் என்று சொல்லுகிருர்களே தவிர அரசாங்கம் ஏதாவது செய்வ தாகவே தெரியவில்லை. விவசாயிகள் வேண்டிய இரும்பு வாங்க வேண்டுமானுல் அது ரூ. 9—10 என்று விற்றது. இப்பொழுது 70—75 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அம்மோனியம் சல்பேட் வாங்கவேண்டுமானுல் அது கிடைக்கவில்லை. 8 அல்லது 8½ ரூபாய்க்கு விற்றது இப்பொழுது மூட்டை 39 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. ப்ளாக் மார்க்கெட்டில் அது 55 ரூபாய்க்குக்கூட விற்கப் படுகிறது. விவசாயிகள் அதை ப்ளாக் மார்க்கெட்டில் வாங்கக் கூடிய நிலையில் தான் இருக்கிருர்கள். வண்டிகளுக்கு வேண்டிய இரும்புப்பட்டாக்களும் மற்ற இரும்பு சாமான்களும் ஒன்றுக்கு பத்து மடங்கு விலைக்கு விற்கப்படுகிறது. கண்ட்ரோல் விலைக்கு அது கிடைக்கவில்லை.

மின்சார அபிவிருத்தி செய்கிருேம் என்று சொல்லுகிருர்களே தவிர கிராமங்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய மின்சாரம் இன்னும் கிடைக்கவில்லை. பல கிராமங்களுக்கு இன்னும் அபி விருத்தி செய்யவில்லை. சில டவுன்களுக்கு மட்டும் லைட்களுக்குக் கொடுத்திருக்கிருர்கள். மற்றும் பல பஞ்சாயத்துகளுக்கும் கொடுத்திருக்கிருர்கள். கிராமங்களுக்கு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று பல கிராமங்களுக்கு இன்னும் கொடுக்கவே இல்லை. அதிலும் செஞ்சி தாலுகாவிலுள்ள கிராமங்களுக்கு இன்னும் கொடுக்கவே இல்லை. ஆகவே, செஞ்சி தாலுகாவிற்கு போரிங் வெல்களுக்கு ட்ரில்லிங் பவர் செட்டுகளைத் தனி யாகக் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு வேண் டிய மின்சாரமும் சப்ளை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் தாலுகாவில் சுமார் இரண்டு ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலம் இருக்கிறது. அதற்கு வேண்டிய பாசன வசதி இல்லாமல் இருக்கிறது. ராஜாக்கள் காலத்தில் அதற்கு என்று திட்டம் போட்டிருந்தார்கள். அது நிறைவேற வில்லை. அந்த நிலத்திற்கு வரக்கூடிய கால்வாய்களெல்லாம் பழுது

பட்டுக்கிடக்கிறது. அவைகளை உடனடியாக ரிபேர் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது சம்பந்தமாக பல முறை பி.டபிள்யூ.டி.-யைக் கேட்டுக்கொண்டும் இது வரையிலும் எந்த விதமான ஏற்பாடும் செய்யவில்லை. அங்குள்ள டெவலப்மெண்ட் இலாகா சரியாக வேலை பார்ப்பது இல்லை. அங்குள்ள டெமான்ஸ்ட்ரேட்டர்கள் நான்கு மூட்டை விதையை மட்டும் வைத்துக் கொண்டு அதை விவசாயிகளுக்கு சரிவர கொடுக்காமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இஞ்சினையும் வைத்துக்கொண்டு வருஷம் முழுவதும் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் கிராமங்களில் எந்தவிதமான ஸ்கீமையும் செய்ய முடியாமல் இருக்கிறது. ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு போரிங் செட்டு இருந்தால் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் இருக்கும். இதைப்பற்றி சட்ட மன்றத்தில் எவ்வளவோ சொல்லியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபீசில் நாலைந்து ஆபீசர்கள் இருப்பார்கள். அவர்கள் சரிவர செயல்படவில்லை. இந்த நிலைமையில் போய்க்கொண்டிருந்தால் நாட்டின் நிலைமை மோசமாகிவிடும். விவசாயக் கருவிகள் கிடைப்பது இல்லை. அதோடு உரம் சரியாகக் கிடைப்பது இல்லை. இந்த நிலைமை இப்படியே போய்க்கொண்டிருந்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாகாணத்தில் உணவுப் பஞ்சம் அதிகமாக ஏற்பட்டு உணவு பிரச்னை அதிகரித்து விடும். "உழுது விதைத்தறுப்பாருக் குணவில்லை, பிணிகள் பலவுண்டு" என்று பாரதியார் கூறியபடி தேசத்தில் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் உணவு அதிகமாகக் குறைந்து நாடு பாதிக்கப்படும். அதன் மூலம் அரசாங்கத்திற்கு பெரிய தொல்லையும் கிடைக்கும், ஏதாவது அபாயம் அதனால் வருங்காலத்தில் ஏற்படலாம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: It was originally decided that the Hon. Minister would begin his reply at 11-45 a.m. Now some more hon. Members want to speak and therefore, if the House has no objection we will continue the general discussion till 12 noon. The Hon. Minister will reply at 12 noon and he will take half-an-hour. Then we will take up Demand by Demand. According to rule 155 of the Assembly Rules, if the discussion on Demands is not finished by 1 o'clock, I will apply the guillotine at 1 o'clock and put the Demands to the vote of the House. But if hon. Members want to speak on cut motions, then they will have to limit their speeches up to 11-45 a.m. If they do not mind the application of guillotine, they can speak up to 12 noon. I want to know the opinion of the House.

(Several hon. Members rose).

SRI V. K. KOTHANDARAMAN: Sir, we shall continue the general discussion till 12 noon.

MR. SPEAKER: Yes. The Hon. Minister will reply at 12 noon.

11th September 1959]

SRI A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த உபமான்ய கோரிக்கையின்மீது பேசுகின்றபோது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்து அமைச்சர் ஸ்ரீ பி. எஸ். தேஷ்முக் அவர்களுடைய முயற்சியால் டெல்லியில் இருக்கிற உலக விவசாயப் பொருள் காட்சியில் கலந்துகொள்வதற்குக்கூட நம்முடைய அரசாங்கத்திற்கும் அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள். இதில் கலந்து கொள்ளவேண்டும் என்பதற்காகும் செலவுக்காக இப்போது 5 லட்சம் ரூபாய் கோரியிருக்கிறார்கள். இந்தப் பொருட் காட்சி 1959 டிசம்பர் மாதம் 11-ந் தேதி முதல் 1960 பிப்ரவரி 14-ந் தேதி வரையில் டெல்லியில் நடக்க இருக்கிறது. அதுவும் அரசாங்கச் சார்புள்ள மகாநாடு அல்ல. "பாரத கிருஷிக் சமாஜம்" என்பது தனிப்பட்டதொரு ஸ்தாபனம். யூனியன் மந்திரி அவர்கள் இதன் தலைவராக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இந்தத் தனிப்பட்ட ஸ்தாபனம் நடத்துகிற பொருள் காட்சியில் கலந்து கொள்வதற்காக நம்முடைய அரசாங்கம் பணத்தைச் செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லையென்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அதுவும் ஐந்து லட்சம் ரூபாய் கொஞ்சநஞ்சமல்ல. அதுவும் எத்தனையோ பல நல்ல காரியங்களை எல்லாம் செய்வதற்குப் பணம் இல்லை, பணம் இல்லை என்ற சாக்குப் போக்குச் சொல்கிற காலத்தில் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்தால் நடத்தப்படும் பொருட் காட்சியில் கலந்துகொள்ள 5 லட்சம் கேட்பது சரியல்ல, அது தேவையில்லாதது என்பது என்னுடைய முதல் குற்றச்சாட்டு. அதிலும் இந்த ஆண்டு கடைசியில் நடைபெறப்போகிற தினத்திற்காக இப்போதே முன்கூட்டியே பணம் கேட்கவேண்டிய அவசியம் கிடையாது. வேண்டுமானால் அந்தத் தொகையைக் குறைத்துக்கொள்ளலாம். பிறகு கொடுக்கின்ற நிலைமையை உண்டாக்கிக்கொள்ளலாமே தவிர இப்போதே அதிகமான பணத்தைக் கோரிப் பெற வேண்டியது அவசியம் இல்லையென்று சொல்ல விரும்புகிறேன். 11-30 a.m.

அதுமாத்திரம் இல்லாமல், அடுத்தாற்போல நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின் வாங்கிக் கொடுக்கவும், மோட்டார் வாங்கிக் கொடுப்பதற்கும் 10·85 லட்சம் ரூபாய் வேண்டுமென்று நமது அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். 1958-59-ம் வருஷ பட்ஜெட்டிலேயே, அதைத் தயாரிக்கிற நேரத்திலேயே அதற்குப் பணம் கோராமல் ஏன் விட்டார்கள் என்று கேட்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின் தேவை இல்லை என்று விட்டுவிட்டார்களா, அல்லது அதற்காக நிதி ஒதுக்குவதற்கு மறந்துவிட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் அப்போது கவனக் குறைவாக விட்டுவிட்டு இப்போது வந்து பணம் கேட்பது அவ்வளவு சரியாக இல்லையென்றும் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஏற்கனவேயே சென்ற பட்ஜெட்டில் 175 எண்ணெ என்ஜின்களையும், 475 மின்சார மோட்டார்களையும் வாங்கிக் கொடுப்பதற்கு 10 லட்சம் கோரிப் பெற்றார்

கள். ஆனால் அதே அளவுக்கு இப்போது 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் கோரியிருக்கிறார்கள். இப்படி 85 ஆயிரம் ரூபாய் அதிகப் பட்டிருப்பது இயந்திரங்களின் விலை ஏறிவிட்டதால்தான் என்று அரசாங்கம் சொல்லலாம். ஆனால் விலை ஏறாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கையை ஏன் எடுக்கவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தாது விட்டிருக்குமானால் அதுவும் ஒரு குறை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரம் இல்லாமல் நமது அமைச்சர் அவர்கள் பெண்களுடைய க்ஷேம நலத்திற்காக ஒரு மோட்டார் கார் வாங்குவதற்கு 19 ஆயிரத்து சொச்சம் கோரி, அதன் மெயின்டினன்ஸ், பெட்ரோல் முதலியவற்றுக்கும் பணம் கேட்கிறார். இவ்வளவு செலவில் இப்போது கார் வாங்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? மத்திய அரசாங்கத்திடம் இருந்து வேண்டுமானால் இதற்குப் பணம் வாங்கிக்கொள்ளச் செய்யலாமே தவிர நாம் செலவு செய்யவேண்டியது அவசியம் இல்லை. கார் வாங்கிக் கொடுத்தோம் என்றாலும் அமைச்சர் கார்களுக்குப் பின்னாலே அந்த ஸ்தாபனத்தின் போர்டைத் தாங்கிக்கொண்டு இந்தக் காரும் பின் போவதைதற்குப் பயன்படப்போகிறதே தவிர வேறு என்ன பயன் இருக்கப்போகிறது என்றுதான் எனக்குத் தெரியவில்லை. அரசாங்கம் எந்த நோக்கத்தோடு அந்த இலாகாவை நிறுவி பாதுகாத்து வருகிறதோ அந்த நோக்கத்தை ஈடேற்றப் பயன்படவில்லை என்பதை அரசாங்கமும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

அடுத்தாற்போல பூதான ஆக்டை 1958-ம் வருஷத்திலே நாம் இங்கே நிறைவேற்றிவிட்டோம். ஆனால் அதற்குத் திட்டங்கள் தீட்டி, நிர்வாக இயந்திரத்தை அமைத்து இதுவரையில் செயல் படாது, இப்போது அதற்கென்று நிதி கோரியிருக்கிறார்கள். இது வரையில் அதற்குவேண்டிய நடவடிக்கைகளை முன்கூட்டி எடுக்காதது குறை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக போலீஸ் நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்காக ஒரு லட்சம் ரூபாய் செலவழித்துவிட்டு இப்போது சபையின் அனுமதி கோரியிருக்கிறார்கள். அதுவும் ஒரு போலீஸ் ஜில்லாவிற்கு 2 ஆயிரம் ரூபாய் என்று மட்டும் செலவழித்துவிட்டு பாக்கியை நகரத்தில் செலவிட்டிருக்கிறார்கள். போலீஸ் ஜில்லாக்கள் என்று 14 பிரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். 14 ஜில்லாக்கள் என்று எப்படிப் பிரித்திருக்கிறார்கள் என்கிற விவரம் எனக்குத் தெரியவில்லை. நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் என்று அங்கங்கே வெறும் வாண வேடிக்கைகள் கொண்டாடி இருக்கிறார்களே தவிர அந்த இலாகாவில் இன்று வேலை செய்து வருகிறவர்களுக்கோ, ஓய்வு பெற்றவர்களுக்கோ ஒரு அனுகூலம் செய்யும் வகையில் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. ஒவ்வொரு போலீஸ்காரனுக்கும் ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தைதான் இருக்கும் என்கிற எண்ணமோ என்னமோ ஒரு ஆண் குழந்தைக்கும், ஒரு பெண் குழந்தைக்கும் சட்டை வாங்கிக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். இப்படி வாங்கிக்கொடுத்திருப்ப

தன் காரணமாக அவர்களுக்கு நாம் நன்மையைக் காட்டிலும், உபத்திரவத்தைத்தான் கொடுத்திருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஒரு சட்டையை எடுத்துக்கொண்டு அவன் வீட்டுக்குப் போக, அவனது நான்கு ஐந்து குழந்தைகளும் "எனக்கென்று, உனக்கென்று" சண்டையோ, மனைவியாட்டி தனக்கும் இல்லையே என்று ஏங்க அவனுக்கு ஏகத் தொல்லைகளைத்தான் உண்டாக்கியிருக்கிறோம். இதற்குப் பதிலாக இப்போது நாம் ஒரு லட்சம் செலவழித்ததில் குறைவு இல்லை—இதிலேயே ஒவ்வொருவருடைய குடும்பத்திற்கும் 100 ரூபாய் என்று கொடுத்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். அப்படி எல்லாம் இல்லாது இப்படிப் பலதுறைகளில் நல்லமுறையில் எதிர்பார்த்துச் செலவிட்டிருக்க வேண்டியதற்குப் பதிலாக, கண்டபடி செலவிட்டுவிட்டு, நமது நிதி அமைச்சர் அவர்கள் இவை எல்லாம் எதிர்பாராத செலவுகள், என்று பணம் கோரி வந்திருப்பதானது, இதற்கு எவ்வாறும் பணம் அனுமதிப்பது சரியல்ல என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உபமானியக் கோரிக்கையின் மீது 4 கோடி ரூபாய் கேட்கப்படுகிறது. ஆனால் எனக்கு முன்பு பல மெம்பர்கள் எதிர்பாராத செலவுகள் என்று கோரப்பட்டிருக்கிறது சரியல்ல, சரியான முறையில் எதிர்பார்த்து இவை கோரி செலவு செய்யப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டார்கள். இன்னொரு உபமான்யக் கோரிக்கைகூட வருமோ என்கிற ஐயப்பாடு இந்த முகப்புரையில் இருக்கிறது. அப்படிக் கொடுத்திருப்பது உறுதியாக வரும் என்கிற எண்ணத்தைத்தான் கொடுக்கிறது.

இங்கு கொடுத்திருக்கக்கூடிய செலவினங்களைப் பார்க்கும் போது காவலர் நூற்றாண்டு விழாவிற்கு ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. காவலர் நூற்றாண்டு விழாவை எதிர்ப்பார்த்திருக்க முடியாமல் இருந்திருக்க முடியாது. ஒரு வேளை இவ்வளவு விரிவாகக் கொண்டாடுவதற்கு முன்பு திட்டமிடாமல் இருந்திருக்கலாம்.

அடுத்தபடியாக விவசாய இலாகாவிலிருந்து தென்னைமர விஸ்தரிப்பு செய்வதற்காக ஒரு உபமான்யம் கோரப்பட்டுள்ளது. சென்ற சட்டசபை வரவு செலவு விவாதத்தில் தென்னங்கன்று வளர்ப்பதற்கு வைத்திருக்கக்கூடிய தொகை போதாது. மக்களிடமிருந்து வந்த தேவையைப் பார்க்கும்போது இந்தத் தொகை இன்னும் போதாது. இந்தத் தொகை 18 ஆயிரம் கன்றுகள் வளர்ப்பதற்கு இன்னும் அதிகமாக வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். ஆகவே இந்த இனத்தில் அடுத்தபடியாக உபமான்யக் கோரிக்கை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுபோலவே கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும், ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மேற்பார்வையிடுவதற்காக இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதற்கு அதிக பணம் கோரப்படுகிறது. இந்தச் செலவை முன்னாலேயே எதிர்

பார்த்திருக்க முடியாமல் இருந்திருக்க முடியாது. எற்கனவே இந்த மேற்பார்வையாளே வேறு ஏதாவது இனத்தில் நியமிக்கலாம் என்று நினைத்திருந்தார்களா அல்லது வேறு இலாக்காவின் பொறுப்பில் கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

இது மாதிரி ராமனுதபுரத்தில் ரோடுகளை அபிவிருத்தி செய்வதைப் பொறுத்தவரையில் முதுகளத்தூர் சம்பவத்திற்குப் பின் கடந்த நிதி அறிக்கை சமர்ப்பித்த காலத்தில்கூட விரிவாக பல ஏற்பாட்டை எடுத்துச் சொன்னர்கள். இப்பொழுது அது "நியூ சர்விஸ்" என்று சொல்லப்படுகிறது. 1957-58-ம் வருஷத்தில் மழையினுல் பாழடைந்துபோன ரோடுகளை ரிப்பேர் செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட கிராண்டுக்கும் இப்பொழுது நியூ சர்விஸ் என்று சொல்லி உபமான்யம் கோரப்படுகிறது.

அடுத்தபடியாக சர்க்கார் அச்சுக்கூடத்தைப் பொறுத்தவரை ஒரு சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். அந்த அச்சுக்கூடத்தில் இப்போது இரண்டாவது ஷிப்ட் ஏற்படுத்தியிருக்கிருர்கள். அதற்காக இங்கு வேலை செய்பவர்களுக்கு அதிகமாக காம்பன்சேஷன் தருவதற்கு உபமான்யம் கோரப்படுகிறது. முன்பு ஓவர் டைம் வேஜஸ் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அதற்குப் பதிலாக காம்பன்சேஷன் கொடுக்கிருர்கள். இது நியூ சர்விசாக சேர்க்கப்பட்டிருக்கிறது. கழிந்த ஆண்டிலேயே அவர்களுக்கு அப்படி காம்பன்சேஷன் கொடுக்கவேண்டி வரும் என்று எஸ்டிமேட் கமிட்டி சிபார்சு செய்திருந்தது. இது புதிய இனமாக இருக்கமுடியாது. இதே சமயத்தில் ஒரு விஷயம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஷிப்ட் சிஸ்டம் கொண்டுவந்தபிறகு கவர்ன்மெண்ட் பிரஸ்சில் முன்னைவிட அதிகமான வேலை செய்யப்படும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனல் இப்பொழுது எதிர்ப்பார்க்கப்பட்டபடி அங்கு அதிகமான வேலை செய்யப்படவில்லை என்று தெரிகிறது. ஷிப்ட் சிஸ்டம் வந்த பிறகு அவுட் டர்ன் குறைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையா என்று தெரிய அவாவுறுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : யாரோ சொன்னதை வைத்துப் பேசக்கூடாது.

* SRI K. SATTANATHA KARAYALAR : காஸ்ட் அக்கவுன்டிங் அடிப்படையிலேதான் தமிழ்நாட்டிலுள்ள ஹோ அண்டு கம்பெனி போன்ற மிகப்பெரிய அச்சுக்கூடங்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு டிபார்ட்மெண்ட் வாரியாக காஸ்ட் அக்கவுண்டிங் சிஸ்டம் கையாளப்படுகிறது. ஆகையினுல் வேலை என்ன நடந்தது, ரேட் எவ்வளவு போடவேண்டும்—மொத்தம் என்ன வரும்? அவுட்டர்ன் எவ்வளவு என்று கணக்கு வைத்திருக்கிருர்கள். அந்த அடிப்படையில் காஸ்ட் அக்கவுண்ட் முறையில் கணக்குகளை வைத்து சென்ற ஆண்டு இவ்வளவு வேலை செய்திருக்கிருேம், இந்த ஆண்டு இவ்வளவு அவுட்டர்ன் இருக்கிறது, ஆகவே இவ்வளவு உற்பத்தி அதிகமாக இருக்கிறதென்று சொன்னல் இதை

நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அங்கு உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டிருப்பவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இல்லாத காரணத்தினால்தான் இங்கு உற்பத்தி குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று நான் எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக இப்போது இருக்கக்கூடிய செக் போஸ்ட் தொடர்ந்து நடக்கவேண்டுமா என்பது கொள்கை அடிப்படையில் தான் முடிவு செய்ய வேண்டும். செக் போஸ்டுகளை நல்ல முறையில் விரிவுபட அமைக்கவேண்டும். ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் செக் போஸ்ட் இருப்பதினால் இதிலே பல கள்ளக் கடத்தல் செய்துகொண்டு போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தான்யங்கள் இங்கிருந்து அடுத்த ராஜ்யத்திற்கு போவதைத் தடுப்பதற்காக செக் போஸ்ட் ஏற்படுத்துவதைவிட எவ்வளவு போகிறது என்பதைக் கண்காணிப்பதற்காகத்தான் செக் போஸ்ட்கள் ஏற்படுத்தப்படுகின்றன. சிற்சில சமயங்களில் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் இதை மேற்பார்வை இடுவதற்கு வந்தால் ரைஸ் மில்களை மில் சொந்தக்காரர்கள் வேலை செய்யாமல் நிறுத்தி விடுகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு எவ்வளவு அனுப்புகிறார்கள் என்று கணக்கு எடுத்து அந்த அடிப்படையில் கொள்முதல் செய்துவிடுகிறார்கள். கொள்முதல் கொடுத்தால் வியாபாரியே செய்யமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு தெரியாமல் இருப்பதற்கு அந்தக் காலக்கட்டங்களில் ரைஸ் மில்களில் வேலை செய்யாமல் நிறுத்திவிடுகிறார்கள். ரைஸ் மில் வேலை செய்யாமல் நிறுத்திவிட்டால் அந்த வட்டாரத்தில் அரிசி கிடைக்காது போய்விடுகிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு வேண்டுமானால் அதிகமான நியாயவிலைக் கடைகள் திறக்கப்படவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். கடைசியாக நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால் இந்த உப மான்யக் கோரிக்கையில் 4 கோடி ரூபாய் அளவு கோரப்படுகிறது. இதில் ஒரு கணிசமான பகுதி முதல் வரவுசெலவு திட்டத்திலே வந்திருக்கக்கூடும். அந்தந்த இலாக்காக்களில் காலாகாலத்தில் திட்டங்கள் போட்டிருந்தால் ஒரிஜினல் பட்ஜட்டிலே உட்படுத்தப்பட்டிருக்க முடியும். இனியாவது இம்மாதிரி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI N. MARUDACHALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உப மான்யக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதில் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகக் குறைவானது என்று சொல்ல விரும்புகிறேன். அதோடு ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டங்களுக்கு சில இடங்களில்தான் பணம் ஒதுக்கப்படுகிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் அதிகமான பணம் ஒதுக்கப்படவில்லை. இன்றைக்குப் பல ஜில்லாக்களில் ஹரிஜனங்களுக்கு ஹாஸ்டல்கள் இருக்கின்றன. ஆனால் கோயம்புத்தூர் ஜில்லாவில் ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. நகரத்தில் இருக்கக்கூடியவர்கள் இந்த ஹாஸ்டலில் இருக்கக்

கூடாது, கிராமத்தில் இருப்பவர்கள்தான் இந்த ஹாஸ்டலில் இருக்கவேண்டுமென்று ஒரு சட்டம் இருக்கிறது. கோயம்புத்தூரில் இருக்கும் ஹரிஜனங்கள் இந்த ஹாஸ்டலிலே அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் அப்படி அனுமதிக்கப்பட்டிருந்தால் பல ஹரிஜனங்கள் இந்த ஹாஸ்டலிலே வந்து சேர்ந்திருப்பார்கள். அப்படியில்லாமல் நகரத்திற்கு 5 மைலுக்கு அப்பால் உள்ளவர்கள்தான் இந்த ஹாஸ்டலில் தங்கலாம் என்று விதி இருக்கிறது. அதை ரத்து செய்யவேண்டும். அல்லது அங்கு இருக்கும் ஹரிஜனங்களுக்குத் தனியாகவாவது ஒரு ஹாஸ்டல் கட்டிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

THE HON. SRI P. KAKKAN: கோவையிலே இருக்கிற ஹாஸ்டலில் அங்கு இருக்கிற பிள்ளைகள் சேரக்கூடாது என்ற விதியில்லை.

* SRI N. MARUDACHALAM: ஆனால் அங்கு இருக்கும் ஹாஸ்டல் அதிகாரிகள் அவ்வாறு சொல்லுகிறார்கள். கோவை நகரத்தில் உள்ளவர்கள் இந்த ஹாஸ்டலில் சேர்வதை தவிர்க்கிறார்கள். கோவை நகரத்திலுள்ளவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருந்தால் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும்.

கோவை நகரத்தில் தண்ணீர்த் தட்டு அதிகமாக இருக்கிறது. தண்ணீர்த் தட்டை நீக்குவதற்கு அரசாங்கம் உதவி புரிய வேண்டும். அதற்குப் பணம் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் கோவை ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக இந்த ஜில்லாவிற்குத் தண்ணீர்த் திட்டத்திற்கு அதிகமான பணம் ஒதுக்கக்கூடாதென்று விட்டுவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. ஆகவே கோவை தண்ணீர்த் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கப்படவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். இங்குள்ள இரண்டு பைப்புகளையும் லிங்க் செய்துவிட்டால் உடனடியாக எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். இதுபற்றி ஐ.எல்.பி. ஆபீசுக்குகூட தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் உதவி புரிந்தால் மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். மூன்றாவதாக வாத்தியார்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை இப்பொழுது சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது. பல பகுதிகளில் இருக்கும் மாவட்டக் கழகங்களே வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அவர்களுக்கு வசதி இருந்தால் வீடு கட்டிக் கொடுப்பார்கள். வசதி இல்லாத இடங்களில் அரசாங்கமே வீடு கட்டும் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். கிராமங்களில் வசித்து வரும் வாத்தியார்கள் சரியான வீடு கிடைக்காததினால் அந்தக் கிராமங்களை விட்டு அந்த அந்த கிராமப்பகுதிகளிலேயே வீடு கட்டிக் கொடுக்கவேண்டும். இதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டும்.

11th September 1959] [Sri N. Marudachalam]

சென்ற மாதத்தில் ஒரு ஹரிஜன வாத்தியார் அந்தக் கிராமத்தில் வீட்டு வசதி இல்லாமல் வெளியே வர வேண்டியிருந்தது. இந்த மாதிரி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வாத்தியார்கள் என்று கருதக்கூடிய ஹரிஜன வாத்தியார்கள் ரொம்பவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே அரசாங்கம் அவர்களுக்கு உடனடியாக அந்த அந்தப் பகுதிகளில் வீடு கட்டித் தர வேண்டும்.

நகரத்திலிருக்கும் வாத்தியார்களுக்கு வீட்டிற்காக 7 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்களிடமிருந்து வீட்டு வாடகை என்று 15 ரூபாய் பிடிக்கப்படுகிறது. வீட்டு வாடகை அலவன்ஸ் என்று கொடுக்கப்படும் 7 ரூபாயைத்தான் வீட்டு வாடகைக்குப் பிடித்துக்கொள்ளவேண்டும் என்று கோவை நகர சபை ஒரு தீர்மானம் அனுப்பியிருக்கிறது. அதைச் சர்க்கார் ஒத்துக்கொண்டால் நகரசபைக்கும் உதவியாக இருக்கும். வாத்தியார்களுக்கும் சௌகரியமாக இருக்கும். அவர்கள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு ஊக்கமாக இருக்கும். இவைகளை சர்க்கார் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri K. ANBAZHAGAN : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இடைக்காலத்தில் அளிக்கப்பட்டுள்ள துணை செலவு இன மான்ய கோரிக்கையை ஒட்டி இரண்டொரு வார்த்தைகள் சொல்வதற்காக நான் இங்கு நிற்கிறேன். இந்த ஆண்டு துவக்கத்தில் தரப்பட்ட நிதி வரவு செலவு திட்டம் மிக செம்மையான திட்டமாக இருந்திருக்குமேயானால் இடைக்காலத்திலே மிகப் பெரிய தொகையைத் துணை மதிப்பீட்டிலே தரவேண்டிய நிலைமை அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்காது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்குமானால், இடைக்காலத்திலே ஏற்பட்ட எதிர்பாராத செலவு இனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 150 லட்ச ரூபாய் என்ற அந்த தொகை அளவிலேதான் துணை மதிப்பீட்டில் அமைந்து இருக்கவேண்டும். ஆனால் இப்பொழுது செலவு 4 கோடி அளவிலே எட்டிப் பார்க்கிறது. அப்படி 4 கோடி அளவிலே எட்டிப் பார்க்கிற நேரத்திலே, இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் உண்மையாகவே நன்மையாகவே இருக்குமா என்று தெரியவில்லை. வரவு செலவு திட்டத்தை எப்பொழுது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் மாற்றி அமைக்கலாம் என்றிருக்குமானால் இடைவெளி அதிகப்படியாகவே இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. தரப்பட்டுள்ள துணை மதிப்பீட்டில் அரசினர், வாணிபத் திட்டத்தில் உள் துறை தணிக்கையில் தணிக்கையாளர்களின் செலவு தரப்பட்டிருக்கிறது. இது அந்த இலாகாவை ஒட்டி அமைக்கப்பட்ட செலவு. இப்பொழுது 25-வது தரப்பில் பொது நிர்வாகத்தின்கீழ் அது காட்டப்பட்டிருக்கிறது. அந்தத் தரப்பின் கீழே மற்ற சில வகை செலவுகளையும் காண்பித்து 2 லட்சம் ரூபாய் என்று கணக்குக் காட்டி இருக்கிறார்கள். உண்மையாகவே இந்தச் செலவு அடிப்படைக் கொள்கையை ஒட்டியது. திடீர் என்று ஏற்பட்ட நிர்வாக மாற்றம் அல்ல. திடீர் என்று நிர்வாக மாற்றம் ஏற்பட்டிருக்குமானால் அதற்கான தொகையை

ஏற்றுக்கொள்வதில் இந்த அவை எந்த விதமான மாறுபட்ட கருத்தும் தெரிவிக்க தேவை இருக்காது. ஏதாவது கொள்கை மாற்றம் இருக்குமானுல் அதை பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் பொழுதே தீர்மானித்து இருக்கவேண்டும். அல்லது அடுத்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்வரை தள்ளிப் போடவேண்டும். துணை மதிப்பீட்டில் இந்தக் கொள்கைப் பிரச்னையை ஏன் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன். இது அரசியல் பொதுக் கொள்கையைச் சார்ந்தது அல்ல. அரசாங்கம் நடத்திச் செல்கின்ற அமைப்பு முறையில் ஏதாவது மாற்றம் இருக்குமானுல் 6 மாதத்திற்கு முன்பே பார்த்து இருக்கலாம். அல்லது 6 மாதத்திற்கு ஒத்திப் போட்டிருக்கவேண்டும்.

1957-58-ம் ஆண்டு அப்ரோப்பிரியேஷன் அக்கௌண்டையும் 1959-ம் ஆண்டு ஆடிட் ரிபோர்ட்டையும் நாம் பார்க்கும்போது முதலில் கேட்கப்பட்ட தொகையைவிட, இடைக்காலத்தில் சப்ளிமெண்டரி கிராண்டில் கேட்கப்பட்ட தொகையைவிட உண்மையாகவே மிக அதிகமான தொகை கடைசியில் மீதி இருந்திருக்கிறது. அந்தக் குறிப்பேட்டில் சில குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது குறிப்பில் 85,700 ரூபாய் சப்ளிமெண்டரி கிராண்டாக கேட்கப்பட்டிருக்கிறது. ஆனுல் செலவழிக்கப்படாமல் மிச்சமான தொகை 1,08,000 ரூபாய்.

ஒன்பதாவது குறிப்பில் 1,60,000 ரூபாய் சப்ளிமெண்டரி கிராண்ட்டாகக் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனுல் மிகுதியான தொகை 2,43,000 ரூபாய்.

பன்னிரண்டாவது குறிப்பில் 1,17,00,000 ரூபாய் சப்ளிமெண்டரி கிராண்டாகக் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனுல் மிகுதியான மான தொகை 90,70,000 ரூபாய்.

கேட்கப்பட்ட தொகைக்கும், செலவழிக்கப்பட்ட தொகைக்கும் அதிக தொடர்பு, ஒற்றுமை இல்லை என்று சொன்னுல், ஏறத்தாழ மிக அதிகமாக இருக்கிறது என்று சொன்னுல், நிதி வரவு செலவு திட்டம் உண்மையாகவே வெறும் கனவுத் திட்டம் ஆகிவிடும் என்று நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். புதிய திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டுமானுல் அவைகளைக் குறித்து முன்கூட்டியே யோசிக்கவேண்டும். திடீரென்று புதிய திட்டங்களை மேற்கொள்வதில் வரவு செலவு திட்டத்தில் இடர்ப்பாடு நேரிடும். சென்னை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் "நாங்கள் தனிப்பட்ட அதிகாரம் செலுத்துபவர் அல்ல. எங்களுக்கு அதிகம் கடன் ஏற்பட்டுவிட்டால் மத்திய அரசாங்கத்தைக் கேட்போம்" என்று அவர்கள் சொல்லக்கூடும். அதே நேரத்திலே இப்படி செலவு ஏற்படும் பொறுப்பு பொது மக்களை பாதிக்கும். அப்படிப் பாதிப்பதற்கு இடம் தரக்கூடாது. இப்படி இடைக்காலத்தில் துணை அறிக்கையில் அதிகத் தொகை ஒதுக்க வேண்டிய நிலைமையைத் தவிர்ப்பதற்காக நிதி அமைச்சருக்கு நான் ஒரு யோசனை சொல்லுவேன். மார்ச்சு மாதம் 2-ந் தேதி முதல் பட்ஜெட்டை நிதி அமைச்சர் அவர்கள் வழங்குகிறுர்கள்.

அந்த பட்ஜெட்டை ஏறத்தாழ ஜனவரி மாதத்தில் அளிக்கவேண்டும். அந்த பட்ஜட்டின் மீது நடக்கும் விவாதத்தைப் பார்த்தும், கொள்கை மாற்றங்களுக்கு ஏற்பவும் மார்ச்சு மாதத்தில் துணை மதிப்பீட்டை அளிக்கவேண்டும். அப்பொழுது அந்த ஆண்டு முழுவதும் சற்று செம்மையான முறையில் பட்ஜெட் போடும் நிலைமை ஏற்படும்.

வீடு கட்ட மனை வாங்க வேண்டும், அதை பொது மக்களுக்கு ஒதுக்கி வைக்கவேண்டு மென்ற ஒரு திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி பெரிய நகரங்களைச் சுற்றியுள்ள பரந்த நிலங்களை வாங்கி ஒதுக்கி வைக்கவேண்டும் என்பது உத்தேசம். அதை பொது மக்களுக்கு குறைந்த விலையில் வழங்குவது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி செய்யாவிடில் நிலத்தின் விலை இஷ்டப்படி ஏற்றப்படும். இந்தக் கொள்கையை ஒட்டி, திரு எ. பாட்சா சாகிப், திரு. வி. பாலசுப்ரமண்ய கிராமணி இவர்களுக்குச் சொந்தமானவையும் 58.35 ஏக்கரா பரப்புள்ளவையும் சென்னை அடையாறு, லாட்டிஸ் பாலம் சாலையின் அருகே உள்ள ஊரூர் காளிகுன்றம் கிராமங்களில் இருக்கும் நிலங்களையும் வாங்கியிருக்கின்றனர். அரசாங்கத்தின் கொள்கைபடி சென்னை நகர சுற்றுப்புறங்களிலுள்ள பல பகுதிகளையும் எடுக்கவேண்டும். ஏதோ ஒரு இடத்தில் ஓரிருவருக்குச் சொந்தமான 58 ஏக்கரா நிலங்களை மட்டும் ஏன் வாங்க வேண்டும், அதை துணை மதிப்பீட்டில் மான்யமாக ஏன் கோர வேண்டும் என்று எனக்கு தெரியவில்லை. அரசாங்கத்தின் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால் இதற்கான ஒரு பெரிய திட்டம் இருக்கவேண்டும். சில்லறையாக நிலங்களை வாங்கி, அதற்கான மான்யக் கோரிக்கையை அவசரமாக துணை மதிப்பீட்டில் தரவேண்டிய அவசியம் எனக்குத் தெரியவில்லை.

காவலர் துறை நூற்றாண்டுக்காக செலவிடப்பட்ட தொகையை நான் குற்றமாக கருதவில்லை. உண்மையிலே பார்க்கப்போனால் காவலர் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு தங்கள் கடமையைச் செய்வதற்கு இது உற்சாகத்தை ஊட்டும் என்று நான் நினைக்கிறேன். இதை ஒட்டி நூற்றாண்டு விழா நடந்த நேரத்தில் சாதாரணமாக 5½ அடி உயரம் உள்ள போலீஸ்காரர்களை 7½ அடி உயரமாக உயர்த்தி, அதன் மூலம் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றிருக்கிறார்கள். இதை எடுத்துச் சொன்னவர் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் என்று கருதுகிறேன். இதன் மூலம் தென்னகம் உயர்கிறது, எல்லோரும் கண்டு களியுங்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். இதை நான் கூறவில்லை. இதனால் தென்னகம் உயர்கிறது என்ற கருத்தை நான் சொல்லியிருந்தால் வேறு விதமாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவர்கள் நல்ல எண்ணத்தோடுதான் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அக்கறை அதிகம் உள்ளவர். போலீசார் 5½ அடியிலிருந்து 7½ அடி உயர்வதாக காண்பிக்கப்படுவதால் தென்னகம் உயர்கிறது என்ற அளவிலே சொல்ல முற்பட்டால் நான் அவரை பாராட்ட முடியாது. அமைச்சர் அந்த முறையை கையாள வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri K. Anbazhagan] [11th September 1959

என்றாலும் போலீஸ்காரர்கள் சரியான முறையில் நிறைவேற்றி னார்கள் என்று தான் நான் கருதுகிறேன். நாம் சொல்லக்கூடிய கருத்தில் அவர்கள் எடுத்துக் கொண்டார்களா என்று நமக்கு தெரியவில்லை. எவ்விதம் இருந்தாலும் காவலாளர்கள் எந்த முறையில் இருக்கவேண்டும் என்பதற்கு வழிகோலக் கூடிய அளவில் அவர்கள் இருக்கவேண்டும். அதோடு இம்மாதிரி துணை மானிய கோரிக்கையைக் கொண்டு வருவதை தவிர்க்கின்ற வகை யில் மொத்த மான்ய கோரிக்கையிலேயே ஜனவரி மாதத்தில் கொண்டு வந்து மார்ச்சு-ஏப்ரல் மாதத்தில் இம்மாதிரியான செலவு களுக்கு அனுமதி வாங்கிக்கொள்வது என்ற முறை இருக்குமானால் நன்மையாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு தெரி

12 noon. வித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, துணை மான்யக் கோரிக்கையின்மீது பல அங்கத்தினர் கள் பல கருத்துக்களை தெரிவித்ததற்காக நன்றி செலுத்திக் கொள் கிறேன். மேலும் விவாதம் என்றால் அதற்கு ஒரு பண்பு உண்டு. குறைகளை கூறுகின்றவர்கள் தாங்கள் சொன்ன குறைகளுக்கு என்ன பதில் அளிக்கிறார்கள் என்று அறிந்து கொள்வதற்காக மேலும் சபையில் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாங்கள் மாத்திரம் குறைகளை சொல்லிவிட்டு வெளியே போய்விட்டால் அதற்கு பதில் என்ன சொல்லுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியாது. ஆகவே பதிலைக் கேட்பதற்கும் அவர்கள் சபையில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் எதிர் கட்சியிலுள்ளவர்களுக்கு மட்டும் இதைச் சொல்லவில்லை. ஆளும் கட்சியில் இருக்கின்றவர் களுக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். அதிலும் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் எதிர் கட்சியிலுள்ளவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கக்கூடிய அளவுக்கு கண்டிப்பாக சபையில் இருந்து பதில்களை கேட்கவேண்டும் என்பதை அவர்களுக்கு தெரி வித்துக்கொள்கிறேன். அவ்விதம் நடந்து கொள்வது தான் விவா தத்திற்கு ஏற்ற பண்பாக அமைய முடியும் என்பதையும் தெரிவித் துக்கொள்கிறேன். இதிலே முக்கியமாக, அநேக அங்கத்தினர் களுடைய பல்லவி, (குறுக்கீடு), ஆம் பல்லவி என்று சொல்லுவதில் தவறு ஒன்றும் இல்லை, திரும்ப திரும்ப சொல்வது தான் பல்லவி; திரும்ப திரும்ப சொன்னது இதுமாதிரியாக துணை மான்ய கோரிக்கை கொண்டு வருவது சரியல்ல, பட்ஜெட் தயா ரிக்கையிலேயே, இந்தச் செலவுகளை எல்லாம் சேர்த்திருக்க வேண்டும் என்பது ஆகும். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில், எனக்கு இருக்கின்ற அனுபவத்தை பொறுத்தமட்டில், இவ்விதம் துணை மான்யக் கோரிக்கை கொண்டு வருவதை குறை சொல்லுவதற்கு நான் தயாராகவில்லை. இனிமேல் வரக் கூடியவர்கள் வேண்டுமானால், பட்ஜெட்டிலேயே சேர்த்து, துணை மான்யக் கோரிக்கை கொண்டு வராமல் பார்த்துக் கொள்வதாய் இருக்கலாம். ஆனால் அப்போதும், அதாவது யாருக்கும், துணை மான்யக் கோரிக்கை கொண்டு வராமல் இருக்க முடியாது என்

11th September 1959] [Sri C. Subramaniam]

பதையும், என் அது முடியாது என்பதையும், எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பட்ஜெட் தயாரிக்கும் போது பொதுவாக அக்டோபர் மாதத்திலிருந்து இதற்கான வேலை ஆரம்பிக்கப்படுகிறது. இவ்விதம் வேலை ஆரம்பித்து நடக்கும்போது முடிவாகிற, அதாவது டிஸம்பர் மாதம் வரை முடிவாகிற எல்லாத் திட்டங்களையும் இதில் சேர்த்துக்கொள்ள முடிகின்றது. அதன் பின்னால் இரண்டாவது பகுதியில் வருகின்ற புதிய திட்டங்களை எல்லாம் சேர்த்துத்தான் பெப்ருவரி மாதத்தில் பட்ஜெட் கொண்டு வர முடிகின்றது. இவ்விதம் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் சேர்க்கபடவேண்டிய வற்றை எல்லாம் சேர்த்துத்தான் பெப்ருவரி கடைசியில் சபை முன் வைக்க முடிகின்றது. ஸ்ரீ அன்பழகன் கூறியது மாதிரி பட்ஜெட்டை ஜனவரி மாதத்திலே கொண்டு வர முடியுமா என்பதைப் பற்றியும் நாம் ஆலோசிக்கவேண்டும். அவ்விதம் ஜனவரி மாதமே கொண்டு வரவேண்டுமென்றால் இப்போது அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் வேலை இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே, அதாவது ஆகஸ்ட் மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதனால் இன்னும் அதிகமான கஷ்டங்கள் தான் ஏற்படுமே தவிர விசேஷமான நன்மை எதுவும் ஏற்படப்போவதில்லை என்பது சந்தேகமில்லை. எவ்வளவோ காரியங்களை எல்லாம் முன் கூட்டி பார்ப்பதற்காகத்தான் அக்டோபர் மாதத்தில் இந்த வேலையை ஆரம்பிப்பது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதல்லாமல் ஜனவரி அல்லது பெப்ருவரி அல்லது மார்ச் மாதத்தில் கொண்டு வரலாம் என்று வைத்திருப்பது ஒரு கால வரம்புக்காகத் தான், அதை மாற்றுவதில் பல கஷ்டங்கள் தான் ஏற்படும். ஆகவே அதையும் நாம் ஆலோசித்துப்பார்க்க வேண்டும். இப்போது இருக்கின்ற முறைப்படி பார்த்தால் டிசம்பர் மாதம் வரையிலும் முடிவாக்கப் பட்டிருக்கின்ற திட்டங்களின் கணக்கையும், அது வரையிலும் திட்டங்களுக்கு என்று கணக்காக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிற செலவுகளையும்தான் அதில் சேர்க்க முடியும். அதன் பின்னால் அல்லது அதற்குள்ளேயே பரிசீலனையில் இருந்து வரக்கூடிய திட்டங்களைப்பற்றியோ அல்லது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய திட்டங்களைப்பற்றியோ அதில் சேர்க்க முடியாது. பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட திட்டங்களை மட்டும் தான் டிசம்பர் மாதம் வரையிலும் சேர்க்க முடியும். அதன் பின் ஏற்படுகின்ற செலவுகளை எல்லாம் அடுத்த ஆண்டில் சேர்த்துக் கொள்ளலாம் என்றால் திட்டங்களை ஒன்றும் நிறைவேற்றவோ அல்லது திட்டங்களைப்பற்றி ஆலோசிக்கவோ முடியாது என்பதையும் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் அடுத்த ஆண்டு மான்யக் கோரிக்கை கொண்டு வருவது வரையிலும் எந்த திட்டங்களையும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லதா என்பதைப்பற்றியும் நாம் ஆலோசிக்க வேண்டும். முன்னால் போல் அரசாங்கம் ஏதோ இயந்திரம் மாதிரி நடந்துக் கொண்டு போனால் போதும் என்று இருந்தால் இம்மாதிரியான துணை மான்யக் கோரிக்கை கொண்டு வரவேண்டிய அவசியமேயில்லை. இப்போது நடந்து கொண்டிருக்கும் அரசாங்கம் முன்னால் இருந்தது போல் அல்லாமல்,

[Sri C. Subramaniam] [11th September 1959

புதிய புதிய திட்டங்களை எல்லாம், மக்களுடைய நலனுக்கு எந்த திட்டங்கள் எல்லாம் கொண்டு வந்தால் மக்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை எல்லாம் பார்த்து உட்னுக்குடன் திட்டங்களைப்போட்டு அதற்குத் தகுந்தபடி செலவு செய்து நாம் அரசாங்கத்தை நடத்தி வருகிறோம். அதல்லாமல் ஏதோ அரசாங்கம் நடந்து கொண்டிருக்கவேண்டும் என்று சொன்னால் அதில் ஒரு ஊக்கமும் ஆர்வமும் இருக்க முடியாது. திட்டங்கள் ஒன்றுமே நமக்கு அவசியமில்லை என்று சொல்வதாக இருந்தால் அது வேறு விஷயம். ஆனால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற திட்டங்களை எல்லாம் நடத்தவேண்டுமென்றால் அதற்காக பணங்களை ஒதுக்கவேண்டியிருக்கிறது. அதல்லாமல் டிசம்பர் மாதத்தில் பணம் ஒதுக்கவேண்டியதை தள்ளி வைத்து ஒன்றரை வருடத்திற்கு பின்னால் கொடுத்தால் போதும் என்று சொன்னால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது, நான் ஏற்றுக்கொள்ள தயாராகவும் இல்லை. மேலும் மார்ச் 31-ம் தேதி என்பது நாம் இப்போது கணக்குக்காக வைத்திருப்பதால் அந்த தேதிக்குள் பட்ஜெட் கொண்டு வந்து அதை நிறைவேற்றுகின்றோம். ஆகவே திட்டங்களை எடுத்துக்கொள்ளாமல் இருக்கக்கூடிய முறையில் நாம் இருந்தால் தான் துணை மான்யக் கோரிக்கை கொண்டு வராத நிலையை நாம் ஏற்படுத்த முடியும் என்பதை நாம் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகையால் தான் இந்த வருடம் மட்டுமல்ல, கனம் கோவிந்தசாமி அவர்கள் சொன்னது போல் வருடா வருடம், நாம் இரண்டு முறை இந்த துணை மான்யக் கோரிக்கையை கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஒன்றை வருட ஆரம்பத்திலும் மற்றொன்றை நவம்பர் மாதத்திலும் கொண்டு வருகின்றோம். இவ்விதம் மார்ச் மாதத்திற்கு பின்னால் இரண்டு உப மான்ய கோரிக்கைகளை நாம் சமர்ப்பிக்கின்றோம். அதோடு வருடா வருடம் நாம் கொண்டு வருகின்ற உப மான்யக் கோரிக்கையிளுள்ள தொகையையும் இப்போதுள்ள தொகையையும் எடுத்துக் கொண்டு பார்த்தால் பெரிய வித்தியாசமில்லை. மொத்த தொகையை எடுத்துக்கொண்டால் பெரியதாக தோன்றலாமே தவிர முன்னாலுள்ள ஆண்டுகளில் இருந்ததைவிட செலவுகள் அதிகரித்து இருப்பதாக சொல்ல முடியாது. முக்கியமாக இதில் பார்க்கவேண்டியது ரெவின்யு கணக்கு அன்றாட செலவுகள் எவ்விதம் நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப்பார்க்கவேண்டும் என்றால் ரெவின்யு செலவைப் பார்க்கவேண்டும். இதில் பார்க்கின்ற பொழுது இந்த உபமான்யக் கோரிக்கையில் கேட்டிருக்கின்ற ரூபாய் 226 லட்சம். இதில் 75 லட்சம் ரூபாய் கண்டிஜன்ட் பண்டைச் சேர்ந்தது. கஜானவில் பார்த்தால் இதற்கு தனியாக அக்கௌண்ட் இருக்கும். அதாவது ஏட்டளவில் இது ஒரு இனத்திலிருந்து கண்டிஞ்ஜண்ட் பண்ட்—என்ற இனத்திற்கு மாற்ற வேண்டும். இது தனியாக ஏற்படக்கூடிய செலவு அல்ல. கணக்கில் தான் மாற்றம் ஏற்படும். ஆகவே இதை செலவாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இன்னொன்று 60 லட்சம் ரூபாய், இதைப்பற்றி நான் என்னுடைய விளக்க உரையில் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது, ஜில்லாபோர்டுகளுக்கு, அதிலும் முக்கியமாக

11th September 1959] [Sri C. Subramaniam]

கல்விக்காக செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது. இது மாதமாதம் கொடுக்கவேண்டும் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஸ்பெஷல் ஆபீஸர்களை எல்லாம் அழைத்து இதைப் பற்றி விவாதித்தோம். அந்த விவாதத்தின் முடிவாகத்தான் இவ் விதம் தீர்மானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு இனத்தில் மிச்சமாகும். ஆனல் ஒரு இனத்தில் இருக்கக்கூடிய தொகையை இன்னொரு இனத்தில் ஈடு காட்ட முடியாது. இதைப்பற்றியும் நான் விளக்க வுரையில் குறிப்பிட்டிருக்கிறேன். இன்னொரு பத்து லட்சம் ரூபாய், தான்ய கொள்முதல் செய்வதற்காக ஒதுக்கப் பட்டுள்ள தொகை. இது வருடா வருடம் வரக்கூடிய தொகை அல்ல. இவ்விதமாக 145 லட்சம் ரூபாய் இந்த கணக்கில் சேர்ந்து வருகிறது. பாக்கி 81 லட்சம் தான் செலவு இனங்களில் சேரும். அதுமட்டுமல்ல, சென்ற ஆண்டுகளில் கேட்கப்பட்ட தொகைக்கும் இப்போது கேட்கப்படும் தொகைக்கும் அதிகமான வித்தியாசம் இருப்பதாக சொல்ல முடியாது. அதாவது 56--57-ல் 75 லட்சம், 57--58-ல் 71 லட்சம், 58--59-ல் 61 லட்சம். இந்த வகை யில் பார்க்கும்போது அதாவது ரெவின்யூ செலவை பொறுத்த வரையில் இது அதிகமான செலவு என்று சொல்ல முடியாது. மேலும் காப்பிட்டல் கணக்கில் போடப்பட்டிருக்கிற பணம் நம்மை பாதிப்பதில்லை. மத்திய சர்க்காரிடத்தில் கடனைப்பெற்றே, அல்லது பொதுமக்களிடத்தில் கடனைப்பெற்றோ அந்தச்செலவை செய்ய வேண்டியிருக்கிறது. அதோடு நாம் புதிய வேலைகள் பல வற்றையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். நம்மால் செலவு செய்ய முடி யும் என்ற நம்பிக்கையில் தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இவ்விதம் எடுத்துக்கொண்டிருப்பதால் ஒருக்காலும் தீமை ஏற் பட்டப்போவதில்லை, அதற்குப்பதிலாக நன்மை தான் விளையும் என்பதையும் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரிவிக்க ஆசைப் படுகிறேன். மூலதனச்செலவு என்ற முறையில் எடுத்துக் கொண்டால் முக்கியமாக இன்று நம் முன்னல் இருக்கின்ற செலவு பரம்பிக்குளம் பற்றியது தான். இதைப்பற்றி ஸ்ரீ சின்ன துரை அவர்கள் விளக்கமாக பேசினர்கள். முக்கியமாக, அவர் இது சம்பந்தமான முக்கியமான விஷயங்களை எடுத்துச் சொன்னதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். மக்களுக்கு இந்தத் திட்டம் சம்பந்தமாக ஏற் பட்டிருக்கும் சந்தேகங்களைப் பற்றியும் விரிவாகக் கூறினர். இந்த சந்தேகங்களை அவர் உண்டாக்கியதாக அவர் பேரில் குற்றம் சாட்ட நான் விரும்பவில்லை. இந்தக் காலத்தில், இந்த மாதிரியான திட்டங்கள் வரும்போது, அரசியல் கட்சியினரில் ஒரு சாரார், அத் திட்டங்கள் சம்பந்தமாக மக்களிடத்தில் எல்லா விதமான குழப் பங்களையும் சந்தேகங்களையும் உண்டாக்கி அவைகளை தங்கள் கட்சியின் நலனுக்குப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார்கள்: இன்னொரு சாரார் குழப்பத்தை உண்டாக்குவதையே தங்கள் தொழிலாகக் கொள்ள முயற்சிக்கிறார்கள். ஒரு சாரார் மகா நாடுகள் போட்டு தங்களுக்குப் பெருமை தேடிக்கொள்கிறார்கள். பிறகு தண்ணீர் வந்தால் அப்போது ‘ நாங்கள் மகாநாடு போட்டு

எங்கள் மகாநாட்டில் தீர்மானம் போட்டதால்தான் இங்கே தண்ணீர் வந்தது' என்று சொல்லி தங்களுக்கு பெருமையும் சிறப்பும் தேடிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் மகாநாடுகள் போடுகிறார்கள். உதாரணமாக, பள்ளடம் தாலூகாவிற்கு தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று ஒரு சோஷலிஸ்ட் மகாநாடு நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அம்மகாநாடு நடந்ததற்குப் பிறகு பள்ளடம் தாலூகாவில் தண்ணீர் ஓடினால், அப்போது, மகாநாட்டை நடத்திய சோஷலிஸ்டுகள் "சோஷலிஸ்ட் கட்சி தீர்மானம் போட்டதால் தான் இங்கே தண்ணீர் வந்தது" என்று மக்களிடம் சொல்லிக்கொள்ள அது ஏதுவாக இருக்கும்.

SRI P. S. CHINNADURAI : அங்கே நடந்த இரண்டு மகாநாடுகளுக்கும் கனம் விவசாயத் துறை அமைச்சர் வந்திருந்தார் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆமாம், ஆமாம். எங்களையும் கூப்பிடுகிறார்கள். நாங்கள் ஏமாந்துபோவதில்லை. நாங்கள் தெரிந்துகொண்டுதான் மகாநாடுகளுக்குப் போகிறோம். (சிரிப்பு). நிதி அமைச்சர் இருக்கும் பொள்ளாச்சித் தாலூகாவுக்கு அதிகத் தண்ணீர் போய் விடுகிறது என்று வேண்டுமென்றே சொல்லும் முறையில் இந்த மகாநாடுகளில் பேச்சுக்கள் நிகழ்த்தப்படுகின்றன. என்னை பொறுத்தவரையில், தாலூகா மட்டுமன்றி, ராஜ்யம் மட்டுமன்றி, இந்தியா முழுவதுமே ஒன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பவன் நான். என் தாலூகா என்பதாலோ என் தொகுதி என்பதாலோ, ஒரு இடத்திற்கு அதிகத் தண்ணீர் கொடுத்துவிட வேண்டுமென்று நான் விரும்புவதாக ஸ்ரீ. சின்னதுரை கொஞ்சம் சந்தேகப்பட்டாலும், அவர் என்னைப் புரிந்து கொள்ளவில்லை என்று சொல்வேன். அவர் அவ்வாறு சந்தேகப் படாவிட்டாலும், அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மாதிரியான புகார்களைக் கிளப்பினால் அவர்களை அவர் அடக்க வேண்டும். அவர்களை அவர் அடக்காமல் விட்டிருந்தால் அவர் தம் கடமையைச் செய்யத் தவறிவிட்டார் என்று நான் சொல்வேன். இந்த விஷயத்தில் சந்தேகங்களுக்கு இடமில்லை. எந்த அடிப்படையில் தண்ணீரைப் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் விஷயத்தில், அந்தப் பகுதி சம்பந்தப்படாத மூன்று மந்திரிகள் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் வரும் தண்ணீர் எவ்வாறு பங்கிடப்படும் என்று சொல்லக் கூடாதா என்று ஸ்ரீ சின்னதுரை கேட்டார். திட்டம் பூரணமாக முடிந்தவுடன் கடைசியில் நமக்கு மொத்தம் எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று தெரிந்துவிட்டால், இதை எஞ்சினியர்களை வைத்துக்கொண்டு வெகு சுலபமாக முடிவுசெய்துவிடலாம். இந்தத் திட்டத்தின் மூலம் அதிகபட்ச சாத்தியமான தண்ணீரைப் பெற நாம் மேலும் மேலும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுசம்பந்தமாக சில விஷயங்கள் சில கனம் அங்கத்தினர்களுக்காவது தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். முதலில் இந்தத் திட்டத்தை, பரம்பிக்குளம் ஏரியை மட்டும் சேர்த்துக்கொண்டு நிறைவேற்றுவதாக இருந்தது. அந்த முறையில் திட்டம் வகுக்கப்

பட்டது. அந்தத் திட்டத்தைப் பரிசிலித்துக் கொண்டிருந்த போது சோலையாறு என்ற ஆற்றிலிருந்தும் தண்ணீர் எடுக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. எஞ்சினியர்கள் சோலையாற்றைப் பரிசிலித்துக்கொண்டிருந்தபோது இன்னொரு ஆற்றிலிருந்தும் தண்ணீர் கொண்டுவரலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதைப் பரிசிலித்துக்கொண்டிருந்தபோது நீராறு என்ற ஆற்றிலிருந்தும் தண்ணீர் எடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நான்கு துணைக்கடல் ஆறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நான்கு ஆறுகளைச் சேர்த்துத் தான் இப்போதைய திட்டம் உருவாகியிருக்கிறது. இந்தத் திட்டம் சம்பந்தமாக எஞ்சினியர்கள் அறிக்கை சமர்ப்பித்து விட்டார்களா என்று ஸ்ரீ. சின்னதுரை கேட்டார். சமீபத்தில் அவர்கள் ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இதன் நகல் திட்டம் திட்டக் கமிஷனுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வேலையெல்லாம் முடிந்து விட்டால் திட்டம் போட்டு மக்களுக்கு தண்ணீரை பங்கு போட்டுக் கொடுத்துவிடலாம். இந்த நான்கு ஆறுகள் தவிர இன்னொரு ஆறு இருக்கிறது. அதன் தண்ணீரையும் இங்கே கொண்டுவரலாம் என்று நமது எஞ்சினியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் நான் முன்பு குறிப்பிட்ட நான்கு ஆறுகளை இந்தப் பக்கம் திருப்புவதற்குத்தான் கேரள அரசாங்கத்துடன் தாற்காலிக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஐந்தாவது ஆற்றையும் இந்தப் பக்கம் திருப்ப வேண்டுமானால் அவர்களுடன் நாம் மறுபடியும் பேசி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இந்தக் காரணங்களால், நாம் தண்ணீரை இன்னும் பங்கு போட முடியவில்லை.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ நல்லசிவம் அவர்களுக்கு கீழ் பவானிப் பிரச்னைகளில், அரசியல் கட்சி நடவடிக்கைகளில் அனுபவம் உண்டு. பரம்பிக்குளம் திட்டம் போன்ற திட்டங்கள் சம்பந்தமாக கிளர்ச்சிகள் நடத்துவதோ குழப்பங்களை உண்டாக்குவதோ கூடாது என்று அவர் சொன்னார். அவ்வாறு சொன்னதற்காக அவருக்கு நான் நன்றி செலுத்துகிறேன். குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கக்கூடியவர்கள் எப்போதும் குழப்பம் ஏற்படுத்தலாம். எதிலும், பலனடைபவர்களும் ஒருசிலர் இருப்பார்கள், பாதிக்கப்படுபவர்களும் ஒருசிலர் இருப்பார்கள். அந்த அடிப்படையில் குழப்பத்தை ஏற்படுத்தலாம். கீழ் பவானித் திட்டத்தில் ஒரு முக்கியமான நல்ல அனுபவம் ஏற்பட்டது. அதாவது, எந்த அளவிற்கு நஞ்சை சாகுபடி செய்தால் நல்லது, எந்த அளவிற்கு புஞ்சை சாகுபடி செய்தால் நல்லது என்று பார்த்து அதற்குத் தகுந்தபடி வாய்க்கால் அமைக்க வேண்டிய அனுபவம் நமக்கு ஏற்பட்டது. அந்த அனுபவத்தை மனதிற் கொண்டு தான் நமது எஞ்சினியர்கள் இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். சாதாரணமாக வாய்க்கால் வெட்டினால் கசிவுத் தண்ணீர் காரணமாக பல கஷ்டங்கள் ஏற்படும், நீர் வீணாகும். இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். மேலும், தண்ணீர்ப் பாதையில் கடைசியில் உள்ள வாய்க்கால்கள் எவ்வாறு அமைந்தால் வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் பெறும் நிலங்களுக்கு நல்லது என்று

பார்த்து அதற்குத் தகுந்த முறையில் திட்டம் மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. மேலும் ஓரளவு நெல் சாகுபடிக்கு-50,000 ஏக்க ருக்கு—வகை செய்யப்பட்டிருக்கிறது. ஓரளவு நெல் சாகுபடி இருப்பது தான் நல்லது. இவ்வாறு வகை செய்யப்பட்டிருப்பது, ஒரு தாலுகாவிற்கு மட்டுமன்றி பரவலாக இருக்கும் என்று தெரிவிக்கிறேன்.

இந்தத் திட்டத்தில் நாம் எவ்வளவு அதிகபட்ச சாத்தியமான தண்ணீரைக் கொண்டுவந்து உபயோகிக்க முடியும் என்பதில் முதன்முதலில் கவனம்செலுத்த வேண்டும். அதற்கடுத்தபடியாக தண்ணீரைப் பிரித்துக்கொடுக்கும்போது, பள்ளடம் மக்கள் தனி, உடுமலைப்பேட்டை மக்கள் தனி, பொள்ளாச்சி மக்கள் தனி என்ற அடிப்படையில் செயல்படக் கூடாது. தண்ணீரை எவ்வாறு பிரித்துக் கொடுத்தால் விளைச்சலை ரொம்ப அதிகமாகப் பெருக்க முடியும் என்றும், அதற்கடுத்தபடியாக பஞ்சப் பிரதேசங்களை வளப்படுத்த வேண்டுமானால் எவ்வாறு தண்ணீரைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றும் பார்க்க வேண்டும். இது சம்பந்த மான மந்திரி சபைக் கமிட்டி இந்த இரண்டையும் சமன்செய்து சீர்தூக்கிப் பார்த்து அதற்குப் பிறகு ஒரு நல்ல முடிவிற்கு வரும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தண்ணீரைப் பங்கிடுவது முடிவாகாதிருக்கும்போதே சண்டை போடுகிறார்களே என்று ஸ்ரீ. சின்னதுரை சொன்னார். அதிருஷ்ட வசமாக இந்தத் திட்டம் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் திட்டத்தை நிறைவேற்றும்போது அந்த பகுதி உடனடியாகப் பலனடையும். அந்த முறையில் திட்டம் படிப்படியாக அமைந்திருக்கிறது. எந்தப் பகுதிக்கு அதிகமான தண்ணீர் கொடுப்பதாக இருந்தாலும் சரி, எந்தப் பகுதிக்குக் குறைவான தண்ணீர் கொடுப்பதாக இருந்தாலும் சரி, இப்போதே ஆரம்பித்து நடத்தக்கூடிய வேலைகளை தாமதமின்றி நடத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் சில திட்ட வேலைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். மேலும், இத்திட்டத்தின் ஒரு பகுதியை விரைவிலேயே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே முடிப்பதற்கு திட்டக் கமிஷன் அனுசரணையாக இருக்கிறது. இந் தத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் முடிப்பதாக முன்பு திட்டக் கமிஷன் திட்டமிட்டிருந்தது. "திட்டத்தின் ஒரு பகுதியை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே முடித்து நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க முடியுமானால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அதை முடியுங்கள். அதற்கு வேண்டிய பணத்தை நாங்கள் ஒதுக்குகிறோம்" என்று திட்டக் குழுவினர் சொல்லி, முன்பு இதற்காக ஒதுக்கியிருந்த 45 லட்ச ரூபாய் தொகையை 100 லட்ச ரூபாயாக அதிகப்படுத்தியிருக்கிறார் கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளோ மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருஷத்திற்குள்ளோ வாவது இந்த ஒரு பகுதியை முடித்துவிட வேண்டுமென்ற நோக் கத்துடன் இந்தத் திட்டம் சம்பந்தமான வேலை துரிதப்படுத்தப் பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இந்த 100 லட்ச ரூபாய்

11th September 1959] [Sri C. Subramaniam]

மட்டுமல்ல. நான் என்ஜினீயர்களிடம், ' நிதி ஒதுக்குவதைப்பற்றி ஒன்றும் கவலைப்படவேண்டாம், எந்த அளவுக்கு வேலை செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்யுங்கள் ' என்று அவர்களுக்கு உறுதி கொடுத்திருக்கிறேன். சமீப காலத்தில், இதிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டப் பட்டிருக்கும் வீடுகளை—காலனிகளை—திறந்து வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த சமயத்தில் ஆளியாறு பகுதியில் நடக்கக்கூடிய வேலைகளைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. எவ்வளவு வேகமாக—எவ்வளவு உற்சாகமாக—எவ்வளவு ஆர்வத் தோடு, எல்லோரும் வேலையைச் செய்து வருகிறார்கள் என்பதை உணரவேண்டுமென்று சொன்னால், கனம் அங்கத்தினர்கள் இன்றைக்குப் போய் பார்த்துவிட்டு இன்னும் 3 மாதங்கள் கழித்துப் போய்ப் பார்த்தால், எந்த அளவுக்கு வேலைகளை வேகமாகச் செய்கிறார்கள் என்பது ஓரளவுக்குப் புலனாகும் என்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நான் பார்த்த வரையில், நானே பிரமிக்கும் அளவுக்கு வேலையைச் செய்திருக் கிறார்கள் என்று அங்கத்தினர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சிறு சிறு விஷயங்களைப் பற்றிப் பேசப்பட்டது. ஸ்டேஷன் வாகன் எதற்காகக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். வாஸ்தவம்தான். ஸ்டேஷன் வாகன், ஜீப் என்று சொன்னாலேயே, அதனால் வீண் செலவுதான் என்பது அங்கத்தினர்களுடைய கருத்து மட்டுமல்ல, என்னுடைய கருத் தும் அதுதான். எனது கருத்துப்படியே எல்லாம் நடக்கவேண் டும் என்று சொன்னால் முடியாது. இன்றைய தினம் எந்த அள வுக்கு ஸ்டேஷன் வாகன்களையும், ஜீப்புகளையும் குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைத்திருக்கிறோம். ஜீப்புகளுக்கு "எனிமி நம்பர் ஒன்" நான் தான் என்று அதிகாரிகள் பேசிக்கொள்வதாகக் கூட நான் கேள்விப்படுகிறேன். எந்த அளவுக்கு குறைக்க முடியு மோ அந்த அளவுக்குக் குறைத்து, அதற்கான முறையில் அமைப் பும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இது பெண் களுக்காக ஏற்பட்டிருக்கும் ஸர்விஸ் ஹோம். அவர்கள் வெளியில் போய் வரவும், தொழில் பழகிக்கொள்ளவும், பள்ளிக்குப் போக வும் வாகன வசதி இருந்தால்தான் முடியும் என்று சொல்லுகிறார் கள். பெண்களுக்கு இந்த வசதியைக் கொடுக்க முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு எனக்கு உறுதி ஏற்படவில்லை. பெண் களுக்கென்று ஏற்பட்டிருக்கிற விடுதியாதலால்தான் அவர்களுக்கு இந்த வாகன வசதி கொடுக்கப்பட்டது. இப்போது கொடுக்கப் பட்டுள்ளது, ஸர்விஸ் ஹோமுக்கு, அந்த இலாகாவிற்கு அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீஸ் நூற்றாண்டு விழாவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நூற்றாண்டு விழா நல்லது என்று எல்லோரும் ஒப்புக்கொண்டார் கள். அது வரையில் சந்தோஷம். நல்லது அல்ல என்று சொல்லத் தயக்கப்பட்டவர்கள்கூட அம்மாதிரிப் பேச முன் வராது நல்லது என்று பேசிவிட்டார்கள். இன்னும் விரிவாகச் செய்திருக்க

முடியும், இன்னும் வசதிகள் செய்திருக்க முடியும் என்று பேசினார்கள். போனஸ் கொடுத்திருக்கவேண்டும் என்று ஒருவர் பேசினார். இது போனஸ் கொடுக்கும் விஷயம் அல்ல. அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது எல்லோருக்கும் சேர்த்து ஒரு சம்பளக் கமிஷன் நியமித்திருக்கிறோம். அவர்கள் இந்தப் பிரச்னையைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கும்போது, ஒரு பகுதியினருக்கு மட்டும் போனஸோ அல்லது சம்பள உயர்வோ கொடுப்பது சரியல்ல. இந்தக் காரணத்தினால்தான் இதை ஒரு விழா என்ற முறையில்—ஒரு பண்டிகை என்ற முறையில்—எல்லோருக்கும் உற்சாகம் ஏற்படும் முறையில்—நமது நிதி நிலைமையையும் உத்தேசித்து, எந்த அளவுக்குச் செலவு செய்யலாம் என்று யோசித்துத் திட்டமிட்டு இந்த நூற்றாண்டு விழா நடத்தப்பட்டது. மற்றவர்கள் இருந்தால் புது வசதிகளையும், புது சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுத்திருப்பார்களோ என்னவோ, அது எனக்குத் தெரியாது. இதற்கு மேல் செய்ய முடியாதா என்று கேட்க முடியும். செய்த பிறகு இவ்வளவுதானா என்று வெகு சுலபமாகச் சொல்ல முடியும். இதற்கு ஒரு அளவு இல்லை. அதிலும் அதிகமாகச் செய்யவேண்டுமென்று சொல்லுவதில், நமக்கு பொறுப்பு எவ்வளவு இருக்கிறது என்று கவனிக்காமல் சொல்லுவதற்கு எல்லையோ அல்லது அளவோ கிடையாது. எப்போதும் இம்மாதிரித்தான் சொல்வார்கள் என்ற முறையில் இந்தக் குற்றச்சாட்டை இத்துடன் விட்டு விடுகிறேன்.

டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்-களைப் போடுவதைப் பற்றிக் கூறினார்கள். இது முன்னாலேயே தெரியும். புது அதிகாரிகளை நியமிப்பதில் எவ்வளவு தாமதப்படுத்த முடியுமோ அவ்வளவு தாமதப் படுத்தவேண்டுமென்பதுதான் என்னுடைய கொள்கையாக இருந்து வருகிறது. ஒரு அதிகாரியைப் போடுவது அவசியம் என்று ஒப்புக்கொள்ள முடியும். நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் 'தவிர்க்க முடியாது என்ற நிலையில்—எப்படி தவிர்க்க முடியாது என்ற காரணத்தைக் கொண்டு—பின்னால் வாருங்கள்' என்று இருந்து கூறுவது எனது மரபாக வந்திருக்கிறது. இன்றைக்கு 40 டெபுடி இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதற்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். வருஷம் ஒன்றுக்கு 2 லட்சம் குழந்தைகள் புதிதாக ஆரம்ப பள்ளிகளில் சேர்க்கப்படுகிறார்கள். 2 லட்சம் குழந்தைகள் சேர்க்கப்படும்போது—இன்றைக்கு இருக்கக்கூடிய கணக்குப்படி 30 குழந்தைகளுக்கு ஒரு வகுப்பு என்று பார்த்தாலும்—6,000 புது வகுப்புகள் ஏற்படுகின்றன. அதிலே பல புதிய பள்ளிகளும் ஏற்படுகின்றன. இவைகளையெல்லாம் நல்ல முறையில் தணிக்கை செய்யவேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். நல்ல சூழ் நிலை ஏற்பட்டு ஒவ்வொருவரும் தணிக்கையில்லாமல் காரியங்களைச் செய்கிறார்கள் என்றால் இம்மாதிரி அதிகாரிகளுக்கு அவசியமில்லாமல் போகலாம். இன்றைக்கு தணிக்கை அவசியமாக இருக்கும் காரணத்தினால் தணிக்கை செய்கிறவர்களுக்கு எவ்வளவு பளு இருக்கிறது என்று பார்க்கவேண்டியிருக்கிறது. அதனால் 40 இன்ஸ்பெக்டர்களை தவிர்க்க முடியாது போடவேண்டியிருக்கிறது. 'எப்போது

தவிர்க்க முடியாது என்று எண்ணுகிறீர்களோ அப்போது வாருங்கள்' என்று சொல்லிய பிறகு, இப்போது 40 கொடுத்தால் பரவாயில்லை என்று சொன்னார்கள், ஆகையால் இப்போதிருந்து நியமித்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது தெரியாமல் அல்ல. அதிகச் செலவை எந்த அளவு தாமதப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு தாமதப்படுத்தவேண்டும் என்ற காரணத்தினால்தான் இப்போது இந்த புதுச் செலவு வந்திருக்கிறது.

ஆசிரியைகளுக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதைப் பற்றி, 126 தானா என்று சொன்னார்கள். இது இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஏற்படுகிற அனுபவத்தை வைத்துக் கொண்டு, எப்படி விஸ்தரிப்பது என்று, அதற்கு மேல் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் முக்கியமாக ஆசிரியைகளுக்கு கிராமங்களில் வீட்டு வசதி செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு மத்திய சர்க்கார் வந்திருக்கிறது—இந்த அரசாங்கமும் வந்திருக்கிறது. அந்த அளவில் இப்போது திட்டம் வகுத்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்குவார்கள். இதிலே அனுபவம் ஏற்படவேண்டுமென்று இன்றைக்கு சிறு அளவில் எடுத்துக் கொண்டு நிறைவேற்றுகிறோம்.

அதற்கு அடுத்தபடியாக குடி தண்ணீர்த் திட்டம். இந்த அத்தியாவசியமான விஷயத்தைக்கூட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், 3-வது ஐந்தாண்டுத் திட்டம், 4-வது ஐந்தாண்டுத் திட்டம் என்று தள்ளிப்போட்டுக் கொண்டே போவது சரியல்ல. இதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இதே கருத்தை பல இடங்களில்—முக்கியமாக என்.டி.ஸி. கூட்டத்தில் திட்டங்களை விவாதிக்கும் போது—குடி தண்ணீர் திட்டங்களைக்கூட நிறைவேற்றவில்லை யென்றால், மக்களிடத்தில் போய் அவர்கள் குடி தண்ணீர் இல்லை யென்று சொல்லும்போது 'மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வருகிறது, பொறுத்திருங்கள்' என்று சொல்வது கொஞ்சம்கூட சரியானதல்ல என்று இங்கே அங்கத்தினர்கள் சொல்வதைவிட கொஞ்சம் அதிகமாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகையால் தான் இன்றைக்கு முதலிடம் கொடுத்து 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் எல்லா கிராமங்களிலும், பட்டணங்களிலும் குடி தண்ணீர் திட்டமில்லாத குறையை நிறை செய்து விடவேண்டு மென்று முடிவு செய்திருக்கிறோம். 3-வது ஐந்தாண்டுத் திட்டம் என்று எல்லாவற்றையும் ஒத்திப்போடாமல், கிராம குடி தண்ணீர் திட்டங்களைப் பொறுத்த வரையில் இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள்ளாக—அதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டாவது ஆண்டுக்குள்ளாக—எல்லா கிராமத்திலும் குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தி இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்து விட வேண்டுமென்ற முறையில், எந்த அளவில் செலவு செய்யவேண்டு மென்று ஆலோசனை செய்து, இதற்கு முதலிடம் கொடுத்து வேலைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறோம். அதே மாதிரி நகரப் புறங்களுக்கும், பெரிய கிராமங்களுக்கும் ஏற்பாடு செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று சொன்னால், கிராமங்களில்

[Sri C. Subramaniam] [11th September 1959

கிணறு வெட்டினால் போதும், ஆனால், நகரப் புற தண்ணீர் திட்டங்களுக்கு குழாய்கள் அவசியம், என்ஜின்கள் அவசியம், ஸ்டீல் அவசியம் என்று இருப்பதால், எந்த அளவுக்கு குழாய்கள் இருக்கிறது, ஸ்டீல் இருக்கிறது என்று பார்த்து திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக தாமதம் ஏற்படுகிறது. நிதி ஒதுக்காத காரணமல்ல, பொருள் இல்லாத காரணத்தினால் தான் தாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும் கூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக எல்லா நகரப்புறங்களுக்கும் குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்தால்தான் குடி தண்ணீர் திட்டம் என்று இல்லாமல் இப்போது 18 திட்டங்களைச் சேர்த்திருக்கிறோம். அடுத்த ஆண்டில் இன்னும் புதிய திட்டங்களைச் சேர்த்து மேலும் மேலும் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படும்.

12-30 p.m.

(Deputy Speaker in the chair.)

இந்தக் குறையைப் பொறுத்த வரை நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, பல திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு பின்னர் எந்த முறையில் நிதியை ஒதுக்குவது என்பது பற்றி அந்தந்த பஞ்சாயத்துக்களுடன் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. சங்கரன்கோயிலைப் பொறுத்த வரை, எந்த அளவு அந்தப் பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ளமுடியும், எந்த அளவு சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியும், என்பது பற்றிக் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. இதைப் போன்று திட்டங்கள் பாதி அளவிலே இருக்கிறது. புதிதாக எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டு அவைகளை ஆரம்பிக்க முயற்சி செய்வோம் என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜமீந்தார்களுக்குப் பணம் கொடுக்கப் புதிதாக ஒதுக்காவிட்டால் என்ன என்று கேட்டார்கள். இது புதிதாகச் செய்த சட்டத்தின்படி ஒதுக்கப்படுவது அல்ல. ஜமீந்தாரிகளை எடுத்துக் கொள்ளும்போது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றிச் சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைத் திருத்த அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்த மாதிரி நஷ்ட ஈடு கொடுப்பதற்காகச் சட்டம் செய்திருப்பதை ஒவ்வொரு அரசாங்கமும் மாற்ற வேண்டுமென்ற முறையிலே போய்க்கொண்டிருந்தால் அதற்கு முடிவு இல்லாமல் போய்விடும். ஆகவே, இந்த நஷ்ட ஈட்டை கொடுக்க வேண்டுமென்று முன்பு சட்டசபை முடிவு செய்து இருக்கும்போது அந்த முடிவுப் பிரகாரம் கொடுத்துவிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம் ஜமீந்தார்களுக்கு ஏன் இதையெல்லாம் கொடுக்க வேண்டும், அவர்கள் கிண்டிக்குப் போய் ரேஸிலே செலவிடுகிறார்கள் என்று கூறலாம். ஆனால் அந்த ஜமீந்தார்களில் சாப்பாட்டுக்குத் திண்டாடுகிறவர்களும் இருக்கிறார்கள். ஜமீந்தார்களுக்கு அந்தச் சொத்து பரம்பரையாக வந்தது. அதை நாம் எடுத்துக் கொண்டுவிட்டோம். அதை எடுத்துக்கொண்டவுடன் அவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்

11th September 1959] [Sri C. Subramaniam]

பட்டுக் கொண்டிருக்கவேண்டுமென்று முடிவு செய்துவிட முடியாது. சட்டப் பிரகாரம் நஷ்ட ஈட்டைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கென்று ட்ரிப்யூனல் இருக்கிறது. அவர்கள் முடிவு செய்து தீர்ப்பளிக்கிறார்கள். 100-க்கு 50 என்று சொல்லியிருக்கிறார்கள். முடிவு செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குள்ளாக அந்தப் பணத்தைக் கொடுத்து விடவேண்டும். அவ்வப்போது தீர்ப்புச் சொல்லி எந்த அளவு பணம் கட்ட வேண்டியிருக்கிறதோ அப்பொழுது உப மானியக் கோரிக்கை கொண்டு வந்து கோர்ட்டிலே கொண்டு போய்க் கட்டப்படுகிறதே தவிர புதிய செலவு அல்ல. வழக்கமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் செலவு. எப்பொழுது கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்யப்படுகிறதோ அந்தச் சமயத்தில் சட்டசபையின் அங்கிகாரம் பெற்று கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது தவறு என்று ஒவ்வொரு சமயமும் வலியுறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. அதே மாதிரி நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்த பிறகு அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதைப் பற்றி இந்தச் சபை முடிவு செய்யவேண்டும். இன்றைக்கு இருக்கும் நியாயப் பிரகாரம் அதைச் செய்யும்போது, இந்த நஷ்ட ஈடு கட்டாயம் நமக்குக் கிடைக்கும் என்ற உறுதி மக்களிடத்தில் இருக்கவேண்டியது அவசியம். இன்றைக்கே ஓரளவு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்ததை நாளைக்கு இன்னொரு சர்க்கார் மாற்றமுடியும் என்று சொன்னால் அதனால் குழப்பமான நிலைமை ஏற்பட்டு விடும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கொள்கையைப் புகுத்தி அந்தந்தச் சமயத்தில் மாற்றிக் கொண்டிருப்பது சரியல்ல. ஆகையால் ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது தவிர்க்க முடியாதது. ட்ரிப்யூனல் தீர்ப்பு சொல்லிய பிறகு உரிய காலத்திற்குள் கட்டியாகவேண்டும். எந்த அளவுக்கு அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளிப்பார்கள் என்ற அளவை முன் கூட்டியே யோசிக்கக்கூடிய சக்தி எனக்கு இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

இன்னொருவர் தஞ்சை மெடிகல் காலேஜைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 75 மாணவர்கள் இப்பொழுது மதுரையில் பயிற்சி பெற்று வருகிறார்களே, அவர்களை அங்கேயே வைத்து விட்டால் என்ன என்று கேட்டார்கள். அவ்வாறு வைக்க வேண்டுமென்றால் இன்னும் லட்சக் கணக்காகச் செலவழிக்கவேண்டும். ஒரு கல்லூரியில் எந்த அளவுக்குச் சேர்க்கலாம் என்று வரையறுத்திருக்கிறோம். யூனிவர்சிடி முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இந்த மாதிரி புதிய கல்லூரிகள் ஏற்படுத்தும்போது முதலில் முதல் வருஷ மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து பின்னால் அடுத்த ஆண்டுக்கான வசதிகளைச் செய்து மாணவர்களை மாற்றுவார்கள். மதுரை காலேஜ் ஆரம்பிக்கப்பட்ட போதும் அப்படித்தான் செய்யப்பட்டது. குண்டூரிலும் அவ்வாறுதான் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வட ஆற்காடு மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஏற்படுத்துகிறோம் என்றால் இரண்டாவது வருஷம் நடைபெறும்போது முதல் வருஷத்திற்குப் புதிதாக மாணவர்களைச் சேர்க்கவேண்டும். ஆகையால் வருஷ நஷ்டம் ஏற்படாமல் உடனடியாக ஆரம்பிக்க இது

மாதிரி செய்யக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய முடியுமே தவிர, இப்பொழுது 75 பேர் சேர்த்து தொடர்ந்து ஒவ்வொரு வருஷமும் 75 பேர் சேர்க்க வேண்டுமென்பது ஆகாத காரியம் என்று சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக திரு. ஷண்முகம் அவர்கள் சொன்னார்கள்—இந்த உப மானியம் வருவதால் உபரி பட்ஜட் துண்டு பட்ஜட் ஆகுமா என்று சந்தேகப்பட்டார். சில பேர் சந்தேக நோக்கத்தோடு பார்க்கக்கூடிய மனப்பான்மையின் காரணமாக எதிலே என்னென்ன வருகிறதோ என்று துருவித் துருவிப் பார்க்கிறார்கள். திட்டங்கள் அதிகமாக நடைபெற நினைக்கிற இடத்தில் இந்த மாதிரி உப மானியங்கள் கோரப்படவேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. முடிவு செய்யும் பொறுப்பு என்னிடம் இருக்கிற காரணத்தினால் இது சரி என்றே கருதுகிறேன். இந்த நான்கு, ஐந்து வருஷ காலத்தில் தவறுதலாகத் திட்டங்கள் நடைபெறவில்லை. அதற்குப் பதிலாக மற்ற மாகாணங்களில் திட்டங்கள் நிறைவேற்றப்படுவது தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்ற காலத்தில்—கேரள கம்யூனிஸ்ட் முதல் அமைச்சரே ஒப்புக்கொண்டது, "சென்னைக்கு அடுத்தபடியாக இருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்கள்—நாம் திட்டங்களை நிறைவேற்றுவதில் முதன்மையாக இருப்பதற்கு காரணம் இதுதான். ஒரு தேதியை வைத்துக் கொண்டு, ஒரு விலங்கு போட்டுக்கொண்டு, இந்தக் தேதிக்குள் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்று போட்டிருப்பது நம்முடைய சௌகரியத்திற்காகத்தான் இருக்கவேண்டும். அதையும் மீறிக்கொண்டு திட்டங்கள் நிறைவேறத் தயாராக இருந்தால் இந்தத் தேதி எல்லாம் குறுக்கே வரக்கூடாது. நீங்கள் இந்த மாதிரிக் குறை சொல்ல இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே என்று நினைக்காமல் திட்டங்களை மேலும் மேலும் எடுத்துச் செய்ய வேண்டியிருந்தால் அதை எடுத்துச் செய்யத்தான் நான் விரும்புவேன். அந்தப் பொறுப்பு என்னிடம் இருக்கும் வரையில் இந்த மாதிரிச் சேர்த்துக் கொண்டேதான் போவேன் என்பதைக் கூற விரும்புகிறேன். அதன் மூலம் நல்லது ஏற்படலாமேயொழிய தீமை ஏற்பட்டு விடாது. ஊதாரிச் செலவு ஏற்பட்டு விடாது. சில பேர் அவசர அவசரமாகக் கொண்டு வரப்படுகிறதே என்று நினைக்கலாம். அதை ஆரம்பிக்க வேண்டுமென்று அவசரப்பட்டிருக்கலாமே தவிர, அந்தத் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையிலே பரிசீலிக்கப்படவேண்டுமென்ற காரணத்தினால்தான் அவைகள் எல்லாம் பட்ஜட்டிலே சேர்க்கப்படவில்லை. பரிசீலனை செய்து முடிந்த பிறகு அந்தந் திட்டங்களை நிறைவேற்ற ஒரு வருஷ காலம், அடுத்த பட்ஜட் சமர்ப்பிக்கும் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அலங்கோலமாக, அவசரமாக திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த உப மான்யக் கோரிக்கைகள் கோரப்படவில்லை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த உப மானியக் கோரிக்கை 4 கோடிக்கு வருகிறது என்று சொன்னால் பல இனங்களிலும் ரெவின்யூ பட்ஜட்டைப் பாதிக்கக் கூடிய தொகை 60 லட்சம் அளவுதான். அது பெரிய தொகையல்ல. அந்தத் தொகை

யைக் கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை காரணமாகத்தான் இந்தக் கோரிக்கையைக் கொண்டு வந்திருக்கிறோம். புதிய வரி விதிக்காமலேயே கண்டு பிடிக்க முடியும். இதற்கு மேலும் இன்னொரு உப மான்யக் கோரிக்கை இந்தச் சபையின் முன் கட்டாயமாக வரும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மார்ச் மாதத்தில் ஒரு உப மான்யக் கோரிக்கை வருவதற்குப் பதிலாக, இரண்டாகப் பிரித்து இப்பொழுது ஒன்றும் பின்னால் ஒன்றும் கொண்டு வரவேண்டுமென்ற முறையிலே வருஷா வருஷம் செய்து கொண்டு வருகிறோம். இதிலே சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் கட்டாயம் வரும் என்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தப் பொது விவாதத்திலே கலந்து கொண்டு என்னிடம் உள்ள குறைகளைக் குறிப்பிட்டதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது ஒரு சில குறைகள் ஏற்படத்தான் செய்யும். அந்தக் குறைகளை நீக்க வேண்டுமென்ற எண்ணத்தில் விவாதத்தில் கலந்து கொண்ட எல்லோருக்கும் எனது உண்மையான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது ஒவ்வொரு கோரிக்கையாக இந்தச் சபையின் முன் வரப் போகிறது. அந்தக் கோரிக்கைகளை யெல்லாம் ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பல புதிய திட்டங்கள் மேலும் மேலும் நல்ல முறையில் நிறைவேற்றப்படவேண்டுமென்ற வகையில் குறைகளை எல்லாம் எடுத்துச் சொன்னதற்காக மீண்டும் உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் பல புதிய திட்டங்களை நிறைவேற்ற நீங்கள் ஊக்கமளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI P. S. CHINNADURAI : I would like to ask for a clarification from the Hon. Minister for Finance.

பரம்பிக்குளம் திட்டம் சம்பந்தமாக பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் மாநாடுகள் கூட்டுவதைக் குறித்து, கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருசில கட்சிகள் நடத்திய மகாநாட்டில் விவசாயத் துறை அமைச்சர் கலந்துகொண்டார். இன்னொரு கட்சியினர் கூட்டிய மகாநாட்டில் நிதி அமைச்சர் மாத்திரம் கலந்துகொண்டார். மற்றுமொரு கட்சியினர் கூட்டிய மகாநாட்டில் முதல் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார். இம்மாதிரி குழப்பங்களுக்குப் பதிலாக சர்க்காரே நான்கு தாலூகா விவசாயிகளையும் கொண்ட ஒரு மகாநாடு கூட்டி சந்தேக விளக்கம் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அந்தக் காலனியைத் திறந்து வைத்தபோதே நான் சந்தேகத்திற்கு இடமின்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதிலும் முக்கியமாக, சில பேர்களிடம் நான் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன், பணம் வசூல் செய்ய ஆரம்பிக்கிறவர்கள் பணம் வசூல் செய்வதைத் தயவு செய்து நிறுத்திவிடவேண்டு

மென்று. யாராவது வந்து பணம் கேட்டால், அவர்களிடம் பணம் கொடுப்பதால் தங்களுக்குத் தண்ணீர் வரும் என்று யாராவது நினைத்தால் அவர்கள் ஏமாந்தவர்கள்; ஆகையால், பணம் கொடுப்பதை முதலில் நிறுத்திவிட்டால் தானாக மகாநாடுகளும் நின்றுவிடும் என்ற கருத்தைத் தெரிவித்தேன். அதைக் கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்களும் ஏற்றுக்கொண்டார். மக்கள் ஏமாந்து பணம் கொடுக்காமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE IN 1959–60.

DEPUTY SPEAKER: We now proceed to Voting on Demands for Grants for Supplementary Expenditure for the year 1959–60.

DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 2,26,700 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff.

DEPUTY SPEAKER: The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 2,26,700 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XII—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 29,500 under Demand XII—District Administration and Miscellaneous.

DEPUTY SPEAKER: The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 29,500 under Demand XII—District Administration and Miscellaneous.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XV—POLICE.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 4,21,000 under Demand XV—Police.

11th September 1959]

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 4,21,000 under Demand XV—Police.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVI—EDUCATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 69,32,000 under Demand XVI—Education.

DEPUTY SPEAKER : There are four cut motions. Two are out of order.

The Demand relates to grants to the District Boards for maintenance of secondary schools and grant for primary education. The hon. Member, Sri S. M. Annamalai, wants to discuss the failure of the Government to solve the unemployment problem among the Secondary and Higher Grade Teachers. This is not covered by the Demand. I, therefore, disallow it.

One of the cut motions given notice of by Sri K. Sattanatha Karayalar relates to the unemployment of trained teachers in Kanyakumari and Tirunelveli districts. This is also not covered by the Grant, and I therefore disallow it.

Sri K. Sattanatha Karayalar may move his cut motion.

* SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the cut motion standing in my name, viz.—

That the allotment of Rs. 69,32,000 under Demand XVI—Education—be reduced by Re. 1.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்த வெட்டுப் பிரேரேபணையைக் கொடுத்திருக்கும் முக்கிய நோக்கம், ஜில்லா போர்டின் கீழ் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கிடைப்பதிலே மிகவும் கால தாமதம் ஏற்படுகிறது (கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமண்யம் : ஆசிரியர்களுக்காக? குமாஸ்தாக் களுக்காக?) குறிப்பாக ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், மூன்று நான்கு மாதச் சம்பளம் பாக்கியிருக்கக்கூடியதென்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. தாமதமாக சம்பளம் கொடுக்கப் படுவதைத் தவிர்ப்பது மிக மிக அவசியம். மாதா மாதம் சம்பளம் கிடைக்க வேண்டிய ஏற்பாடு இருக்கவேண்டும். இவர்கள் குறைந்த சம்பளம் வாங்கக்கூடியவர்கள் என்பது தெரிந்த விஷயம். இனிமேலாவது அவர்களுக்கு இந்த நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் நான் இந்த வெட்டுப் பிரேரணை யைக் கொடுத்திருக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அறுபது லட்சம் ரூபாய் ஜில்லா போர்டு களுக்கு மான்யமாகக் கொடுக்க வேண்டும் என்று செய்திருக்கும் ஏற்பாடு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் தாமதம் ஏற்

[Sri C. Subramaniam] [11th September 1959

படுவதைத் தவிர்க்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான். மாதா மாதம் அவர்களுக்கு இந்தத் தொகையிலேயிருந்து ஒதுக்கிக் கொடுத்து, முக்கியமாக ஆசிரியர்களுக்கு அந்தந்த மாதத்திலே கூடிய சீக்கிரம் முதல் வாரத்திலேயே சம்பளம் கொடுக்க படுவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் இந்தக் குறை இப்பொழுது நாம் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை மூலமாக 60 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதன் மூலமாகத் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன். அதற்கு மேல் ஏதாவது தடை இருக்குமானால், அவ்வப்போது தடைகளை நீக்குவதற்கு முயற்சி செய்யலாம்.

DEPUTY SPEAKER : The question is—

That the allotment of Rs. 69,32,000 under Demand XVI—Education—be reduced by Re. 1.

The cut motion was put and lost.

SRI K. SATTANATHA KARAYALAR : I am not moving my other cut motion.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 69,32,000 under Demand XVI—Education.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVII—MEDICAL.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 2,25,700 under Demand XVII—Medical.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 2,25,700 under Demand XVII—Medical.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIX—AGRICULTURE AND FISHERIES.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 20,50,000 under Demand XIX—Agriculture and Fisheries.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 20,50,000 under Demand XIX—Agriculture and Fisheries.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XX—ANIMAL HUSBANDRY.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 100 under Demand XX—Animal Husbandry.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 100 under Demand XX—Animal Husbandry.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXII—INDUSTRIES AND CINCHONA.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 1,89,300 under Demand XXII—Industries and Cinchona.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 1,89,300 under Demand XXII—Industries and Cinchona.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIII—HARIJAN UPLIFT.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 1,77,000 under Demand XXIII—Harijan Uplift.

DEPUTY SPEAKER : There are two cut motions. One is out of order.

One of the cut motions given notice of by Sri S. M. Annamalai relates to the failure of the Government to start a Land Colonization Scheme in the North Arcot district. But the Demand relates to providing facilities to Tribal people. So this is not covered by this Demand. I, therefore, rule this out of order.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the other cut motion standing in my name, viz.—

That the allotment of Rs. 1,77,000 under Demand XXIII—Harijan Uplift—be reduced by Re. 1.

சட்ட மன்றத் தலைவர் அவர்களே, போளூர் தாலூகாவில் மலைவாசிகளுக்கு இதுவரையில் அதிகப்படியான பணம் செலவிடப்படவில்லை. அதிலும் குறிப்பாக, செங்கம், திருப்பத்தூர் தாலூகாக்களில் ஏறத்தாழ இரண்டு, மூன்று கிராமங்களிலுள்ள மலைவாசி மக்களுக்கு குறிப்பிட்ட தொகை செலவழிக்கப்படுகிறதே தவிர, போளூர் தொகுதியில் திராவிட

முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் வெற்றிபெற்ற காரணத்திற்காகத்தான் போளூர் தொகுதியிலே ஜவ்வாது மலைவாச மக்களைப் புறக்கணித்துக்கொண்டு வருகிறார்கள். இதைச் சென்ற இரண்டு ஆண்டுகளாக மேலும் மேலும் வற்புறுத்தியும்கூட, இதுவரையில் அந்த இடத்தில் ஒருவித முன்னேற்றமும் காணப்படவில்லை. இதுபற்றி நான் கூட ஒரு கேள்வி இந்த மன்றத்தில் கேட்டிருந்தேன். அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொன்னார்கள். திருப்பத்தூர் தாலுகாவுக்கும், செங்கம் தாலுகாவுக்கும் செலவழிக்கிறார்களேயொழிய, போளூர் தாலுகாவுக்குச் செலவழிப்பது கிடையாது. போளூர் தாலுகாவில் நூறு கிராமங்கள் இருக்கின்றன. அங்குள்ள மக்களுக்கு அதிகப் பணத்தைச் செலவிடாமல், குறிப்பாக ஜவ்வாது மலைவாச மக்களுக்குச் செலவிடாமல், செங்கம் தாலுகா மக்களுக்கும், திருப்பத்தூர் தாலுகா மக்களுக்கும் தான் செலவழித்துக்கொண்டு வருகிறார்கள். அந்தக் காரணத்திற்காகத்தான் இந்த வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know how this is in order.

இந்த வெட்டுப் பிரேரேபணையை கொண்டு வந்த ஸ்ரீ. அண்ணாமலை அவர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் அங்கே ஜெயித்து வந்தது அதன் காரணமாக அங்கே இருக்கக்கூடிய மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை வெளியிட்டார். அப்படிப்பட்ட ஒரு கருத்துக்கு இடம் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அம்மாதிரி சொல்லியே புதிய சலுகைகளை வாங்கிக்கொடுத்தோம் என்று வற்புறுத்துகிற முறையில் அப்படிப் பேசுகிறார். அப்படிப் பேசியதால் மட்டும் புதிய சலுகைகள் வந்து விடாது. சர்க்கார் அவர்களுடைய கடமையைச் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். எந்த எந்த பகுதிகளில் முக்கியமாக ஹரிஜனங்களும் மலை ஜாதியினரும் இருக்கிறார்களோ அங்கே அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அக்கறை எடுத்துக்கொண்டு காரியங்களை அரசாங்கம் நிறைவேற்றிக் கொண்டு தான் வருகிறது. நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு தான் வருகிறது. அப்படி திட்டங்கள் நிறைவேறி வரும்போது நாங்கள் சொன்னதால்தான் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள் என்று சொல்வதற்கும் அவர்கள் முன் வருவார்கள். அந்த முறையில் பேச வேண்டாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அந்த முறையில் பேசுவது அவசியம் இல்லை என்று சொல்லிக்கொண்டு ஏதோ பேசியாகிவிட்டது, அவருடைய வெட்டுப் பிரேரேபணையை வற்புறுத்த வேண்டாம் என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

That the allotment of Rs. 1,77,000 under Demand XXIII—Harijan Uplift—be reduced by Re. 1.

The cut motion was put and lost.

11th September 1959]

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 1,77,000 under Demand XXIII—Harijan Uplift.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXV—CIVIL WORKS—WORKS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 1,02,200 under Demand XXV—Civil Works—Works.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 1,02,200 under Demand XXV—Civil Works—Works.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVI—CIVIL WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 3,52,600 under Demand XXVI—Civil Works—Establishment and Tools and Plant.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 3,52,600 under Demand XXVI—Civil Works—Establishment and Tools and Plant.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVII—CIVIL WORKS—GRANTS-IN-AID.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 13,00,100 under Demand XXVII—Civil Works—Grants-in-Aid.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 13,00,100 under Demand XXVII—Civil Works—Grants-in-Aid.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXX—STATIONERY AND PRINTING.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 11,04,900 under Demand XXX—Stationery and Printing.

DEPUTY SPEAKER: The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 11,04,900 under Demand XXX—Stationery and Printing.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXI—MISCELLANEOUS.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 85,66,900 under Demand XXXI—Miscellaneous.

DEPUTY SPEAKER: The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 85,66,900 under Demand XXXI—Miscellaneous.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIII—ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 9,81,000 under Demand XXXIII—Road Transport Schemes.

DEPUTY SPEAKER: The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 9,81,000 under Demand XXXIII—Road Transport Schemes.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIV—COMPENSATION TO ZAMINDARS.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 20,00,000 under Demand XXXIV—Compensation to zamindars.

DEPUTY SPEAKER: Sri V. K. Kothandaraman and Sri N. Marudhachalam have given notice of an amendment to this Demand. This amendment is out of order.

11th September 1959] [Deputy Speaker]

The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 20,00,000 under Demand XXXIV—Compensation to zamindars.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 55,00,000 under Demand XXXVI—Capital Outlay on Irrigation.

DEPUTY SPEAKER : The Demand is before the House for discussion.

* SRI M. A. MUTHIAH CHETTIAR : கனம் உப தலைவர் அவர்களே, இன்று இந்த பிரேரபணை மீது கனம் மராமத்து மந்திரி அவர்கள் பேசுவார் என்று நினைத்தேன். ஆனால் அவர் முன்பே பேசியிருக்கலாமோ என்னமோ. காலம் சுருக்கமாக இருப்பதால் கனம் நிதி அமைச்சர் அவர்களே எல்லாவற்றிற்கும் பதில் சொல்லுகிறார் என்றே நினைக்கிறேன். இருந்தாலும் பரம்பிக்குளம் திட்டம் சம்பந்தமாக கனம் நிதி அமைச்சரையும் மற்றுமுள்ளவர்களையும் நான் பாராட்டுகிறேன். எந்த இடமாக இருந்தாலும் சரி அது பெரிய இடமாக இருந்தாலும் சரி சிறிய இடமாக இருந்தாலும் சரி எங்கே நீர்ப்பாசன ஸ்கீம்கள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் எடுத்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு முன்னதாக இந்த சபையில் எவ்வளவோ தடவைகளில் சொல்லியிருக்கிறேன், அதாவது தொண்டி கால்வாய் திட்டம் பற்றி, பல இடங்களிலுள்ள பல ஸ்கீம்களைப்பற்றியும் சொல்லி இருக்கிறேன். அப்படிப்பட்ட ஸ்கீம்களை எடுத்து நிறைவேற்றுவதற்கு எப்பொழுது வேண்டுமானாலும் சப்ளிமெண்டரி டிமாண்டு கொண்டு வந்து நிறைவேற்றலாம். சப்ளிமெண்டரி டிமாண்ட் எப்பொழுதும் கொண்டு வரலாம் என்பதைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு கூட்டத்திலும் கொண்டு வரலாம். வருஷத்தில் பனிரெண்டு மாதங்களிலும் கொண்டு வரலாம். ஆகவே பெரிய திட்டங்களாக இருந்தால் அவைகளை எடுத்துக்கொள்வதற்கு எவ்வளவு சப்ளிமெண்டரி டிமாண்ட் வேண்டுமானாலும் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சப்ளிமெண்டரி டிமாண்ட் கொண்டு வருவதற்கு லிமிட்டே கிடையாது. அந்த முறையில் இன்னுமொரு பெரிய ஸ்கீம் இருக்கிறது. இந்த தொண்டி ஸ்கீம். அந்த திட்டத்திற்கு ஏற்கனவே ஒரு ஸ்கீம் போட்டு 100 கோடி ரூபாயாகும் என்று சொல்லப்பட்டது. அந்த ஸ்கீமைப்பற்றி இப்பொழுது அது சம்பந்தமான இஞ்சினியர் கூட மறந்து போயிருப்பார் என்று நினைக்கிறேன். ஸ்கீம் போடுவதற்கே கோடி ரூபாய் ஆகியிருக்கலாம். அந்த

[Sri M. A. Muthiah Chettiar] [11th September 1959

ஸ்கீம் ஜோடர்பாளையத்திலிருந்து ஆரம்பித்து மணப்பாறை, புதுக்கோட்டை, தொண்டி வரையில் போகக்கூடிய ஸ்கீம் அது. அது ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு பிறகு கைவிடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் எடுத்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவோ ஸ்கீம்களை கனம் நிதி அமைச்சர் அவர்கள் முடித்திருக்கிறார்கள். அதற்கு அவரை நான் பாராட்டுகிறேன். அதோடு இதையும் எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வரப்போகும் டிசம்பர் கூட்டத்தில் கூட ஒரு சப்ளிமெண்டரி டிமாண்டை அதற்கு என்று கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது கொண்டு வரா விட்டாலும் வேறு செஷனில் கொண்டு வரலாம். அல்லது ஒரு டோகன் க்ராண்டாகக் கொண்டு வந்தாவது இதை எடுத்துக் கொள்வதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்படி முயற்சி எடுத்துக்கொள்வார் என்றும் நம்புகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 55,00,000 under Demand XXXVI—Capital outlay on Irrigation.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 1,50,000 under Demand XXXVII—Capital outlay on Public Health.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 1,50,000 under Demand XXXVII—Capital outlay on Public Health.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 10,99,700 under Demand XXXIX—Capital outlay on Industrial Development.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 10,99,700 under Demand XXXIX—Capital outlay on Industrial Development.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XL—CAPITAL OUTLAY ON CIVIL WORKS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 14,57,100 under Demand XL—Capital Outlay on Civil Works.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 14,57,100 under Demand XL—Capital Outlay on Civil Works.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLI—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 2,13,800 under Demand XLI—Capital Outlay on Road Transport Schemes.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 2,13,800 under Demand XLI—Capital Outlay on Road Transport Schemes.

The Demand was put and carried and the Grant was made.

It being 1 o'clock, the Deputy Speaker proceeded pursuant to 1 p.m.
the rules to put the questions on the Demands, notice of which had been given by Government.

DEMAND XLIII—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 12,25,000 under Demand XLIII—Capital Outlay on Schemes of Government Trading.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLIV—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 48,21,000 under Demand XLIV—Loans and Advances by the State Government.

The Demand was put and carried and the Grant was made.

II.—ANNOUNCEMENTS *RE* BILLS—*cont.*

DEPUTY SPEAKER : I have to announce that the Governor has given his recommendation to the introduction and consideration of the Madras Appropriation (No. 3) Bill, 1959, in the Legislative Assembly.

VII.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1959.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 3) Bill, 1959.

The motion was put and carried, and leave was granted.

THE HON. SRI C. SUBRAMANIAM : I introduce the Bill, Sir.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then rose.

[After lunch—3 p.m.]

(Mr. Speaker in the Chair).

(2) THE MADRAS IRRIGATION WORKS (CONSTRUCTION OF FIELD BOTHIES) BILL, 1959.

* THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : Sir, I beg leave to introduce the Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959 [a], and move—

That the Bill be taken into consideration.

Sir, it is usual for the Government to excavate at Government cost the main channels and distributaries for irrigating blocks up to fifty acres. It is the responsibility of the ryots to excavate the smaller distributaries necessary for irrigating the individual fields within this block. However, in order to reduce the burden on the ryots, instructions were issued to subordinate officers to acquire lands for distributaries at Government cost for irrigating blocks up to twenty-five acres limit and to construct the smaller distributaries by the Department if the ryots agreed to deposit the cost of excavation. Even this liberalisation of the rules has not had the desired effect due mainly to disagreement among the ryots. In fact difficulties were experienced in the matter of fully developing the ayacut and utilising the irrigation facilities under a project due

Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th August 1959.

11th September 1959] [Srimathi Lourdammal Simon]

mainly to the fact that, in some cases, the concerned ryots found it difficult to excavate the field bothies owing to obstruction by a particular landholder or landholders. The Government have, therefore, considered it necessary to take power by this legislation—

(1) to exclude from the ayacut of any irrigation project, after giving notice to concerned ryots, lands in respect of which the ryots fail to dig field bothies within a stipulated time; and

(2) in cases where there are disputes, to acquire lands required for the purpose and excavate field distributaries at Government cost in the first instance and to recover such cost including the cost of special staff, if any, employed for the purpose from the concerned ryots.

This Bill is thus designed only to enable the Government to attain full development of the ayacut, so that irrigation facilities under a project could be utilised better and quicker by the ryots concerned.

This Bill is a simple one and I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER: Motion moved:

That the Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959, be taken into consideration.

Sri K. R. Nallasivam will move his amendment.

SRI K. R. NALLASIVAM: Sir, I move the amendment standing in my name, viz.,

That the Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959, be referred to a Select Committee consisting of Members of the Assembly.

The amendment was duly seconded.

MR. SPEAKER: The motion and the amendment are before the House for discussion.

SRI T. SAMPATH: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நல்லசிவம் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானம் என்னவென்றால் இந்த மசோதாவை பொறுக்கு கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்பது. அது தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இது ஒரு சிறிய மசோதா. இதில் ஆறோ, எட்டோ பிரிவுகள்தான் இருக்கின்றன. இதை இங்கு வைத்தே பரிசீலித்து எதாவது திருத்தங்கள் செய்யவேண்டுமென்றால் திருத்தி இப்போதே நிறைவேற்றுவதுதான் பொருத்தமாய் இருக்கும். இந்த மசோதா கொண்டு வந்திருப்பதின் முக்கிய நோக்கம் என்னவென்றால், பாசன வசதிகள் இல்லாத இடத்தில் விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு அனுகூலமாக பாசன

வசதிகளை அதிகமாக செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான். பெரிய அணைக்கட்டுகள், நீர் தேக்கங்கள் இவைகள் எல்லாம் இருந்தாலும்கூட, அதற்கேற்றவாறு பாசன வசதிகள் இருந்தால்தான் விவசாயிகள் அதன் பலனை அடைய முடியும். அந்த நோக்கத்தின் பேரில்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது ஐம்பது ஏக்கர்களுக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு அரசாங்கமும் அதற்கு கீழ் வைத்திருப்பவர்களுக்கு அவரவர்கள் சொந்தமாகவும் இந்த பாசன வசதிகளை செய்துகொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் நான் இன்னொரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவில் இது போன்ற பாசன வசதிகள் ஏராளமாக இருந்தும், அவைகள் எல்லாம் உபயோகப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதாவது பாசன வசதிகள் அதிகமாக கிடைக்கவேண்டுமென்றால், வடிகால், பாய்கால் இவைகள் எல்லாம் சரியான முறையில் இருக்கவேண்டும். இப்போதுள்ள நிலையைப் பார்த்தால், இவைகள் எல்லாம் சீர்கேடாக இருக்கிறது. இதனால் அங்குள்ள விவசாயிகளுக்கு எந்தவித பலனும் இல்லாமல் இருக்கிறது. ஆனால் அங்கு குடிமராமத்து சட்டம் என்று ஒரு சட்டம் அமுலில் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டம் அமுலில் இருந்தால் இந்த வசதிகளை பெருக்க முடியும். இதைப்பற்றி நேற்று நடந்த விவாதத்தின் போது கனம் சீனிவாச அய்யர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சை ஜில்லாவின் கீழ் பகுதியில் பாசன வசதிகள் இல்லாமல் பயிர் செய்ய வழியில்லாமல் இருக்கின்றது. இரண்டாவது, அங்கேயுள்ள நிலச்சுவான்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் ஒரு ஒற்றுமை இல்லாமல் இருப்பதின் காரணமாக பாய்கால், வடிகால் இவைகள் எல்லாம் சீர்கேடாக இருந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக விளைவு பாதிக்கப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இதைக் குறிப்பிடுவதற்கு காரணம் பாசன வசதிகள் போன்ற நன்மைகள் செய்து கொடுப்பதின் மூலமாக நிச்சயமாக விளைவை பெருக்க முடியும் என்கிற காரணத்தினால்தான் இதைக் குறிப்பிடுகிறேன். அதிலும் இப்போது பல இடங்களிலும் கண்மாய்கள் இருக்கிறது என்றாலும்கூட பாசன வசதிகள் சீராக இல்லாததின் காரணமாக சரியான முறையில் தண்ணீர் வயல்களுக்கு செல்வதற்கு வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் இந்த மசோதாவில் நான்காவது பிரிவில் நிலச்சொந்தக்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்களே, அவர்கள் நிலத்தின் பக்கத்தில் இருக்கும் பாசன வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அதோடு லான்ட் அக்விஸிஷன் ஆக்ட்-டின் மூலமாக இதைக் கட்டாயப்படுத்தினால் நல்லது என்று நினைக்கிறேன். இதன் மூலமாக பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிலங்களை அக்வைர் செய்வதற்கு வசதியாக இருக்கும், அகவே அந்த சட்டத்தின் மூலமாக நடவடிக்கைகள் எடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் ஷெட்யூலில் காவேரி மேட்டூர் பிராஜக்ட்-டையும், வடவார் ஸ்கீமையும் விட்டுவிட்டிருப்பதாக தெரிகிறது. அதையும் சேர்த்துக்

11th September 1959] [Sri T. Sampath]

கொண்டால் நலமாக இருக்கும் என்பதோடு அது எங்கள் ஜில்லாவுக்கும் தஞ்சை ஜில்லாவுக்கும் வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, சபையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கும் மசோதாவை வரவேற்கிறேன். இதில் இருக்கும் ஒருசில குறைகளைப் பார்க்கும் போது இதை ஒருவேளை பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டிய அவசியம் இருக்குமோ என்று ஐயப்படுகிறேன். ஆனல் அதை கனம் அமைச்சர் அவர்கள் கவனித்துக்கொள்ளட்டும் என்று விட்டு விடுகிறேன்.

புதிதாக பல நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கும் இந்தக் காலத்தில் ஒருசில நிலச் சொந்தக்காரர்களின் சார்பாக வரக்கூடிய ஆட்சேபணைகள் காரணமாக திட்ட வேலைகள் முடிக்கப்படாமல்போய் வழியிலுள்ள நிலங்களுக்கு பாசனவசதி ஏற்படமுடியாத நிலைமை ஏற்படுமோ என்ற ஐயப்பாடு ஏற்பட்டு, அதன் விளைவாக அத்தகைய தடங்கல்களைத் தவிர்க்க வழிவகை செய்வதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த வழிவகைகளை, அதாவது இந்த மசோதாவிலுள்ள விதியை புதிதாக நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு மட்டுமன்றி ஏற்கனவே நீர்ப் பாசன வசதி கொடுக்கப்பட்டுள்ள பல பகுதிகளுக்குக் கூடப் பிரயோகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே நீர்ப்பாசன வசதி செய்துதரப்பட்ட பகுதிகளில்கூட ஒருசில பகுதிகளில் ஒரு சில வாய்க்கால்கள் சரியானபடி மராமத்து செய்யப்படாமல் இருக்கும்போது அதைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது; இதை அதிகாரிகளும் மராமத்து செய்ய வேண்டிய நிலச் சொந்தக்காரர்களும் உணர்ந்திருந்தாலும்கூட மராமத்து வேலையைச் செய்துமுடித்தால் அதனல் பலன் அடைபவர்களிடமிருந்து அதற்கான செலவை வசூலிப்பதற்கான அதிகாரம் அவர்களுக்கு இல்லை. புதிய திட்டங்களைப் பொறுத்தவரையில், அதிகாரிகள் அந்த வேலையைச் செய்தால் அவர்கள் அவ்வாறு அந்தச் செலவுக்கான பணத்தை அதனல் பலன் அடைபவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதியை புதுத் திட்டங்களுக்கு மட்டுமின்றி ஏற்கனவே இருக்கும் திட்டங்களுக்கும் பிரயோகிக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவின் முக்கிய நோக்கம், திட்டப் பிரதேசத்தில் யாராவது ஓரிருவர் குடிமராமத்து செய்யாவிட்டால் அவர்களுடைய நிலங்களுக்கு அப்பாலுள்ள நிலங்களுக்கும் பாசன வசதி இல்லாது போய்விடும் என்பதால் அப்படிச் செய்யக்கூடியவர்களை குடிமராமத்து செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டும் என்பது ஆகும். கால்வாய் வெட்ட வேண்டும் என்ற நோட்டீஸை ஒருவருக்கு கலெக்டர், அதாவது ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், கொடுத்தால் அவர் அதை செய்து

முடிக்க வேண்டுமென்று இந்த மசோதாவின் 3-வது பிரிவில் கண்டிருக்கிறது. அவர் அதைச் செய்யத் தவறினுல் என்ன செய்ய வேண்டும் என்று 4—5 பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கிறது. 6-வது பிரிவில், சர்க்கார் அந்த இடத்தை அக்வைர் செய்து புறம்போக்கு நிலத்திலும் அந்த இடத்திலும் வாய்க்கால் வெட்டி அதனுல் ஏற்படும் செலவுக்கான பணத்தை வாய்க்காலால் பயனடைபவர்களிடமிருந்து வசூலித்துக்கொள்ளலாம் என்று கண்டிருக்கிறது. 3-வது பிரிவின்படி கொடுக்கப்படும் நோட்டீசுக்கிணங்க யாராவது வாய்க்கால் வெட்டினுல் அவர் அதனுல் பயனடைபவர்களிடமிருந்து அதற்கான செலவிற்கான பணத்தை வசூலிப்பதற்கு அவருக்கு இந்த மசோதாவில் அதிகாரம் வழங்கப்படவில்லை. இத்தகைய அதிகாரத்தை 4-வது பிரிவில் கொடுக்கலாம். எனவே 4-வது பிரிவை அந்த முறையில் திருத்தியமைக்க வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒருவன் ரெவினியூ டிவிஷனல் ஆபீசரின் உத்தரவின்படி நடக்கத் தவறினுல் அவனுக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனை, அவனுடைய நிலத்தை பாசன வசதி பெறமுடியாதபடி ஆயக்கட்டிலிருந்து நீக்குவது என்று மசோதாவில் கண்டிருக்கிறது. இது சரியான பரிகாரமா என்று சிந்திக்க வேண்டியது அவசியம். வாய்க்காலை வெட்டி மற்றவர்களுக்கு தண்ணீர் வசதி கிடைக்க உதவும்படி அவனை அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். அவன் அப்போதும் அதைச் செய்யத் தவறுவானுனல் அரசாங்கமே அதைச் செய்துவிட வேண்டும். அவன் செய்யவில்லையானுல் அவனுக்கு தண்டனை விதிக்கலாமே தவிர, அவனுடைய நிலத்தை ஆயக்கட்டிலிருந்து நீக்கினுல் அவனைப் பொறுத்தவரையில் அவன் முரடனுக இருந்தால் தனக்கு அக்கறையில்லை என்று சும்மா இருந்துவிடுவான். அதனுல் நாட்டுக்கு நஷ்டம் ஏற்படும். எனவே அவனுக்கு தண்டனை விதிக்கலாமே தவிர அவனுடைய நிலத்தை ஆயக்கட்டிலிருந்து நீக்குவது கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அவன் வாய்க்கால் வெட்டத் தவறினுல், 6-வது பிரிவில் கண்டுள்ளபடி அவனுடைய அந்த நிலத்தை சர்க்கார் லாண்ட் அக்விஸிஷன் ஆக்டின்படி எடுத்துக்கொண்டு புறம்போக்கிலும் அந்த நிலத்திலும் வாய்க்கால் வெட்ட வேண்டுமென்று கண்டிருக்கிறது. ஏற்கனவே இத்தகைய ஒரு பிரிவு லாண்ட் அக்விஸிஷன் ஆக்டில் இருக்கும்போது தனியாக இப்பேர்ப்பட்ட ஒரு பிரிவு இந்த மசோதாவில் இருக்க வேண்டியது அவசியமா என்று பரிசீலிக்கவேண்டும்.

அடுத்தபடியாக இந்த மசோதாவிலுள்ள சில அம்சங்களை சட்டரீதியாகப் பார்க்கும்போது சில பிரிவுகளை மாற்றியமைக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. பிரிவுகள் பற்றி விரிவாக விவாதிக்கும்போது அவைகள் பற்றிப் பேச முற்படுவேன் என்றுலும், ஒன்றிரண்டு பிரிவுகள் பற்றி இப்போது பேச விரும்புகிறேன். மசோதாவில் கலெக்டர் என்ற பதத்திற்கு அர்த்தம் கொடுக்கும்போது எல்லா இடங்களிலும் அந்தப் பதத்திற்கு

11th September 1959] [Sri S. Lazar]

ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் என்றுதான் அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் ஜில்லாக் கலெக்டரைக் குறிப்பிடும்போது ஜில்லாக் கலெக்டர் என்றே சொல்லிவிட்டார்கள். இந்த மசோதாவில் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரை கலெக்டர் என்ற பதத்தில் குறிப்பிடுவதற்கு பதிலாக; நேரடியாக ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் என்ற வார்த்தையையே போட்டிருக்கலாம்.

அதற்கடுத்தபடியாக, நிலத்தை வெட்டலாம் என்று சொல்லும் போது அது சம்பந்தமான சில சொற்றொடர்களில் 'in relation to his land' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பொறுத்தமான சொற்றொடரா என்று சிந்திக்க வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த சொற்றொடருக்கு பதிலாக 'in his land' என்ற சொற்றொடரைப் போட்டால் அது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தக் கருத்துக்களை மனதிற்கொண்டு இவைகளுக்குத் தகுந்தவாறு இந்த மசோதாவை மாற்றியமைக்க வேண்டும். மசோதாவில் இன்னும் சில தவறுகள் இருப்பதாக நான் கருதுகிறேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் மனதிற்கொண்டு இந்த மசோதாவை மாற்றியமைக்க வேண்டுமானால், இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவது அவசியமாகலாம் என்று கருதுகிறேன். இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI M. JAGANNATHAN : Mr. Speaker, I think I will have to welcome this Bill, because this Bill though it is very small in size is very big in importance. I think that it is not only important to build or construct dams and irrigation projects, but it is also very important to see how best we are going to utilise them. This Bill provides certain conditions and facilities which should be availed of if at all we want to utilise our irrigation projects in the best manner possible.

According to this Bill, there are two main objects. The first is the development of the ayacuts under the projects—and the second is the best utilisation of the irrigation facilities offered by the projects. Sir, when there is a dispute between the ayacutdars—land owners—who have got lands under the irrigation projects, the Government will step in and acquire lands. At their cost they will excavate the distributaries, and later on they will recover the cost from the ayacutdars. The other category of ayacutdars who are indifferent or unwilling to excavate distributaries are severely dealt with under the provisions of this Bill. As the hon. Member from Lalgudi has put it, the exclusion of the land belonging to that particular type of ayacutdar who is indifferent or unwilling to excavate some distributaries for his land is rather very severe. It is not in the best interests of the State as a whole. That is what he has said. It is too severe a punishment. Instead of excluding his land from the ayacut in the project, the hon. Member suggested that we should provide for some penalty which will go a long way in intimidating that particular ayacutdar, who will then come forward to excavate distributaries out of

[Sri M. Jagannathan] [11th September 1959

fear of this penalty, and make use of the irrigation facilities provided by the project. Sir, the provision here to exclude his land from the ayacut under the project is itself sufficient to instil fear in the minds of the ayacutdars who are unwilling or indifferent to provide for the small distributaries under the projects. It is not necessary that we should introduce in this Bill any penalty as such. The threat to exclude his lands from the ayacut itself is more than sufficient to compel the ayacutdars to come forward and provide for the distributaries to their lands at their own cost. Therefore, I oppose the suggestion of the hon. Member coming from Lalgudi that instead of exclusion that is provided for in the Bill there should be a provision for penalty. Sir, we all know that the land acquisition proceedings are proverbially delayed.

MR. SPEAKER : The two lawyers differ!

* SRI M. JAGANNATHAN : We cannot help it. There is inordinate delay ranging over years. For instance, in the case of acquisition of lands belonging to certain land owners, it takes years for the Government to acquire those lands compulsorily. Unless the emergency provisions of the Madras Land Acquisition Act are invoked under conditions like these, it is not possible to acquire lands. But the maximum advantage can be availed of in pursuance of this Bill. As the hon. Member Sri T. Sampath pointed out, the provisions of the Madras Land Acquisition Act, especially the emergency provisions, must be included in this Bill. Otherwise, there is bound to be enormous delay in the matter of acquisition of lands. In cases where there are disputes between ayacutdars with reference to the excavation of distributaries to their lands, the Government are going to interfere, and they are going to acquire those lands. The Government are going to dig or excavate distributaries for the benefit of ayacutdars, and later on recoup from such ayacutdars the cost of excavation. In this connection, I would like to make this point very clear. The Government, wherever they dig or excavate distributaries, in cases of disputes between two or more ayacutdars, at their own cost, and when they take steps to recover such cost from the ayacutdars, they should see that they do not insist upon repayment of the cost in one lump sum. If lump sum payment is insisted upon, it will work hardship upon the ayacutdars. What I would like to point out on this occasion is that in cases where the Government seek to recover the cost from the ayacutdars, they must give some facilities in the form of easy and convenient instalments of repayment. If this is not done, the ayacutdars will be put to a lot of inconvenience and hardship. Therefore, when rules are going to be framed under this legislation, I think the Government will take this point into consideration and provide such rules as will enable the ayacutdars to repay the cost in easy and convenient instalments.

Another point which I would like to emphasise on this occasion is this, namely, the appeal time provided in the Bill is one month and that this is too short a period. By the time the aggrieved

party makes up his mind to appeal to the Collector, it will be more than one month. There will be so many practical difficulties standing in the way of the aggrieved party. He may be too poor to meet the cost of his appeal. By the time he makes up his mind to prefer the appeal to the Collector, one month would have expired. Therefore, in order to give him sufficient time, it is better that we increase the appeal time from one month to two months. The Government are not going to lose anything by this. Therefore, I would appeal to the Government on this occasion to take this into consideration and provide more time for appeal in the rules which they would frame under this law.

I do not think, Sir, that this Bill suffers from any serious defect or any serious flaw as it were so as to necessitate its being referred to a select committee of joint select committee. Therefore the motion for referring this Bill to a select committee is also not desirable, in my opinion. I hope that this Bill, with the co-operation of all the members from both sides, will be taken into consideration and passed unanimously. Thank you, Sir.

* SRI R. ŚRINIVASA IYER : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒரு மசோதாவையாவது எல்லோரும் ஒற்றுமையாக நிறைவேற்றவேண்டும் என்று கனம் அங்கத்தினர் ஜெகந்நாதன் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். இந்த மசோதாவானது ரொம்பவும் அவசியம். அதுவும் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டும் என்று தினந்தோறும் சொல்லி, அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு இருக்கும் நேரத்தில் வந்திருக்கிறது என்பது ரொம்பவும் நல்லதுதான். இத்தனை காலம் கழித்து—எறக்குறைய 30 வருஷ காலமாக எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பாசனம் நடந்து வரும்போது—30 வருஷ காலமாக எவ்வளவோ சிரமங்களை அனுபவித்த பிறகு—இப்போது காலம் கழித்து வந்திருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

இப்போது இந்த மசோதாவில் இருக்கும் சில விதிகளைப் பற்றி எனக்கு முன்பாகப் பேசிய அங்கத்தினர்கள் பேசினார்கள். கிராமங்களில் நடக்கக்கூடிய விஷயம் என்ன—நாட்டில் நடக்கக்கூடிய விஷயம் என்ன—என்பதை நன்றாக அறிந்துக்கொண்டு இதிலுள்ள சில விதிகளைத் திருத்த வேண்டியிருக்கிறது. முக்கியமாக புதிது புதிதாக ஏராளமான ரூபாய் செலவு செய்து—கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து—திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். அந்தத் திட்டங்களெல்லாம் பூராவாக அமுலாகி ஒவ்வொரு செண்ட் நிலமும், ஆயக்கட்டு நிலங்களெல்லாம், பாசன வசதி பெற்று உபயோகப்பட வேண்டியதுதான். அந்த வகையிலேதான் அந்தத் திட்டத்திற்கு எற்படும் செலவுத் தொகைக்கு வருவாய் என்ன என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதை எதிர்பார்த்துத் தான் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. பாசன வசதி எற்படாமல் ஏராளமான—விஸ்தாரமான—நிலங்கள் இருந்தால்,

தண்ணீர் வசதி இல்லாது இருந்தால் உணவு உற்பத்தி குறையும், அதனுல் வரக்கூடிய வருமானம் குறையும். இப்போது நாட்டிலே என்ன நடக்கிறது என்று கொஞ்சம் பார்க்கவேண்டியது அவசியம். சாதாரணமாக ஒவ்வொரு பட்டாதார் நிலத்துக்கும் இருக்கக்கூடிய கிளை வாய்க்கால்களுக்கு "Bothies" என்று பி.டபிள்யூ. டி.-ல் பெயர் வைத்திருக்கிருர்கள். இது மேட்டு நிலத்தார் வழியாகப் போகவேண்டும். இது 25 ஏக்கருக்கு ஒரு ப்ளாக் ஆக வைத்து காவேரி மேட்டூர் ப்ராஜக்டில் ஏற்கனவே திட்டம் வகுத்துவிட்டார்கள். இப்பொழுது புதிதாக வரக்கூடிய திட்டத்திலே 50 ஏக்கராக வைப்பதாகச் சொல்லப்பட்டது. 25 ஏக்கர் தான் நியாயமாகும். இரண்டுபட்ட மனப்பான்மை காரணமாக, எல்லோரும் நன்ருக இருக்கவேண்டுமென்ற எண்ணம் இல்லாதன் காரணமாக சிலர் தங்கள் நிலத்தின் வழியாகத் தண்ணீர் விட முடியாதென்று ஆட்சேபிக்கிருர்கள். அதனுல் வாய்க்கால்கள் வெட்டப்படவில்லை. இதில் ஆயக்கட்டுதான் என்று மட்டும் மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயக்கட்டில் சேராத சில தோப்புகள், மேட்டு நிலங்கள் வழியாகக் கூட கிளை வாய்க்கால்கள் போகின்றன. எனக்குத் தெரிந்து அந்த வாய்க்கால்கள் வெட்டப்படாமல் இருக்கின்றன. அந்த மாதிரி சமயத்தில் இது உபயோகப்படும். இது எல்லாவற்றையும் ஆலோசித்துத்தான் நானும் கனம் சம்பத் அவர்களும் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேம். அதை மந்திரியவர்களும் ஆலோசித்துத் தக்கவாறு திருத்தங்களைச் செய்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

3-30 p.m.

இது தவிர, இந்த வாய்க்கால்கள் 25 ஏக்கருக்குள்ளேயே சில இடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இந்த நிலக்காரனும், அடுத்த நிலக்காரனும் சௌஜன்யமாக இருக்கிருர்கள். நாளைக்குப் பஞ்சாயத்து எலக்ஷன் வருகிறது என்ருல், சௌஜன்யமாக இருந்தவர்களிடையே சண்டை வருகிறது. இரண்டு கட்சியாகப் போகிறது. அவ்வாறு இரண்டு கட்சியாகப் போனவுடன் ஒருவன் வாய்க்காலை இழுத்து மூடி விடுகிருன். இந்த ஜலம் பாய்ந்து கொண்டிருக்கும் வாய்க்கால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது அல்ல. வாய்க்காலை இழுத்து மூடிவிட்டால் கலெக்டரிடம் மனுக் கொடுத்து, டிபுடி கலெக்டர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், கணக்குப் பிள்ளை எல்லோரும் இதைப் பற்றி விசாரிக்கவே ஒரு வருஷம் ஆகிவிடும். இந்த மாதிரி சிவில் வியாஜ்யம் போட்டு ஹைகோர்ட் வரை போய்த் தோற்றுவிட்டது. அதற்கும் தகுந்த இடம் வேண்டும். இதுவும் தவிர புதிதாக வாய்க்காலை வெட்டவேண்டுமென்று மேட்டு நிலத்தில் இருப்பதன் காரணமாக பாசன காலத்தில் தண்ணீர் கேட்டால், ,, Lund Acquisition Act" படி முதலிலே பணம் கட்டவேண்டும். எவ்வளவு கிரயம் ஆகும் என்ற கேள்வி. இதிலேயே ஒரு வருஷம் போய்விடுகிறது. "அக்விசிஷன் நோட்டீஸ்" போடவேண்டும். "Land Acquisition Act" 4 (1) விதிப்படி இதெல்லாம் விசாரிக்கவேண்டும். இதற்குள் 3 வருஷங்கள் ஆகிவிடுகிறது. "Land Acquisition Act" ல் செக்ஷன் 17 இருக்கிறது. ரயில்வே போன்ற முக்கியமான பெரிய

11th September 1959] [Sri R. Srinivasa Iyer]

இடங்களுக்கு "அப்ளை" பண்ணிக் கொள்ளலாமே தவிர, அப்ஜக்ஷன் கொடுக்கப்பட்டு முடிவுக்கு வர நாள் ஆகும். இது உடனடியாக நிறைவேராது. பழைய ப்ராஜக்ட், பழைய விஷயர்கள் எது நடந்தாலும் மறந்துவிட்டு, புதிதாக நூதனமாக, முக்கியமாக இருப்பதுதான் ஞாபகத்திற்கு வருவது வழக்கம். சென்னை ராஜ்யத்தில் 3 லட்சம் ஏக்கர் காவேரி மேட்டூர் பாசனத்திற்கும், பழைய பாசனத்தில் தண்ணீர் பாய, 1929-ல் முடிவு அடைந்து விட்டது. அந்த ப்ராஜக்ட் பற்றி இந்த மசோதாவில் இருக்கக் கூடிய ஷெட்யூலைக் காணும். அதில் இருக்கவேண்டியது மிகவும் முக்கியம். பாதிக்கப்படும் ஏரியா தஞ்சை காவேரி, மேட்டூர் பிருஜக்ட்டு. இவைகளில் தண்ணீர் பாயாமல் இருப்பதை இன்றைக்குக் கணக்கு எடுத்தால் 10,000 எக்கருக்கு ஜலம் பாயாமல் இருக்கிறது. மேட்டூர் நிலம் வழியாக ஜலம் விடுவதில்லை. பழைய நீர்ப் பாசனத் திட்டங்களை நாம் மறந்து விடக்கூடாது. "Maintenance" ரொம்ப அவசியம். காவேரி டெல்டா சோழ ராஜ்ய காலத்திலே ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் கூட முறைப்படி வெட்டப்பட்டது. பழைய டெல்டாவிலும் அநேக சௌகரியங்கள் இருக்கின்றன. புதிதாகப் போடப் போகிரோம். சர்க்கார் ஒரு அபிப்ராயமும் சொல்லவில்லை. இதிலே "இறிகேஷன் ஒர்க்ஸ்" என்பதில்—

"2. (e) any other project or canal which may be declared by the Government by notification to be an irrigation work."

என்று இருந்தாலும் காவேரி மேட்டூர் ப்ராஜக்ட் பெரிய ப்ராஜக்ட். அதை மறந்து விட்டு புதிதாக இருப்பதை வியக்தமாகச் சொல்லாமல் நோடிபிகேஷன் வரும்படி ஏன் செய்யவேண்டும். இதை ஷெட்யூலில் சேர்த்திருக்கலாம்.

குடிமராமத்து ஆக்ட் பற்றிச் சொல்லப்பட்டது. இது புதுகிளை வாய்க்கால்களின் பட்டா கணக்கில் வராது. ஏற்கனவே இருக்கும் டெல்டாவில் நூதனமாகப் போய்க் கொண்டிருக்கும் வாய்க்கால்களை அந்தந்த கிராமத்தார் மராமத்து பண்ணவேண்டுமென்றிருக்கிறது. அதை "என்போர்ஸ்" பண்ண முடியாது. கிராமத்தார் எல்லோரும் ஒன்ருகச் சேர்ந்து கட்டவேண்டும். பழைய ஆக்ட்படி பழைய திட்டங்களையே சேர்த்துக் கொண்டு வந்தால் நன்ருக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதே நேரத்தில் இப்பொழுது "அக்வயர்" செய்யப்படாமல் இருக்கக்கூடிய வாய்க்கால்களை ஆழப்படுத்துவதற்கு "ப்ரோவிஷன்" வேண்டும். இதில் இருக்கும் செக்ஷன் 3-ம் 4-ம் முக்கியமானவை. இவை இரண்டையும் திருத்த வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஒரு ஆயக்கட்டைச் சேர்ந்த நிலத்தின் வழியாகப் போகக் கூடிய வாய்க்காலை ஆயக்கட்டார் விடாவிட்டால் ஆயக்கட்டில் இருந்து விலக்கி விடுவது என்று போட்டிருக்கிறது. அதன் அர்த்தம் புரியவில்லை. இது பெரிய பெனல்டி

என்று ஜகந்நாதன் அவர்கள் சொன்னுர்கள். "பெனல்டி" அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். மேலே இருப்பது ஆயக் கட்டில் சேர்ந்திருக்கிறது. அந்த நிலத்தில் உணவு உற்பத்தி ஆக வேண்டும். தண்ணீர் பாயவேண்டும். வெள்ளாமை நிறைவேற வேண்டும். அவன் நிலத்தில் வாய்க்காலை வெட்டவேண்டும். அதற்குக் கிரயம் இல்லாமல் அவன் நிலத்தில் இன்னொருவனை "காம்பன்ஸேஷன்" இல்லாமல் வாய்க்காலை வெட்டச் சொல்லி நிர்ப்பந்தப்படுத்தினுல் முடியாது. அதற்குக் கான்ஸ்டிட்யூஷனில் இடமில்லை. "......... dig field bothies in relation to his land." என்ற முறையில் "கான்ட்ரிப்யூஷன்" கொடுக்கிறோம். "டிலே" ஆகாதபடி நடக்கவேண்டும். "காஸ்ட் ஆப் அக்விசிஷன்" சேர்த்துக் கொள்ளவேண்டும். "அக்விசிஷன்" பண்ணுமல் அவனை நிர்ப்பந்தப்படுத்தி அவனுடைய நிலத்தில் போய் வாய்க்கால் வெட்டுவது "கான்ஸ்டிட்யூஷனுக்கு" விரோதமாக இருக்கும். "லாண்ட் அக்விசிஷன்" படி "காஸ்ட்" சேர்த்து வசூல் பண்ணுவதற்கு ப்ரொவிஷன் இருக்கவேண்டும். பீல்ட் பூதீஸ் எவ்வளவு ஆழம் வெட்டவேண்டும் என்பது முக்கியமானது. மேடாக இருந்தால் இரண்டு அடி வெட்டும்படியாக இருக்கும். சர்க்காரே வெட்டுவதாக ரூலில் இருக்கிறது. சர்க்காருடைய காஸ்ட்டில் நிலத்தை அக்வயர் பண்ணி கொடுக்கவேண்டும் என்ற அவசியம் அதில் இருக்கிறது.

அப்பீலைப்பற்றி கனம் ஜெகந்நாதன் அவர்கள் குறிப்பிட்டார். இப்பொழுது அப்பீலுக்கு ஒரு மாத டயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் பின்னல் அந்த டயம் போதாது என்று கேட்டால் டயத்தைக் கூட்டிக்கொடுக்கக்கூட அதில் ப்ரோவிஷன் இருக்கிறது. இப்படி ஒரு மாதம் கொடுத்திருப்பதே ஜாஸ்தி. அந்த நிலைமை இந்த ஒரு மாதம் போதாது என்றும் இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களாக இருக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் அந்த இறிகேஷன் சீசனே போய்விடலாம். உத்தரவு போட்டு அந்த உத்தரவு சர்வ் ஆகிற தேதியிலிருந்து ஒரு மாதம் என்று இருக்கிறது. இந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே பல தீர்மானங்களைச் செய்து விடலாம். பல யோசனைகளைக் கேட்டுக்கொள்ளலாம். இரண்டு மூன்று மாதங்கள் என்று டயம் கொடுத்து அதன் பிறகு ஸ்டே ஆர்டர் வாங்கிக்கொண்டே போய்க்கொண்டிருந்தால் இந்தச் சட்டத்தின் பிரயோசனமே இல்லாமல் போய் விடும். என்னுடைய கருத்து இந்த ஒரு மாதம் என்று இருப்பதை இன்னும் குறைக்க வேண்டும் என்பது தான். அப்படிக் குறைத்தால் தான் நன்மையாக இருக்கும். ஏதாவது காரணத்தைச் சொல்லி டயத்தை தள்ளிக் கொண்டே போகலாம். அதிகாரிகள்தான் எந்த வழியாகப் போக வேண்டும் என்று தீர்மானிக்கப் போகிறுர்கள். அப்பீல் செய்வதெல்லாம் பணம் கட்டுவதில் தான் வரப்போகிறது. மற்றவைகளையெல்லாம் அதிகாரிகள் தான் செய்யப்போகிறுர்கள் அதனல் அப்பீல் டயம் ஒரு மாதம் கூட இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

11th September 1959] [Sri R. Srinivasa Iyer]

அதோடு ஆயக்கட்டிலிருந்து எடுத்து விடவேண்டும் என்றும் சொன்னார்கள். அது ஒரு பெனல்டியாக ஆகாது. காஸ்டை ரெக்கவர் பண்ணுவதற்கு ஏதாவது ஸ்மால்ஃ பைனைப் போட லாம். அதுவும் அவர்களை பயமுறுத்துவதற்காகத்தான். ஆயக்கட்டை எடுத்து விட்டால் அவர்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை.

அடுத்தபடியாக மூன்றாவது நாலாவது க்ளாசைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. மூன்றாவது க்ளாசில்

". . . dig field bothies in relation to the land in the ayacut of an irrigation work, be shall by notice, require the owner to construct or dig field bothies in relation to . . ."

என்று இருப்பது சரியல்ல. கீழே இருக்கக்கூடிய நிலக்காரர் களுக்கு மேலே இருக்கக்கூடியவர்கள் வெட்டிக் கொடுக்க வேண் டும். யாருக்கு பெனிபிட் இருக்கிறதோ அவர்தான் வெட்டிக் கொள்ளவேண்டும். மேலே இருக்கிற நிலக்காரருக்கு வேண்டு மானால் நோட்டீஸ் கொடுக்கலாம். ஆனால் அவரை வெட்டச் சொல்வது நியாயம் அல்ல. அப்படி வெட்டவில்லையானால் வேண்டு மானால் கொஞ்சம் அபராதம் போடலாம். அதற்காக ஆயக்கட்டி லிருந்து விலக்குவது என்பது நியாயமாகத் தோன்றவில்லை. அதற்காகத்தான் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஏற் றுக்கொள்ளாவிட்டாலும் சர்க்காரே ஒரு திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ளலாம்.

செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே இது காலம் தாழ்ந்துதான் கொண்டு வரப்பட்டிருக் கிறது. செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் இன்னும் கால தாம தம் ஆகலாம். இந்தச் சட்டத்தை இன்றைக்கே பாஸ் பண்ண வேண்டியதாக இருக்கிறது, ஏனென்றால் நாளையோடு இந்த மீட் டிங் முடிகிறது. இதற்கு திருத்தங்களை நான்கு நாட்களுக்கு முன்னதாகவே கொடுத்து விட்டோம். இது வரையில் அதைப் பற்றி பரிசீலனை செய்திருப்பார்கள். அதனால் எங்களுடைய திருத் தங்களை ஏற்றுக்கொள்ளா விட்டாலும் சர்க்காரே திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றலாம். ஆகவே இதை செலெக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டியதில்லை. இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதா ஏற்கனவே காலம் தாழ்ந்து வந்திருப்பதால் இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

MR. SPEAKER: I hope the House will pass this Bill today. I have in my list five more names of hon. Members who wish to take part in the discussion. If we proceed at the present rate, I am sure we may have to sit beyond the 12th instant also. So, I would like to have some guidance from the House as to the time required for general discussion, for clause by clause consideration, for the Minister's reply to the discussion, etc.

SRI S. LAZAR: Sir, there need not be any restriction

MR. SPEAER : The hon. Member may feel that there need not be any restriction. But I have to conduct the business of the House within the time allotted. We have to adjourn at 5 o' clock. There are two or three more Bills to be considered. Five more hon. Members have expressed their desire to take part in the general discussion on the Bill. So, it is better we come to some agreement as to the time required for general discussion on the Bill under discussion, the time required for the Hon. Minister to reply, and the time required for the clause by clause consideration. Shall I place a time-limit on the speeches? I should therefore like to have some guidance from the House on these matters.

SRI V. S. MANICKASUNDARAM : After all, there many not be many Members who wish to speak on this Bill, Sir.

MR. SPEAKER : The hon. Member is sadly mistaken. There are five more hon. Members who wish to take part in the discussion.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I thought that many Members may not speak on this Bill. But, you say that there are five more Members to speak. I think, these Members may not speak very long and that they will be very brief. My reply will be very short and so we will be able to finish the consideration of the Bill today.

MR. SPEAKER : I have got these five names in my list. They are, Sri Manickasundaram, Sri Nallasivam, Sri Muthukumaraswamy, Srimathi T. N. Anandanayaki and Sri S. M. Annamalai. None of these Members are likely to make short speeches. Already, hon. Member Sri Srinivasa Iyer has taken a very long time. Normally, I would not have intervened. But, in view of the fact that we have to rise at 5 o' clock, in view of the fact that there are two or three more Bills for consideration and also in view of the fact that hon. Member Sri Srinivasa Iyer has taken a fairly long time, I thought I must interfere. After general discussion on the Bill, we will have to consider it clause by clause. I would appeal to the hon. Members who will be taking part in the discussion, to keep all these factors into account and be brief. That is all I wish to say.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, in view of the fact that hon. Member Sri Srinivasa Iyer has spoken in detail, I wish to adjust myself to the time available and so I do not propose to speak on the Bill.

MR. SPEAKER : That is splendid. I wish there are more such offers.

SRI V. S. MANICKASUNDARAM : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த ஷெட்யூலில் கண்ட பகுதியாகிய லோயர் பவானி ப்ராஜெக்ட் ஏரியாவிலிருந்து வரக்கூடிய நாங்கள் இம் மாதிரியான ஒரு சட்டம் வேண்டும் என்று நான் சட்டசபை

11th September 1959] [Sri V. S. Manickasundaram]

அங்கத்தினராக வந்த நாள் முதற்கொண்டு அதற்காக பாடுபட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகையால் இந்தச் சட்டத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். ஆனால் ஆதியிலிருந்து இந்தச் சட்டம் எந்த முறையில் அமைய வேண்டும் என்று விரும்பினேனோ அந்த முறைக்கு மிகவும் பின் தங்கி இருக்கிறது என்பதை கூறிக் கொண்டு அதில் பல துறைகளில் முன்னேற்றம் காண வேண்டும் என்று அந்தப் பகுதி அங்கத்தினர்களுடைய சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் அரசாங்கத்தை பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியாகிய லோயர் பவானி பகுதியில் வாய்க்கால் வெட்டுகிற விஷயத்தில் பெரிய காலதாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் வேறு ஒருவர் காட்டு வழியாக ஒருவருக்கு தண்ணீர் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதற்கு அவர் அரசாங்கத்தினிடம் விண்ணப்பம் கொடுத்தால் அதில் யார் காட்டு வழியாக தண்ணீர் வரவேண்டியதாக இருக்குமோ அவருடைய காட்டை ஆர்ஜிதம் செய்து வாய்க்கால் வெட்டிக்கொடுக்க வேண்டும். அப்படி விண்ணப்பங்கள் வந்தால் அரசாங்கம் நில ஆர்ஜித சட்டப்படி நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு பல இஞ்சினியர்கள் மூலமாக செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. அதன் பிறகு அந்த வேலை பூர்த்தி அடையாமல் இருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து வரக்கூடியவர்கள் பிரத்யட்சமாகக் கண்ட ஒரு விஷயம் இது. ஆனால் இந்த நில ஆர்ஜித சட்டம் சம்பந்தமாக ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யர் அவருடைய ஊரைப்பற்றி சொன்னார். அங்கே விண்ணப்பங்கள் போட்டு விட்டால் ஆறு மாதத்திற்குள்ளாக, இன்னும் முயற்சி எடுத்துக்கொண்டால் மூன்று மாதத்திற்குள்ளாக வாய்க்காலை வெட்டி விடலாம் என்று சொல்லுகிறார். அதைக் கேட்க ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அதனால் தஞ்சையிலுள்ள அதிகாரிகளை எங்கள் பகுதிக்கு மாற்றினால் ஒருக்கால் அவர் சொல்கிறபடி நடக்குமோ என்று கூட தோன்றுகிறது. அப்படி மாற்றினாலும் தேவலை என்று தோன்றுகிறது. 1956-ம் வருஷம் இந்த ஷரத்துப்படி சுற்றறிக்கை விட்டு அதற்குள்ள தொகை அரசாங்கத்தினிடம் கொடுத்து, கஜானாவில் கட்டியும் அவர்கள் வாய்க்காலை வெட்டிக் கொடுக்க தயாராக இருந்தும் இன்று வரைக்கும் வாய்க்காலை வெட்டியிருக்கிறார்களா என்றால் யார் வெட்டுகிறார்கள் என்ற நிலைமையில் இருக்கிறது. இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவ்விதம் ஏற்பட்டிருந்தும் கூட அப்படிப்பட்ட காலதாமதத்தை நீக்குவதற்கு ஏதாவது இந்தச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது வருந்தத்தக்கதாகத்தான் இருக்கிறது.

இந்தச் சட்டத்தை படித்த நிமிஷம் முதற்கொண்டு சில ஷரத்துக்களைப் பார்த்தது முதற்கொண்டு அதில் பல ஷரத்துக்களை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று தோன்றிற்று. அது

[Sri V. S. Manickasundaram] [11th September 1959

சம்பந்தமாக ஆயக்கட்டு சம்பந்தமாக டெபனிஷன் கொடுக்கப் பட்டிருப்பதைப் பார்த்ததால், அதில்—

"which have been registered as lands entitled to irrigation under that irrigation work by any authority or officer authorized by the Government"

என்று போடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கம் கொஞ்சம் யோசனை செய்து அந்த ஷரத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். "பைனல் அதாரிடி" என்ற வாசகத்தை யோசனை செய்து அரசாங்கம் சட்டத்தின் ஷரத்தாக சேர்க்கவேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆயக்கட்டிலே சேர்க்கும்போது, லோயர் பவானி இறிகேஷன் ஸெஸ் ஆக்டில் அமைந்திருக்கும் நிலைமையை மனதில் கொண்டு பார்க்கும்போது, அம்மக்களை ஆயக்கட்டு ரிஜஸ்தரில் சேர்க்கும் போது குடிகளைக் கேட்டுக்கொண்டோ அவர்கள் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டோ செய்வது கிடையாது. அந்தப் பூமி தண்ணீர் பாயக்கூடியது சாத்தியம் இருக்கிறதா, 'பிஸிகல் பீச்சர்ஸ்' சரியாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். 'எண்டைடில்டு இறிகேஷன்' என்ற பதத்தை சட்டசபை தீர்மானிக்கும் பட்சத்தில் எவ்வளவு பொறுப்பு நம்முடைய தலைமேல் விழுகிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, மூன்றுவது ஷரத்தில் பல வகைக் கருத்துக்கள் தெளிவாக்கப்பட வேண்டியிருக்கின்றன. மூன்றுவது ஷரத்து போன்று அவசியம் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து. இரண்டொரு வார்த்தைகள் தெளிவாக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம்.

"any owner should construct or dig field bothies in relation to his land in the ayacut of an irrigation work".

என்று இருப்பது, திருவாளர் ஆர். ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொன்னதைப்போல, "லாண்ட்ஸ் பெனிபிடெட்" ஆனவர் யார் என்பது தெளிவாக்கப்படவேண்டும். மற்றொருவர் காட்டுக்குப் போகும் வாய்க்காலை என்னை வெட்டச் சொல்வது பொருத்தம் இருக்காது. நில ஆர்ஜிதச் சட்டத்தைக் கொண்டு வாய்க்கால் வெட்ட வேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. என்னுடைய காட்டு வழியாகவோ புறம்போக்கு நிலத்து வழியாகவோ நான் வாய்க் கால் வெட்ட வேண்டிய அவசியம் ஏற்படும்போதுதான் இந்த செக்ஷன் பெருவாரியாக வரும் என்று எண்ணுகிறேன். அம்மாதிரி இருக்கும்பட்சத்தில் அதைத் தெளிவாக்கவேண்டியது மிகவும் அவசியம். அம்மாதிரி தெளிவாக்கவேண்டிய அவசியம்

11th September 1959] [Sri V. S. Manickasundaram]

இருக்கும்போது, இம்மாதிரி ஷரத்து இருக்கவேண்டியது அவசியம். வாய்க்கால் வெட்டாமல் இருப்பது இரண்டொரு காரணங்களுக்காக விட்டிருக்கிறார்கள்.

நான்காவது ஷரத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 'பெனல்டி' இருப்பதைப்பற்றி பரவாயில்லை. இது பெனல்டி ஆகாது. பாறை, மேட்டுப்பாங்கான நிலங்களை ஆயக்கட்டு ரிஜிஸ்தரில் வைத்துக்கொண்டு, எங்கள் பகுதியில் ஐந்நூறு வருஷங்களாக தண்ணீர் வராமல் இருந்தும் வரி வசூல் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஒரு 'ஓனர் ஆப் லாண்டு' தன்னுடைய வாய்க்காலை தண்ணீர் பாய முடியாத நிலைமையில் தண்ணீர் வந்தாலும் வெள்ளாமை எடுக்க முடியாத நிலைமை இருக்கும் காரணத்தால் அவைகளை ஆயக்கட்டிலிருந்து நீக்குவதற்கு ஒரு ஷரத்து இருக்க வேண்டியது அவசியம். அனுபவ ரீதியாகப் பார்க்கும்போது கீழ் பவானி பகுதியிலே எந்தக் காரணத்தைக் கொண்டு, குட் அண்டு வாலிட் ரீஸன்ஸ் இருந்தாலுங்கூட, ஆயக்கட்டை விட்டு நீக்க முடியாது என்று தெரிவிப்பதால் ஆயக்கட்டை விட்டு நீக்க வேண்டிய ஷரத்து இருக்க வேண்டியது அவசியம் என்பது என்னுடைய நம்பிக்கை. ஆயக்கட்டை விட்டு நீக்குவது மட்டும் போதுமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். எது எப்படியிருந்தபோதிலும் "பெனல்டி" என்ற வார்த்தை பொருத்தமாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அந்த வார்த்தையை நீக்கி விட்டு வேறு வார்த்தையைச் சேர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கனவே தெரிவித்துக்கொண்டபடி 6-வது ஷரத்தைப் பற்றி குறிப்பிடவேண்டுமானால், எங்கள் ஊரிலே மூன்று நான்கு வருஷங்கள் ஆகியும் கூட இதுவரை லாண்டு அக்விஸிஷன் ஆக்ட் அப்ளை செய்யப்படாமலும், ஒரு காடு கூட இதுவரை ஆர்ஜிதம் செய்கின்ற நிலைமைக்கு வருவது கிடையாது. பணம் வசூல் பண்ணி, இவ்வளவு ரூபாய் கட்டவேண்டுமென்று நிர்ணயம் செய்து, பணம் வசூலிக்கப்பட்டு மூன்று வருஷங்கள் ஆகியும் இன்னும் ஒரு அங்குலம் கூட நில ஆர்ஜிதம் விஷயமாக நகராமல் இருப்பதை நீக்குவதற்கு இந்தப் பிரிவில் எந்தவிதமான ஷரத்தும் இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது. கண்டிப்பாக 'எமெர்ஜென்ஸி ப்ரொவிஷன்ஸ் ஆப் தி லாண்டு அக்விஸிஷன் ஆக்ட்'ஐ சேர்ப்பதற்காக ஒரு ஷரத்து இருக்கவேண்டும் என்றும், இன்ன காலவரைக்குள் லாண்டு அக்வையர் செய்யப்பட்டு வாய்க்கால் வெட்டப்பட வேண்டுமென்று ஒரு வரையறை ஏற்படுத்தவேண்டுமென்றும் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இல்லாத பட்சத்தில் இந்தச் சட்டம் உருவாக்குவதால் நமக்கு எந்தவிதமான பிரயோஜனமும் ஏற்படாது என்பதுதான் என்னுடைய பணிவான நம்பிக்கை. பணத்தை கட்டும் பட்சத்தில் மூன்று வருஷங்கள் ஆனவுடனே நாங்கள் வாய்க்கால் வெட்டிக்கொடுக்கிறோம் என்று ஏற்படுத்தியிருந்த நிலைமையையும் இதுவரை லாண்டு அக்விஸிஷன்

[Sri V. S. Manickasundaram] [11th September 1959

ஆக்ட் அப்ளை செய்யப்பட்டாலும், ஆர்ஜிதம் செய்து வாய்க்கால் வெட்டிக் கொடுக்கப்பட்டாலும், அது சட்ட விரோதமானதல்ல என்று மந்திரி அவர்கள் கவனித்துக்கொள்ளவேண்டும். 6-வது ஷரத்தில்—

"It shall be lawful for the Government to construct or dig field bothies on any land belonging to them or acquired by them"

என்று இருப்பதால், நாம் இதுவரையில் இருந்ததைவிட ஒரு அணு அளவு கூட முன்னேறவில்லை. **It shall be lawful for the Government** என்று இருப்பது போதாது. வாய்க்காலை வெட்டிக்கொடுத்தாக வேண்டும் என்ற ஒரு வரையறை ஏற்படுத்துவது மிகவும் அவசியம். பொதுவாக நோக்கும்போது இதற்காகச் செலவிடும் பணத்தை அரசாங்கம் குடிகளிடமிருந்து வசூல் செய்யவேண்டுமென்றும், "லாண்டு பெனிபிடெட்" யாருக்கு ஆயக்கட்டு இருக்கிறதோ அவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்யவேண்டும் என்று சொல்வதும் என்னுடைய புத்திக்குப் பொருத்தமற்றதாக இருக்கிறது. 25-50 ஏக்கருக்கு மேலே இருக்கிறபோது, அரசாங்கத் துறையிலே வாய்க்காலை வெட்டிக்கொண்டு, 25 ஏக்கருக்கு உட்பட்டு தாங்கள் சொந்த செலவில் நிலத்துக் கிரயத்தைக் கொடுத்து, வாய்க்காலைத் தங்கள் செலவிலே வெட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொல்வது சோஷலிச பாட்டர்ன் ஆப் சொஸைட்டியை ஏற்படுத்தப்போகிறோம் என்று சொல்கிறவர்களுக்கு அது பொருந்துமா என்பதை மிகப் பணிவுடன் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எல்லாவற்றையும்விட முக்கியமான ஆட்சேபனை ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் அப்ளையாகும் என்று சொல்வது நல்லதல்ல. வேலை நடந்ததா? இல்லையா? ஏன் ரெவினியூ ரிக்கவரி ஆக்ட் அப்ளையாகும் என்றால் உடனே மாடு கன்றுகளை ஜப்தி பண்ணுவதுதான் நடக்கும். ஸிவில் ப்ராஸஸிலே ரிக்கவர் பண்ணுவதுதான் நல்லது என்று பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். லாண்டு அக்விஸிஷன் ஆக்ட் அப்ளைபண்ணிச் செய்வதுதான் நல்லது என்று நினைக்கிறேன். லாண்டு அக்விஸிஷன் ஆக்ட் அப்ளை பண்ணுகிற வரையிலும், சட்டபூர்வமான ஆட்சேபணை இதுவரையில் இருந்து வந்தது. கவர்ன்மென்ட் நிதியிலிருந்து பணம் வந்தாலொழிய லாண்டு அக்விஸிஷன் ஆக்ட் அப்ளை பண்ண முடியாது என்ற நிலைமையை இதுவரையில் மறந்து விட்டுத்தான் செய்து வந்தார்கள் எங்கள் பகுதியில். ஒரு அணுவாவது கவர்ன்மென்ட் ட்ரஷிரியிலே லாண்டு அக்விஸிஷன் ஆக்ட் அப்ளை ஆகாது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எதற்கும் இதில் எந்த விதமான வகையும் செய்யப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது.

இத்தனை குற்றங் குறைகள் இருக்கும் மசோதாவை ஒரே ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு, இப்பொழுது அவசரப்பட்டு நிறைவேற்றிவிட்டால், பின்னால் நமக்கு இதிலே ஏற்படக்கூடிய குற்றமே நமக்கு இடைஞ்சலுக்கும் தொல்லைகளுக்கும் ஏதுவாக

இருக்கும் காரணத்தால் தயவு செய்து இதிலே அக்கறை கொள்ளக்கூடிய அங்கத்தினர்களைக்கொண்டு ஒரு ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, நுணுக்கமாக பரிசிலனை செய்து, எவ்வளவு சீக்கிரத்திலே நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலே நிறைவேற்றி, நிர்ப்பந்தமாக அரசாங்கம் இந்த லாண்டு அக்விஸிஷன் ஆக்டை அப்ளை செய்து, இடைஞ்சலாக இருப்பவர்களுக்கு இடைஞ்சலை நீக்க வகை செய்து கூடிய சீக்கிரத்தில் வாய்க்கால்கள் வெட்டிக்கொடுக்க வகை செய்யவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

SRI K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால், இதைத் தாமதப்படுத்தவேண்டும் என்பதற்காக அல்ல. இந்த மசோதா விஷய அட்டவணையில் வந்தபோதே இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட்டு, இரண்டு மூன்று நாட்களிலே சம்பந்தப்பட்டவர்களை வைத்து முடித்துவிட முடியும் என்ற நோக்கத்தோடுதான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்தேன். ஏதோ சிறிய மசோதா மிகச் சுலபமாக நிறைவேற்றிவிட்டால் காரியம் நடக்கும் என்று எதிர்பார்ப்பது சரியானது அல்ல. இந்த மசோதா இன்றைக்கு இருக்கும் நிலைமைப்படியே நிறைவேறுமானால், எனக்குத் தெரிந்தவரையில், இது நிச்சயமாக எப்படி நில ஆர்ஜிதச் சட்டபடி எப்படி வாய்க்கால் வெட்டவேண்டுமென்று இருந்தாலும், நில ஆர்ஜிதச் சட்டப்படி விண்ணப்பம் போட்டு இரண்டு மூன்று வருஷங்கள் ஆகின்றதோ அதே கதிதான் இதற்கும் வருமோ என்று நான் ஐயப்படுகிறேன். அது எப்படி என்று கேட்கலாம். கலக்டர் நோட்டீஸ் அனுப்பி, அதற்கு மேல் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தாலும், அதன் பேரில் யாரும் தக்க நடவடிக்கை எடுப்பதில்லை. இவ்விதமெல்லாம் பல வழிகள் இருந்தாலும்கூட கனம் சீனிவாச அய்யர் சொன்னது போல் இருபது முப்பது வருடங்களாக சரியானபடி இன்னும் எல்லா இடங்களிலும் "பீல்ட் போத்தீஸ்" ஏற்படவில்லை. இப்போது இருக்கின்ற நிலைமையை எடுத்துக்கொண்டுப்பார்த்தால் ஐந்தில் ஒரு பங்குதான் சீர்பட்டிருக்கிறது. அதாவது மொத்தம் இரண்டு லட்சம் ஏக்கர்கள் இருக்கிறது என்றால் அதில் ஐந்தில் ஒரு பங்குக்கு தான் பாசன வசதிகள் சரியான முறையில் இருக்கும். மீதியுள்ளவர்கள் எல்லாம் மேலேயிருக்கின்றவர்களின் தயவைத்தான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. கீழ்பவானி பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், சரியானபடி நில ஆர்ஜித சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் தான் இந்த பாசன வசதிகள் சரியான முறையில் கிடைக்கும் என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் திருப்தி செய்யக்கூடிய வகையில் இது அமைந்திருக்கிறது என்று நம்புகிறேன். உண்மையிலேயே அங்குள்ள பலர் இதைப்பற்றி ஆட்சேபிப்பார்கள். இதிலுள்ள உட்கருத்துக்களைப்பற்றி பல நண்பர்கள் சொன்னார்கள். நான்காவது பிரிவில், சொல்லப்பட்டிருப்பதைப்பார்த்தால், யார் 4 p.m.

பாசன வசதிகளை செய்து கொடுக்கவில்லையோ அவர்களை ஆயக் கட்டிலிருந்து நீக்கிவிடுவது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக ஒன்றிரண்டு பேர்களைதான் நீக்க முடியுமே தவிர அங்கிருக்கின்ற ஒரு பெரிய பகுதியை இதனால் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே இதை சரியான முறையில் நடத்த வேண்டுமானால் நில ஆர்ஜிதத்தைத் தவிர வேறு வழி ஒன்றுமில்லை. ஆகவே நான் இப்போது இருப்பதைப்பற்றியெல்லாம் விரிவாக பரிசிலனை செய்து அடுத்த சட்டசபை கூட்டத்திற்குள்ளாகவே செலக்ட் கமிட்டி மூலமாக பரிசிலனை செய்து அதில் வேண்டுமென்றால் பல திருத்தங்களை செய்து நிறைவேற்றினால் இதனுடைய நோக்கம் நிறைவேறுமே தவிர இப்படியே இருந்துகொண்டிருக்குமானால், அரசாங்கம் எதிர்பார்க்கின்ற பலன் கிட்டாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதில் 3-வது பிரிவில்,

" . . . any owner should construct or dig field bothies in relation to his land . . ."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அந்தந்த நிலத்திற்குரியவர் அவர்கள் பக்கத்திலுள்ள பாசன வசதிகளுக்கு வேண்டிய நிலத்தை விட்டுக்கொடுக்கவேண்டும், வாய்க்காலை வெட்ட வேண்டிய தேவையில்லை, நிலத்தை மட்டும் விட்டுக்கொடுத்து விட்டால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் இம் மசோதா பிரகாரம் 12 அடிக்கு குறைவாக ஆர்ஜிதம் செய்ய முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள நிலையில் ஒரு கொப்பு வாய்க்கால் வெட்டவேண்டுமென்றால், ஐந்து அடி அல்லது நான்கு அடி நிலம் விட்டுக்கொடுத்தால் போதுமானதாக இருக்கலாம். ஆகவே இதை திருத்தி நான்கு அடி அல்லது ஐந்து அடி நிலம் விட்டுக் கொடுப்பதற்கும் இதில் வழியிருக்க வேண்டும். அந்த முறையில் இப்போது இதில்,

" . . . the owner to construct or dig field bothies in relation to that land."

என்றிருக்கிற இடத்தில் ஐந்து அடி நிலத்தை கொடுக்கவேண்டுமென்றாலும் அதற்கும் வழியிருக்கின்ற முறையில் இதை திருத்த வேண்டும். மேலும் இதில் நான்காவது பிரிவில் சொல்லப்பட்டிருப்பது போல் இதற்கு வசதி செய்து கொடுக்காதவர்களை ஆயக் கட்டிலிருந்து நீக்கிவிடுவது என்றால், அதனால் பெரும் பகுதியினர் பயப்படமாட்டார்கள். ஆகவே இதையெல்லாம் ஆலோசித்து ஒட்டு மொத்தமாக அடுத்த சட்டசபைக் கூட்டத்திற்குள்ளாக திருத்தி அமைத்து கொண்டுவரவேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தம். அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER: இன்னும் நாலைந்து அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த சபை ஐந்தரை மணி வரையிலும் இருக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வளவு பேரும் பேசுவது என்றால் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிவடையாது. சபை அதற்கு மேலும் இருப்ப

11th September 1959] [Mr. Speaker]

தாக சம்மதித்தால் எனக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை. அதற்கு சபை அங்கத்தினர்களும் மந்திரி அவர்களும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the idea is to finish the general discussion and to have clause by clause discussion to-morrow and in the meantime we can have discussion and avoid referring the Bill to a Select Committee.

MR. SPEAKER : There are three more Bills on the agenda, which we will have to finish. Among them the last Bill, the Madras Buildings (Lease and Rent Control) Bill, 1949, is a comprehensive Bill, which is to be referred to a Select Committee. It may require a long discussion and I do not know how many Members want to speak. Members are thinking that I am standing in the way of their participating in the discussion. I am prepared to sit till 6 o' clock or more.

* THE HON. SRI M. A. MANICKAVELU : The point is this. It is not a question of sitting till 6 o' clock. We can have general discussion on this Bill now for a short time. Then the Madras District Municipalities (Amendment) Bill, 1959, may be taken up. The Minister for Local Administration is ready with her Bill.

MR. SPEAKER : Is the Hon. Minister suggesting the postponement of the discussion of clause by clause consideration to tomorrow?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

MR. SPEAKER : Then there is the comprehensive Lease and Rent Control Bill of the Hon. the Minister for Electricity.

THE HON. SRI V. RAMAIAH : I cannot fix any time limit for my Bill.

MR. SPEAKER : We will continue the discussion on the Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959, and then take up the Madras District Municipalities (Amendment) Bill, 1959, and the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1959. If Members are prepared to cut short their speeches on the Buildings (Lease and Rent Control) Bill, I have no objection, because it goes to a Select Committee.

SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டிருக்கும் மசோதாவை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் தஞ்சை ஜில்லாவை பொறுத்த வரையில் நீண்டதோர் பயனை தரும் என்று நான் உறுதியாக கருதுகிறேன். இந்த மசோதாவில், தஞ்சை ஜில்லாவில் குடி மராமத்து சட்டம் என்று ஒன்று இருந்ததையும் சொல்லப்பட்டிருக்கிறது. இது தஞ்சை ஜில்லாவி

ளுள்ளவர்களை தவிர மற்றவர்களுக்கு அனேகமாக தெரியாது என்று நம்புகிறேன். அதாவது குடிகளே வாய்க்கால் போன்றவைகளை வெட்டிக்கொள்வது என்பது தான். இவைகள் முன்பு தான் நடந்து கொண்டிருந்தது. இப்போது அவ்விதம் நடைபெறவில்லை. எப்போது வாய்க்கால் வெட்டவேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போது குடிகள் எல்லோரும் சேர்ந்து வெட்டிக்கொள்வது என்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் இப்போது அந்த வழக்கம் மாறிவிட்டது. காரணம் சுமார் 10 வருடங்களுக்கு முன்னால் எல்லாம் சிறிய சிறிய கிராமங்கள் எல்லாம் பல மிராசுதார்களுக்கும், நிலச்சுவான்தாரர்களுக்கும் சொந்தமாய் இருந்தன. அதோடு அங்குள்ள புறம்போக்கு குளங்களும் அந்தந்த மிராசுதார்களுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் சொந்தமாய் இருந்தன. அதிலுள்ள பாசியை அகற்ற வேண்டுமென்றால் அவ்விதம் அகற்றிவிட்டு, அவைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடுவார்கள். அவர்களும் இந்த மாதிரியான சலுகைகளை பெற்று உடனடியாக வேலைகளையும் செய்து கொண்டிருந்தார்கள். அதன் பின்னால் மிராசுதார்களும் நிலச்சுவான்தார்களும் தாங்கள் கொடுத்து வந்த சலுகைகளை நிறுத்திவிட்டதின் காரணமாக இவர்களுக்குள் மன வருத்தம் ஏற்பட்டது. இதனால் இந்த குடிமராமத்து முறை இப்போது அடியோடு நின்றுவிட்டது. அரசாங்கத்தார் நினைக்கலாம், காவேரியில் அதிகமாக தண்ணீர் போகிறது, அதற்கான வசதிகளை விவசாயிகள் ஏற்படுத்திக்கொண்டு நல்ல முறையில் விவசாயம் செய்யமுடியும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். காவேரி தண்ணீர் அதிகமாக கிடைத்துக்கொண்டிருக்கும். அதனால் நன்றாக விளைகின்றது என்று நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அங்கேயுள்ள கிராமத்திற்குள் புகுந்து பார்த்தால் தான் குடிமராமத்து எல்லாம் நடைபெறவில்லை என்று தெரியும். ஆகவே இப்போது அங்கு குடிமராமத்து ஒன்றும் நடைபெறவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அது ஒரு காலத்தில் நடந்து கொண்டிருந்தது. அந்த காலத்தில் விவசாயிகளும் பல சலுகைகளைப்பெற்று வந்தார்கள். அவர்களும் சந்தோஷமாக தாங்களாகவே வேலைகளை செய்து வந்தார்கள். நான் சிறிய வயதில் ஒரு கதையை கேட்டிருக்கிறேன். தஞ்சையை ஐயாவய்யன் என்ற ஒரு சோழ அரசன் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் மாயவரம் தாலுகாவில், நத்தம் கிராமத்திற்கும், ஆத்துக்குடி என்ற கிராமத்திற்கும் இடையில் ஆறு வெட்ட வேண்டியிருந்தது. அதில் ஒருபக்கம் உப்பனாறு என்றும் மறு பக்கம் ஐயாவய்யனாறு என்றும் சொல்லுவார்கள். அப்போது ஒரு பக்கத்திலிருந்து ஐயாவய்யனாறு வெட்டுவதற்கு ஆட்களிடத்தில் சொல்லும் போது, "ஐயாவய்யனாறு வெட்டு, அவரவர் வீட்டில் சாப்பாடு" என்று சொன்னார்களாம். இவ்விதம் எவ்விதமான கூலியும் இல்லாமல் குடி மராமத்து முறையில் ஆறு வெட்டுதல், வாய்க்கால் வெட்டுதல் போன்ற வேலைகள் எல்லாம் நடந்து கொண்டு வந்திருக்கின்றன. இந்த பாத்தியதை நமக்கு இருக்கிறது என்று விவசாயிகளும் 'மிராசுதார்களும் நம்பிவந்த காலத்தில் அவர்கள் கால்வாய் வெட்டி வந்தார்கள். இன்று அப்படி இல்லை. தஞ்சாவூர் ஜில்லா என்றால் சோழ வளநாடு சோறுடைத்து"

11th September 1959] [Sri M. C. Muthukumaraswamy]

என்று இந்த மாநிலத்தில் எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நானும் பெருமையாக அவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அங்கே சென்று ஊன்றி கவனித்தால் விவசாயிகள் படும் கஷ்டம் தெரியும். வருஷாவருஷம் அரசாங்கத்தின் சொந்தச் செலவில்தான் கால்வாய் வெட்டிக் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. மேலும் இந்த ஆறுகளில் வாய்க்கால் வெட்டும்போது, பெரிய ஆறுகளிலிருந்து வாய்க்கால்கள் பிரியும் போது ஒரு ஆற்றிலிருந்து மற்றொரு ஆற்றுக்குத் தண்ணீர் விடுவதில் ஒரு முறை இருக்கிறது. அந்த முறை நான்கு அல்லது மூன்று நாட்கள் என்று இருக்கும். அந்த முறை கிராம விவசாயிகளுக்குத் தெரியவில்லையானால், தண்ணீர் விடப்படும் காலம் அவர்களுக்குத் தெரியவில்லையானால், ஒரு ஆற்றுத் தண்ணீரை மறித்து அதை மற்றொரு ஆற்றுக்குத் திருப்பும்போது, அவசியமில்லாத இடங்களில் தண்ணீர் விடப்பட்டால் அங்கே தண்ணீர் வீணாகப் போகிறது; தண்ணீர் வீணாகக் காய்ந்துபோகிறது. விவசாயிகள் அனுபவபூர்வமாகக் கூறும் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆடி மாதத்தில் நிலத்தில் வெடிப்புகளில் காற்றுப் புகுந்தால் நிலத்திற்கு உண்டான கர்ப்பம் போய்விடும், அறுவடையில் பலன் அதிகமாக இருக்காது என்று சொல்வது உண்டு. அதைவிட மோசமானது தண்ணீர் வீணாவது. எனவே ஒரு ஆற்றிலிருந்து மற்றொரு ஆற்றுக்குத் தண்ணீர் திருப்பும்போது ஆங்காங்கே லஸ்கர்கள் மூலம் அந்த அந்த கிராம மக்களுக்கு அதை முன் கூட்டியே தெரிவித்தால் மக்கள் ஜாக்கிரதையாக அந்த அந்த நிலங்களுக்கு தண்ணீரைப் பாய்ச்சுவார்கள். இதை அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் ஜில்லாவைத்தான் மற்ற ஜில்லாக்களெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கின்றன. அங்குள்ள பூமி நன்றாக விளையும் பூமி தான். ஆனால் மேட்டூர் அணையை காலத்தில் திறந்தால் தான் நன்றாகச் சாகுபடியாகும். 100 அடிகள் அல்லது 105 அடிகள் மட்டத்திற்கு தண்ணீர் வந்தபிறகு அதைத் திறந்து விடுவதாயிருந்தால் பஸ்ட் க்ராப்—குறுவை—அறுவடையாக தாமதம் ஆகின்றது. இந்த வருஷம் தஞ்சாவூரில் குறுவை காலம் கடந்து முடிந்து, இப்போதுதான் சம்பா ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எதையும் காலாகாலத்தில் செய்தால் நன்றாக இருக்கும். குடி மராமத்து செய்யப்படாத வாய்க்கால்களை அவசியம் அரசாங்கம் வெட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது எல்லோரும் மசோதாவின் மீது பொதுவாகப் பேசுகிறார்கள். இது பொது விவாதம். திரும்பத் திரும்பப் பேசுவது பொது சமாசாரம். முக்கியமாக பல திருத்தங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. பல திருத்தங்களை கவனிப்பதாக ஒத்துக்கொண்டேன். எனவே அதற்கு போதிய நேரம் தேவை. இப்போது பொதுவிவாதத்தை நிறுத்திவிட்டு பிரிவு வாரியான விவாதத்தை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன்.

[Sri M. A. Manickavelu] [11th September 1959

பிரிவு வாரியான விவாதத்தில் கூட கனம் அங்கத்தினர்கள் விரிவாகப் பேசலாம். எனவே இப்போது பொது விவாதத்தை நிறுத்தலாம் என்றும் பொது விவாதத்திற்கு இப்போது பதில் சொல்ல விரும்புகிறேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister suggests that I put a stop to the discussion. I suppose the House is in favour of it.

HON. MEMBERS : Yes, Sir.

*THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை அரசாங்கம் எடுத்துநடத்துவதன் நோக்கம், விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்துதரவேண்டும் என்பது தான். இத்திட்டங்களுக்கென லட்சக்கணக்கான ரூபாயும் கோடிக்கணக்கான ரூபாயும் செலவிடப்படுகிறது. அப்படி அவ்வளவு பணம் செலவழித்து நீரைத் தேக்கிய பிறகு அதை உபயோகிக்க வேண்டிய காலத்தில், கடைசி கட்டத்தில், யாராவது ஒருசிலர் கால்வாய் வெட்டாமல் இருந்தால் இந்தத் திட்டங்கள் பிரயோஜனமில்லாது போய்விடும். இந்தத் திட்டங்களை சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று எஞ்சினீயர்களிடம் சொல்லியிருக்கிறோம். ஆனால் எஞ்சினீயர்களோ ஒரு வருஷம், இரண்டு வருஷம் முன்னதாகவே, அதாவது ஷெட்யூல்ட் காலத்திற்கு முன்னதாகவே இவைகளை முடித்திருக்கிறார்கள். அப்படி இருக்க, ஒரு சின்ன வேலை செய்யப்படாததால், ஒரு சின்ன 'போதி' வெட்டப்படாததால் திட்டம் பிரயோஜனமில்லாமல் போய்விடக்கூடுமென்றால், அதை எப்படியாவது தவிர்க்க வேண்டும். தண்ணீரை உபயோகிக்கக்கூடிய நிலை வந்த பிறகு அதை உபயோகிப்பதில் தடங்கலோ தவக்கமோ இருக்கக்கூடாது. எல்லோரும் தண்ணீரை உடனடியாக உபயோகிக்கவேண்டும். அதற்கு தட்டுத் தடங்கல்கள் இருந்தால் சட்டத்தின் மூலம் அவைகளை நீக்க வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் கருத்து. எனவே இந்த மசோதாவை அவசரமாக நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இதை பொறுக்குக் கமிட்டிக்கு விட்டால், இன்னும் மூன்று, நான்கு மாதங்கள் தாமதம் ஏற்படும். இதைப் பொறுக்குக் கமிட்டிக்குக் கொண்டுபோய் அங்கே அவசர அவசரமாகப் பரிசீலிக்க வேண்டியதில்லை. அந்த நோக்கத்துடன் தான், இதற்கு அவசியமான எல்லாத் திருத்தங்களையும் தகுந்த முறையில் இங்கேயே இதில் புகுத்த ஒத்துக்கொண்டேன். பொறுக்குக் கமிட்டிக்கு இதைக் கொண்டுபோக வேண்டுமென்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மசோதாவை இங்கேயே நல்ல முறையில் திருத்துவதற்குத் தயாராயிருக்கிறேன்.

வாய்க்கால் வெட்டத் தவறுபவரின் நிலத்தை ஆயக்கட்டிலிருந்து நீக்க வேண்டும் என்ற ஷரத்தை எடுத்துவிட வேண்டும், அது உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு அனுகூலமாக இருக்காது என்று சொன்னார்கள். இது, பேருக்கு பயம் கொடுப்பதற்காக இந்த மசோதாவில் இருக்கிறது. ஒவ்வொரு மசோதாவிலும் ஒரு பயம்—பெனல்டி க்ளாஸ்—இருக்க வேண்டும். பெனல்டி க்ளாஸ் இல்லாத சட்டம் நல்ல சட்டமில்லை. கால்வாய் வெட்டத் தவறு

11th September 1959] [Sri M. A. Manickavelu]

பவருடைய நிலத்தை உடனே இந்தப் பிரிவின்படி ஆயக்கட்டிலிருந்து நீக்கிவிடமாட்டார்கள். 3-வது பிரிவுப்பிரகாரம் ஒரு விவசாயி தான்செய்ய வேண்டியதைச் செய்யாவிட்டால், 6-வது பிரிவுப்பிரகாரம் கால்வாய் அரசாங்கத்தால் வெட்டப்படுவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. 3-வது பிரிவுப் பிரகாரம் ஒரு விவசாயி நடக்காவிட்டால் உடனே 4-வது பிரிவில் கைவைக்க வேண்டுமென்பதில்லை. எனவே நடைமுறையில் 3-வது பிரிவுப் பிரகாரம் ஒரு விவசாயி நடக்காவிட்டால் 6-வது பிரிவுப்பிரகாரம் நீர்ப்பாசனத்திற்கு வழிதேடுவார்களே தவிர நிலத்தை ஆயக்கட்டிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்பது நோக்கமாக இருக்காது. ஆகவே 3-வது பிரிவினால் கெடுதி ஏற்படாது.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ. ஜெகன்னாதன் இன்று சமாதானமான முறையில் பேசினார். மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டாம் என்று அவர் சொன்னார். சாதாரணமாக அவர் எதிர்க்கும் முறையில் பேசுவார். இன்று அவர் மசோதாவை நன்றாகப் படித்துப் பார்த்துவிட்டு, அதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டாம் என்றும், பெனல்டி க்ளாஸ் இருக்க வேண்டியது தான் என்றும் பேசினார்.

எல்லாம் கிராம மக்கள் ஐக்கியமாக இருப்பதைப் பொறுத்துத் தான் இருக்கிறது. எல்லாவற்றையும் சட்டத்தாலேயே செய்ய முடியாது. பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக கிராம மக்களிடையே விரோதம் ஏற்பட்டு பல கெடுதல்கள் ஏற்படக்கூடுமானால் அதைத் தடுக்க நாம் என்னசெய்வது? பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக ஒரு நிலச்சொந்தக்காரருக்கும் இன்னொரு நிலச்சொந்தக்காரருக்கும் விரோதம் என்றால் ஒருவர் இன்னொருவர் நிலத்தில் மாட்டைவிட்டு பயிர்களை அழிக்கக்கூடும். ஒருவர் இன்னொருவர் நிலத்திலுள்ள மகசூலை இரவோடு இரவாக அறுத்துக்கொண்டு போய் விடுவார். இதெல்லாம் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் கிராம மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். இதற்கெல்லாம் சட்டம் வேண்டுமென்று சொல்ல முடியாது. கூடியவரையில் பெரிய விஷயங்களுக்காகத் தான் சட்டம் செய்ய முடியும்.

அப்பீல் விஷயத்தில் 30 நாட்கள் போதாது என்று சொன்னார்கள். போதாது என்று சொன்ன அங்கத்தினருக்கே தெரியும் அநேகமாக எல்லா சட்டத்திலும் 30 நாட்கள் தான் போடுவது வழக்கம் என்பது. இன்னும் சொன்னால் பல சட்டங்களில் 15 நாட்கள் தான் இருக்கின்றது. இதை குறைக்க காரணம் இருக்கிறதே தவிர அதிகப் படுத்த காரணம் ஏதும் இல்லை. இந்த 30 நாள் என்பது ஆர்டர் ஸர்வ் ஆனதிலிருந்து தான். அதில் கிட்டத்தட்ட 10 நாள் லாபம் கிடைக்கும். அதற்குப் பிறகு கால தாமதமாக வந்தால் கூட அனுமதிக்கலாம் என்று இருக்கும்போது அதை மாற்றவேண்டிய அவசியம் இல்லை.

விவசாய விஷயத்திலே அநேக தகராறுகள்—கஷ்டங்கள்—இருக்கின்றன. சட்ட பூர்வமாக எததற்கு பந்தோபஸ்து செய்ய முடியுமோ அதற்குத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதிலே அங்கத்தினர்கள் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் பரிசீலனை செய்து எந்தெந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளலாம் என்று பார்த்து, தக்கபடி மாறுதல் செய்து இந்த மசோதா நல்லபடி இயங்க எப்படி செய்ய வேண்டுமோ அப்படி செய்யலாம். அதற்காகத் தான் எல்லோரோடும் கலந்து பேசி எந்தெந்த திருத்தங்களை ஒத்துக்கொள்ள முடியுமோ அவைகளை ஒத்துக்கொள்ளலாம் என்று இந்த பொது விவாதத்தை இதோடு நிறுத்திக்கொண்டு, பிரிவு வாரியாக விவாதம் செய்வதை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அடுத்தபடியாக மற்ற மசோதாக்களை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. R. NALLASIVAM : I withdraw my amendment, Sir.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

That the Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959, be taken into consideration.

The motion was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move---

That the clause-by-clause consideration of the Bill be taken up on 12th September 1959.

MR. SPEAKER : The question is—

That the clause-by-clause consideration of the Bill be taken up on 12th September 1959.

The motion was put and carried.

MR. SPEAKER : Sometimes I am surprised at the inconsistency of members. I had a member a few minutes ago who accused me of using dictatorial powers to finish the business of the House. He has promised to get me fifty signatures to-morrow morning requesting that the further consideration of this Bill be postponed. I am saying this openly, because I do not want to give the impression that I am using dictatorial powers to stop discussion in this House. I told the hon. Member that he would be wiser to talk to his own leaders and whip and get more time allotted and not accuse the Speaker of using dictatorial powers. I may tell the House that I am awaiting the hon. Member to implement what he has said and get me fifty signatures to-morrow morning. Then I shall openly say that I agree to adjourn the business to another day. I shall use all my powers and prevent further discussion to-morrow.

SRI P. S. CHINNNADURAI : May I know, Sir, who is that member?

MR. SPEAKER : If the hon. Member fails to do it, I will mention his name to the hon. Member.

(3) THE MADRAS DISTRICT MUNICIPALITIES (AMENDMENT) BILL, 1959.

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras District Municipalities (Amendment) Bill, 1959 [a], and move—

That the Bill be taken into consideration.

Sir, one of the provisional conclusions of the Government regarding municipalities in the 'White Paper on the Reform of Local Administration in the Madras State' is that provision should be made for the constitution of Townships for municipal areas, where townships are considered necessary. In certain areas which are now governed by the Madras District Municipalities Act, 1920, the ordinary pattern of municipal administration is found to be unsuitable. At the same time some arrangements have to be made for the civic administration of such areas so as to be adapted to the special conditions and needs of such areas. It is, therefore, proposed to take power for the declartion to be a township of any municipality or any specified area therein if it is an industrial, labour, or institutional colony or health resort and for the constitution of township committees for such areas declared as township. The provisions made in the Bill will obviate the need for undertaking special legislation every time it is proposed to constitute township committees of a pattern different from the ordinary pattern of municipal organisation. In order, however, to ensure that the Legislature retains an opportunity of satisfying itself about the suitability of the special arrangements for civic administration for such areas, it has been provided that the Government should declare any municipality or any specified area therein to be a township only if a specific motion is passed to that effect by both Houses of the Legislature; it is further provided that for each such excluded area a separate township committee shall be constituted on the basis of suitable adaptation of the relevant provisions of the Madras District Municipalities Act, 1920, so as to suit the special circumstances which necessitate the declaration of the area to be a township.

